
www.tamilarangam.net

செப்டெம்பர் 1996


# எரிமலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓரிரவில்
வெறுங்கையனாய் வெளியேறி
தெருவிலிறங்கினேன்.
ஏதும் எடுக்கிலேன்.
சூரியதேவே
என் ஊர்மேல் உலவில்
விட்டுப்பிரிந்த என் வீட்டு முற்றத்தில்
கட்டிய தலைவாசற் கூரைக்கிடுகின் கீழ்
எடுக்கத் தவறிய திறப்பிருக்கும்
கொண்டு வருக,
அது என் பூட்டனின் பெட்டகச்சாவி,
பரம்பரைக்குரிய காணி உறுதிகள்.
காளியம்மனின் மேனி நகைகள்
கலை வந்தாடிய போதில்
என் பேத்தியெடுத்துப் பேய்விரட்டிய
வெள்ளிச் சிலம்பு,
தண்டையும்; வாளும்.
செஞ்சந்தனக் கைப்பிரம்பு,
அந்திம காலத்தில்
ஆத்தையேற்றிய பித்தளை விளக்கு,
மந்திரமெழுதிய ஏட்டுச் சுவடிகள்.
யந்திரத் தகடும், நாகபடமும்
செப்புக் காசுகள் சிலவும்
வேண்டும் இவையெனக்கு
இது உன் பூமியெனவும்
இவையுன் வேர்களெனவும்
நாளையென் பேரனுக்கு
ஒப்புக் கொடுத்தென் உயிர்பிரிதல்
வேண்டும்.
சூரியதேவே இவை கொணர்க.
என்வேர்கள் எனக்கு வேண்டும்.
நாளையான் போவேனெனினும்
இன்றெனக்கு வேண்டும்,
எடுத்து வருக.



-மாலிகா




கலை பண்பாட்டு

அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு

செப்டெம்பர் 1996

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு

தமிழர் ஒருங்கிணைப்புக் குழு

*C/O T.C.C-France,*

*341, Rue des Pyrenees,*

*75020 Paris.*

*Tel: 01 - 43 58 11 42*

www.tamilarangam.net

# தமிழ்த் தேசிய விடுதலையில் குவியும் புள்ளி

உலகத் தமிழ் மக்கள் ஒரு புள்ளியில் சந்திக்கின்ற நிலை உருவாகி வருகிறது. தமிழ் மக்கள் விடுதலை பெறவேண்டும் என்பதே அக்கருத்துப்புள்ளியாகும். பலநூறு ஆண்டுகாலமாக பல்வேறு ஆக்கிரமிப்புக்களுக்கு உட்பட்டு, ஏழைபாழைக ளாக, கூலிகளாக, அடிமைகளாக, அகதிகளாக உலகநாடுகளுக்கு இடம்பெயர்ந்தும், தம் சொந்த இடங்களில் அடக்கப்பட்டும் இருந்த, இருக்கின்ற தமிழ் மக்கள் விடுதலை பெற்றுச் சுதந்திரமாக வாழவேண்டும், தமது தாயக உரிமையை, தேசிய உரிமையை, மொழி, பண்பாட்டு அடையாளங்களை நிலைநாட்ட வேண்டும் என்பதே அவ் அபிலாசையாகும். தொன்மையும், புதுமையும், நவீனமும் நிறைந்த தமிழர் நாகரிகம் இவ்வுலகில் பேணப்பட்டு ஏனைய விடுதலை பெற்ற மக்களுக்கு இணையான, சமத்துவத்தையும், வளர்ச்சியையும் பெருமைப்படத்தக்க சிறப்பையும் அடையவேண்டும் என்பதே அவ்விலட்சியமாகும். சிறீலங்கா அரசாங்கத்தின் கொடிய இனவாத அடக்குமுறையாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும், தமிழ் மக்கள் படும் சொல்லொணைத் துன்பத்தினாலும், இன அழிப்புக்கு எதிரான தீவிர ஆயுத நடவடிக்கையாலும் தமிழீழ மண்ணில், தமிழ்த்தேசம் ஒன்று உருவாகி உலகினால் அங்கீகரிக்கப்படும் சூழ்நிலை உருவாகி வருகின்றது. மக்கள், சொத்தழிவு, பசி, பட்டினி, சித்திரவதை, உயிரிழப்பு போன்றவற்றால் துயரின் விளிம்புக்கே சென்றுள் ளனர். குண்டுவீச்சுக்கள், உணவு, மருந்துத்தடை, கொலை, கொள்ளை ஆகிய பயங் கரவாத நடவடிக்கைகளை மேற்கொண்டு, இனப்படுகொலை ஒன்றின் மூலம் தமிழ் மக்களை அடிபணிய வைக்க அரசாங்கம் முயலுகிறது.

அதேவேளை, போராட்டம் உலகம் வியக்கத்தக்க பல சாதனைகளை நிலைநாட்டியபடியே முன்னேறுகிறது. கலை, இலக்கியம், பொருளாதாரம், அகதிகள் பராமரிபபு என்ற ரீதியில், பல சாதனைகளை இப் போர்க்காலத்தில் தமிழ் மக்கள் ஏற்படுத்தி வருகின்றனர். அதுபோல், போர்கலையில், பாதுகாப்புத்துறையில், முல்லைத்தீவு மீதான தாக்குதலும் வெற்றியும் உலக சாதனையாகக் கருதப்படுகிறது.


சிறீலங்கா அரசாங்கம் 50 பில்லியன் ரூபாய்களை யுத்தத்திற்கு செலவிட்டும் பொதுமக்களின் வயிற்றில் அடித்தும் யுத்தத்தில் தோல்வியையே தழுவி வருகிறது. சந்திரிகாவின் அரசாங்கத்திற்கு சிங்கள மக்களிடையே எதிர்ப்பு வலுவடைந்து வருகின்றது. பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. கொழும்புத் தமிழ் குழுக்களின் இருப்பு அர்த்தமற்றதாகி வரும் நிலையில், அரசாங்கத்திற்கு எதிராக சில கருத்துக்களைச் சொல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டு வருகின்றன.

யாழ் குடாநாட்டை, இராணுவக் கெடுபிடிகள் ஒரு கொலைக்களமாக மாற்றி வருவதோடு மக்கள் கிளர்ச்சி ஒன்று வெடிக்கும் நிலையும் உருவாகி வருகிறது. தென்தமிழீழத்தில் பல பகுதிகள் விடுதலை பெற்று வருகின்றன. கெரில்லாப் போருக்குச் சாதகமாக, சிறீலங்காப் படைகள் பரவி, முடக்கப்பட்டு, தற்காப்பு நிலைக் குத் தள்ளப்பட்டு வருவது, சந்திரிகாவின் போரை – தோல்விப் பாதையிலேயே இட்டுச் செல்வதாக ஆக்கியுள்ளது. மேலும், இந்தியா, தமிழ் நாட்டிலும், சிறீலங்கா அரசாங்கத்திற்கு உதவும் சக்திகளின் பலம் குறைந்து வருகிறது.

தமிழ் நாட்டிற்கு ஓடிய தமிழீழ அகதிகளின் நிலையும், அவர்களின் எண்ணிக்கை அதிகமாகும் நிலையும் இந்தியாவின் சிறீலங்கா தொடர்பான கொள்கையில் மாற்றங் களை கொண்டுவர நிர்ப்பந்தித்து வருகிறது.

இத்தகு நிலையில், சிறீலங்கா அரசாங்கம், சர்வதேச பயங்கரவாதம் என்ற போர்வைக்குள் பதுங்குகின்ற நிலைமை தோன்றி வருகின்றது. மேற்குலகம் சர்வதேச பயங்கரவாதத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்குவதைக் கருத்தில் கொண்டு தமிழ் மக்களின் நீதியான போராட்டத்தையும் அவ்வுலக பயங்கரவாதத்துள் சேர்த்து தனது இனவெறிப் போருக்கு ஆதரவு சேர்க்கலாம் என்று சிறீலங்கா அரசு கருதுகிறது. சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தை வெளிப்படுத்தி – தமிழீழ விடுதலைப் போரின் வெற்றிக்கும் அங்கீகாரத்துக்கும் இட்டுச் செல்லும் போராட்டத்தில் கணிச மான பங்கு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிலும் தங்கி உள்ளது. உலகத் தமிழ் மக்கள் தமது சக்தியின் விஸ்பரூபத்தை வெளிப்படுத்த வேண்டிய தேவையும் எழுந்துள்ளது. விடுதலை என்ற அப்புள்ளியில்தான் உலகத் தமிழர்கள் அனைவரதும் கவனம் குவிய வேண்டியதாகவும் உள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# காலத்தால் சாகாதவன்

எமது விடுதலை இயக்கம் எத்தனையோ அற்புதமான தியாகங்களைப் புரிந்திருக்கிறது; வீரகாவியங்களைப் படைத்திருக்கிறது; அர்ப்பணிப்புக்களைச் செய்திருக்கிறது. இவையெல்லாம் எமது ஆயுதப் போராட்ட வரலாற்றில் நாம் ஈட்டிய வீரசாதனைகள். ஆனால், எனது அன்பான தோழன் திலீபனின் தியாகமோ வித்தியாசமானது; வியக்கத்தக்கது; எமது போராட்ட வரலாற்றில் புதுமையானது. சாத்வீகப் போராட்டக் களத்தில் தன்னைப் பலிகொடுத்து, ஈடு இணையற்ற ஒரு மகத்தான தியாகத்தை திலீபன் புரிந்தான். அவனது மரணம் ஒரு மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி; தமிழீழ போராட்ட வரலாற்றில் ஒரு புரட்சிகரமான திருப்பத்தை ஏற்படுத்திய நிகழ்ச்சி; தமிழீழ தேசிய ஆன்மாவை தட்டி எழுப்பிய நிகழ்ச்சி; பாரத நாட்டை தலைகுனிய வைத்த நிகழ்ச்சி; உலகத்தின் மனச்சாட்சியை சீண்டிவிட்ட நிகழ்ச்சி.

திலீபன் யாருக்கா இறந்தான்? எதற்காக இறந்தான்? அவனது இறப்பின் அர்த்தம் என்ன? அவனது இறப்பு ஏன் ஒரு மகத்தான நிகழ்ச்சியாக, மக்கள் எல்லோரையுமே எழுச்சிகொள்ளச் செய்த ஒரு புரட்சிகர நிகழ்ச்சியாக அமைந்தது.

திலீபன் உங்களுக்காக இறந்தான்; உங்கள் உரிமைக்காக இறந்தான்; உங்கள் மண்ணுக்காக இறந்தான்; உங்கள் பாதுகாப்பிற்காக, உங்கள் கௌரவத்திற்காக இறந்தான்.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக, ஒருவன் எத்தகைய உயர்ந்த – உன்னத – தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்.

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன். ஆனால், உயிரிலும் உன்னதமானது எமது உரிமை, எமது சுதந்திரம், எமது கௌரவம்.

நான் திலீபனை ஆழமாக நேசித்தேன். உறுதிவாய்ந்த ஒரு இலட்சியப் போராளி என்ற ரீதியில் அவன் மீது அளவுகடந்த பாசம் எனக்குண்டு. அவன் துடிதுடித்துச் செத்துக்கொண்டிருக்கும் பொழுதெல்லாம் என் ஆன்மா கலங்கும். ஆனால், நான் சாதாரண மனிதப் பிறவியாகப் பார்க்கவில்லை. தன்னை எரித்துக்கொண்டிருக்கும் ஒரு இலட்சிய நெருப்பாகவே நான் அவனைக் கண்டேன்; அதில் நான் பெருமை கொண்டேன். இலட்சிய உறுதியின் உச்சக்கட்டமாக திலீபன் தன்னை அழித்துக் கொண்டான். அவன் உண்மையில் சாகவில்லை; காலத்தால் சாகாத வரலாற்றுப் புருஷனாக அவன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

(தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களின் 'எனது மக்களின் விடுதலைக்காக' என்னும் நூலிலிருந்து)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திலீபன் சிந்தனையில் இரு சிறு துளிகள்



- சர்வே -

"நல்லூரின் வீதியினில்
நடந்தது யாகம்
நாலுநாள் ஆனதும்
சுருண்டது தேகம்
தியாகத்தின் எல்லையை
மீறிய பிள்ளை
திலீபனைப் பாடிட
வார்த்தைகள் இல்லை"

திலீபன் பற்றி புதுவை எழுதிய வரிகள் இவை. காலத்தால் மறையாத கவித்துவ வரிகள். இவ்வரிகள் உயிர்ப்போடு இருப்பதற்கு, திலீபனின் தியாகத்தின் உயிர்ப்புத்தன்மை முக்கிய காரணமாகின்றது. அல்லது இவ்வரிகள் சாதாரண வரிகளாக சுருண்டிருக்கக்கூடும்.

திலீபன் பற்றி நினைக்கும் போது, அவனது தியாகத்தின் உச்சத்தினை பற்றி நினைக்கும் போது, புதுவை பாடியது போல, அதனை எழுதிடுவதற்கு வார்த்தைகள் இல்லை என்றுதான் கூறவேண்டும்.

இருப்பினும், திலீபன் பற்றிய நினைவுகளை மீட்கும் இக்கட்டுரையில், திலீபனின் சிந்தனைகளின் தத்துவார்த்த நிலை குறித்து சிறிது சிந்திக்கலாம் என எண்ணுகிறேன். இங்கு திலீபனின் சிந்தனைகள் எனும்போது, அவனோடு பழகிய காலங்களில் அவன் என்னிடம் நேரடியாகத் தெரிவித்த கருத்துக்களை மட்டுமே இங்கு குறிக்கிறேன். இது திலீபனை முழுமையாகப் புரிந்துகொள்ள உதவமாட்டாது; இருப்பினும் ஒரு நினைவு மீட்பாக எடுத்துக்கொள்ளலாம். இங்கு தூய்மை என்பது தன்னலமறுப்பு என்பதை அடிப்படையாகக் கொண்டிருந்தது. திலீபன் அடிக்கடி வலியுறுத்தும் ஒரு விடயம் தூய்மை. நாம் தூய்மை உடையவர்களாக, மனதிலே அழுக்கற்றவர்களாக இருக்கவேண்டும் என்பதனை அவன் எப்போதுமே வலியுறுத்துவான். ஆசை, எதிர்பார்ப்புக்கள் என்பன பொதுநிலை நோக்கியதாக இல்லாது தன்னிலை நோக்கியதாக மாறும்போது ஒரு மனிதனின் தூய்மையும் மாசுபட ஆரம்பித்துவிடுகின்றது எனும் கருத்து அவனிடம் இருந்தது. போராளிகளின் ஆசை, எதிர்பார்ப்பு என்பன பொதுநோக்குடன் இருப்பதனால், அவர்கள் தமக்கென்று வாழாமல், மற்றவர்களுக்கென்று – ஒரு தேசத்திற்கென்று வாழ்வதனால் அவர்களால் தூய்மையாய் இருக்க முடிகின்றது என்பான் அவன். யுத்தகளங்கள் நாம் தூய்மையாக இருப்பதற்கான புறத்தாக்கத்தினை தருகின்றன என்று கூறிக்கொள்வான். "ஒவ்வொரு தடவையும் யுத்த முனையில் நிற்கும்போது, வாழ்வின் பௌதிக நிலையின்மை நன்கு புரியும்; தூய்மையுடன் மக்களுக்கு சேவையாற்றும் எண்ணம் மேலும் வலுப்பெறும்" என்பான். இதனை இன்னொரு வகையில் கூறப்போயின், "சுயத்தை" மறந்து மக்களுக்காய், எந்நேரமும் மரணிப்பதற்கு தயாராய் நிற்கும் போராளிகளால் இலட்சிய வீரராய், தளராத உறுதியுடன் தூய்மையானவர்களாக இருக்கமுடிவதற்கு "வாழ்க்கை" பற்றிய அவர்களது சித்தாந்தமும் காரணமாய் இருக்கின்றது எனலாம். "பௌதீக ரீதியாக உயிர்வாழும் காலம்" மட்டுமல்ல வாழ்க்கை – அது அதனையும் கடந்து நிற்பது. பௌதீக வாழ்வின் நிலையாமையும் மக்கள் மனங்களிலும் வரலாற்றிலும் வாழும் வாழ்க்கையின் நிலையான தன்மையும் திலீபனால் நன்கு உணரப்பட்டிருந்தது. வாழ்வை பௌதீக உயிர்வாழ்வுக் காலத்தினையும் கடந்து நோக்கிய திலீபனின் இலட்சியத் தீயினை பௌதீக வாழ்வின் எந்த வரையறையும் அணைத்துவிட முடியவில்லை. மாறாக அவனது தூய்மையின் முன் அனைத்துமே தலைவணங்கும் நிலையே தோற்றம் பெற்றது.

திலீபனின் 'தூய்மை' பற்றிய சிந்தனை ஆன்மீகத்துடனும் தொடர்புபட்டதாகவே இருக்கிறது. எவன் தனக்காக வாழாது மக்களுக்காக வாழ்கின்றானோ அவனே உண்மையான ஆன்மீகவாதி என்பார்கள். இந்த வகையில் திலீபன் ஆன்மீகச் சிந்தனை அடிப்படையிலும் உச்ச நிலையினைத் தொட்டவனாகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

உள்ளான். ஆன்மீக சிந்தனையும் தூய்மையினை வலி யுறுத்துகின்றது. எவன் தூய்மையுடையவனாக உள்ளானோ அவன் தடைகளைக் கடந்து வெற்றியினைப் பெறுவான் என்கிறது. இதனை பாஞ்சாலி சபதத்தில், தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்; ஆனால் தர்மம் மறுபடி வெல்லும் என்கிறார் பாரதியார். இங்கு திலீபன், ஆன்மீக நோக்கில் தர்மத்தின் புத்திரனாக, தூய்மையின் உருவாக விளங்குகின்றான். அவனது சிந்தனையும் ஆன்மீகக் கோட்பாட்டிற்கு புதிய பரிணாமம் சேர்க்கின்றது எனக் கூறலாம்.

அடுத்தது, போராட்டத்தினை முன்நோக்கி நகர்த்துதல் தொடர்பான திலீபனது சிந்தனைகளைக் குறிப்பிடலாம். தடைகளைத் தாண்டி போராட்டத்தினை முன்னோக்கி நகர்த்துவது போராளிகளின் பணியே எனும் கருத்து அவனிடம் இருந்தது. உச்சபட்ச தியாகம் மூலம் எந்த தடையினையும் உடைத்து எறியலாம் என்ற நம்பிக்கை அவனிடம் உறுதியாக இருந்தது. போராளிகளின் உயரிய அர்ப்பணிப்பு மக்கள் மத்தியில் விடுதலைத் தீயினை கொழுந்து விட்டெரியச் செய்யும் என்பதிலும், இத்தியாகங்கள் தோற்றுவிக்கும் தாக்கங்கள் போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்கு உந்தித் தள்ளும் என்பதிலும் திலீபனிடம் அசையாத நம்பிக்கை இருந்தது. போராட்டத்தின் தடைகளை எந்தெந்த வழிகளில் உடைத்தெறிய முடியுமோ அந்த வழிமுறை மூலம் உச்சக்கட்டத் தியாகத்தினைச் செய்வதற்கு திலீபன் தயாராகவும் இருந்தான். 1987ம் ஆண்டு ஆனி மாதத்தில் ஒருநாள் மாலை திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் திலீபனைச் சந்தித்தேன். அவனது முகம் சற்று வாடியிருந்தது. மிகுந்த யோசனைக்கு உட்பட்டிருந்தவன் போலக் காணப்பட்டான். அவனோடு உரையாடிய போது, வடமராட்சியில் சிறீலங்காப் படையினரால் நடத்தப்பட்ட 'ஒப்பிரேசன் லிபரேசன்' (*Operation Liberation*) மூலம் வடமராட்சிப் பகுதி சிறீலங்காப் படையினரால் ஆக்கிமிக்கப்பட்டமை அவனைப் பாதித்திருந்தமையினை உணர முடிந்தது. இராணுவ பலத்தைக் கொண்டு எமது போராட்டத்தினை முறியடிக்க முயலும் ஆக்கிரமிப்பாளர்களுக்கு உரிய பதிலடியினைக் கொடுத்து எமது மண்ணிலிருந்து விரட்டியடிக்க வேண்டும் என்றான் அவன். "சிறீலங்கா இராணுவத்திற்கு எதிராக பெரிய கரும்புலித் தாக்குதல்களை நடாத்த வேணும்; தான் கரும்புலியாகப் போகப்போறேன்; இதைப் பற்றி தலைவரோட கதைக்கப்போகிறேன்" எனச் சினம் பொங்கக் கூறிக் கொண்டான். எந்தத் தடை வந்தாலும் போராட்டம் வெல்லும்; வெல்லவைக்க வேணும் என்று உறுதியாகக் கூறினான்.

இதன் பின்னர் 'மில்லர்' கரும்புலியாகப் பாய்ந்து சிறீலங்கா அரசை அதிர வைத்த பின்னர் இலங்கை, இந்திய ஒப்பம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் போராட்டத்தின் முன்னேற்றத்திற்கு இன்னொரு தடைக் கல்லாக அமைந்தது. இந்த ஒப்பந்தத்தினைக் கடந்து போராட்டம் முன்னேற வேண்டியது தமிழீழ மக்களின் எதிர்கால நல்வாழ்வுக்கு அவசியம் என்பதினை திலீபன் திடமாக நம்பினான். அவ்வாறு ஒப்பந்தத்தைக் கடந்து போராட்டம் செல்ல வேண்டுமானால் இந்திய இராணுவத்தோடு மோதவேண்டிய நிலை ஒன்று உருவாக்கப்பட்டிருந்தது. இந்திய இராணுவத்துடன் மோதுவதற்குரிய அரசியற் சூழல் இல்லாத நிலையில், ஒப்பந்தத்தை சிறிதுகாலம் அனுசரித்துச் செல்ல வேண்டிய ஒரு நிலையும் இருந்தது.

இச் சூழலிலே, தடைகளைத் தாண்டி அடுத்த கட்டத்திற்குப் போராட்டத்தினை நகர்த்துவதில் திலீபன் குறியாய் இருந்தான். இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்புக்களை முன் உணர்ந்த திலீபனால், அதை மக்களுக்கு புரிய வைக்க வேண்டிய அவசியத்தை உணரமுடிந்தது. இந்தியா தமது விடுதலையினைப் பெற்றுத்தந்து விடும் என்ற மக்களின் போலி நம்பிக்கை இன்னும் மறையாத ஒரு சூழலில், இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நிராகரிக்கும் நிலை முற்றுமுழுதாக இருக்கவில்லை. இந்தியப் படையினர் தமிழ் மக்களின் விடுதலைக்குத் தடையாய் அமையப் போகிறார்கள் என்பதனையும் முழுமையாக உணரமுடியவில்லை. அவ்வாறு உணர்ந்தவர்களில் பெரும்பான்மையினர் மத்தியிலும் இந்தியப் படைகளுடன் மோதல் ஏற்படின் இயக்கமும் போராட்டமும் முழுமையாக அழிந்துவிடும் என்ற எண்ணமே தலைதூக்கியிருந்தது.

இத்தகையதொரு பின்னணியிலேயே, போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதற்கு மக்களைத் தயார்ப்படுத்தும் பணியில் திலீபன் குதித்தான். அவ்வாறு மக்களைத் தயார்ப்படுத்தும் நடைமுறையில், மக்கள் மத்தியில் உள்ள போலி நம்பிக்கைகளை அகற்றுவது முதற்படி என உணர்ந்தான்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் பின் தோற்றம் பெற்ற நிலைமைகளைக் கருத்தில் கொண்டு முன்வைக்கப்பட்ட 5 கோரிக்கைகளின் அடிப்படையில் திலீபன் தனது நீர்கூட அருந்தாத சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை ஆரம்பித்தான்.

1987–ம் ஆண்டு செப்டெம்பர் 15 முதல் 26–ம் திகதிக்கு இடைப்பட்ட உண்ணாவிரதக் காலத்தினுள் மக்களை உண்மை நிலையினை உணரவைத்து, போராட்டத்தின் அடுத்த கட்ட நகர்வுக்கு அவர்களைத் தயாராக்கிவிட்டு தியாகச் சாவினைத் தழுவிக் கொண்டான்.

இங்கு திலீபனின் சிந்தனையும் செயலும் ஒன்றாக இருந்தமையினைக் காணமுடிகிறது. திலீபனின் சிந்தனைகளின் தத்துவார்த்தம் 'தூய்மை – செயற்பாடு – அர்ப்பணிப்பு' என்பவற்றில் கட்டி எழுப்பப்பட்டிருந்தமையினையும் உணர முடிகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# பேரழிவு நிச்சயம்

நாட்டில் எழுந்துள்ள இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வே மார்க்கம் ஆகும். சகல இன மக்களும் எதிர்காலத்தைத் திட்ட மிட்டு செயல்படுத்த வேண்டிய ஒரு காலகட்டத்திலேயே வாழ்ந்துகொண்டு இருக்கின்றோம். தற்போதைய யுத்த நிலை நீடிக்குமானால் நாடு பேர ழிவை எதிர் நோக்கும். எனவேதான் நாம் அரசியல் தீர்வைக் காண விரும் புகிறோம். அமைச்சர் அமரசிறி தொடங்கொடாவின் இந்த எச்சரிக் கையானது, அரசியல் தீர்வின் அவ சியம் குறித்து பொதுஜன ஐக்கிய முன்னணியின் முதலாவது எச்ச ரிக்கை அல்ல; அதிலும் குறிப்பாக அமைச்சரான பேராசிரியர் பீரிஸ் அடிக்கடி தான் பங்கு பற்றும் நிகழ்ச் சிகளில் எல்லாம் மேற்கண்டவாறு குறிப்பிட்ட வண்ணமே உள்ளார். யுத்தத்தினால் அதிகரித்துவரும் செல வீட்டைத் தாங்க முடியாது எனவும் நாட்டின் சகல வளங்களும் யுத்தத் திற்கே பயன்படுத்தப்படுவதாகவும், இதனால் அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படுவதோடு பொருளா தாரம் மீள முடியாத நெருக்கடியி னுக்குள் சென்று கொண்டுள்ளதாக வும் அவர் குறிப்பிட்டு வருகின்றார். இதற்கு மேலாக அடுத்த ஆண்டுக் குரிய வரவு செலவுத் திட்டத்தையே தயாரிக்க முடியாத இக்கட்டான நிலை உள்ளதாகவும் அவர் குறிப்பிடு கின்றார். இவ்வாறாக பொதுஜன ஐக்கிய முன்னணியினர் பலர் பேசிய போதும் அவர்கள் கடைப்பிடிக்கும் அணுகுமுறையானது முற்றிலும் தவ றானதாகவே உள்ளது.

ஒன்று, அரசியல் தீர்வு எனக் கூறிக்கொண்டாலும் வடக்கு கிழக் கில் இராணுவ நடவடிக்கைகளை தீவிரமாக்குவதிலேயே முனைப்பாக உள்ளனர். இரண்டாவது, அரசியல் தீர்வு குறித்து மேற்கொள்ளும் நடவ டிக்கைகள் அவர்களின் அரசியல் தீர்வு முயற்சியை சந்தேகிக்க வைக் கின்றன. மேலும் அவை அர்த்தம் அற்றவையாகவும் தெரிகின்றன. முத லில், இனப்பிரச்சினைக்கான அரசி யல் தீர்வு என்பது எதற்காக என் பதை அரசாங்கம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். அதாவது தமது பாதுகாப்புரிமைகள் என்பன கேள் விக்குறியாக, நிச்சயமற்றதாக உள்ளது. ஆகையினால் தமது பாதுகாப்புரி மைகள் உறுதிசெய்யப்படவேண்டு மென கோருபவர்கள் தமிழர்களே. ஆகையினால் பிரச்சினைக்கான தீர்வானது தமிழருடனேயே செய்து கொள்ள வேண்டியதாகும். ஆனால், தமிழரின் உரிமைகள் தொடர்பாக அரசாங்கம் சிங்களவர்களுடன் பேச முனைகின்றது. பௌத்த பீடாதிபதி களிடமும், பௌத்த பேரினவாதிக ளிடமும் அனுமதி கேட்டு இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணலாம் என எண்ணுகின்றது போல் இருக்கின் றது. ஆனால் பௌத்த பீடாதி பதிகளிடமும் பேரினவாதிகளிடமும் இருந்து ஒருபோதும் இனப்பிரச்சி னைக்கான அரசியல்தீர்வை அர சாங்கம் பெற்றுக்கொள்ள முடியாது. பெற்றுக்கொண்டாலும் நிச்சயமாக தமிழர் ஏற்றுக்கொள்ள முடியுமான தாக இருக்க மாட்டது. இந்த நிலை யில் தமிழ் மக்களின் இனப்பிரச்சி னைக்கு சந்திரிகா அரசினால் அரசி யல் வழி முறையில் தீர்வுகாண முடி யாது என்பது வெளிப்படையானது. அதாவது தமிழ் மக்களின் அபிலா சைகள், பாதுகாப்பு என்பவற்றை உறுதிசெய்ய முடியாத எந்தவித யோசனையும் இனப்பிரச்சினைக்கு தீர்வாக ஒருபோதும் இருக்கமாட் டாது. இதை சந்திரிகா அரசு உணர்ந் துள்ளதோ இல்லையோ சிறுபான் மையினரின் பிரச்சினையைத் தீர்க்க பேரினவாதிகளிடம் ஆலோசனை கேட்பது தீர்வுக்கான வழிமுறை அல்ல.

அடுத்ததாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என்றால் அது யாருடன் காணப்படவேண்டும் என்பதாகும். தமிழ் மக்களின் உரி மைப் போராட்டத்திற்கு தலைமை தாங்கி நடத்தி வருபவர்கள் விடுத லைப் புலிகள் இயக்கமே. அத்தோடு அரசாங்கத்திற்கு எதிராக வலுவாகப் போராடும் சக்தியாக இருப்பவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கமே. இந்த வகையில் இனப்பிரச்சினைக்கு தீர்வு என்பதும் ஆயுதப்போராட்டத்திற்கு முடிவு என்பதும் விடுதலைப் புலிக ளுடன் செய்துகொள்ளப்படும் உடன் பாட்டில் இருந்தே உருவாக முடியும். மேலும் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசு விதிக் கும் நிபந்தனையானது பொருத்தப் பாடான ஒன்றல்ல. இது போராட் டத்தில் தோல்வியடைந்த அல்லது தோற்கடிக்கப்பட்ட அமைப்பொன்றை பேச்சுக்களில் சேர்த்துக்கொள்வதற் கான நிபந்தனை போன்றதாகும். ஆகையினால் இது நடைமுறைச் சாத்தியமற்றதாகும். ஏனெனில் புலி கள் இயக்கம் ஒரு தோற்கடிக்கப் பட்ட இயக்கம் அல்ல. அது மிகவும் செயற்பாடு மிக்க, சிறீலங்கா இரா ணுவத்திற்கு சவால் விடும் ஆற்றல் மிக்க ஒரு அமைப்பாகவே உள்ளது. இந்த நிலையில் சந்திரிகா அரசு இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து எவ்வளவுதான் பேசிக் கொண்டாலும் அவ்விடயத்தில் சரி யான வழிமுறை எதையும் அது கைக் கொள்ளவில்லை. இது சந்திரிகா குமாரணதுங்கா உட்பட அதன் அர சாங்கத்தில் பங்குபற்றுவோருக்கும் தெரியாததொன்றுமல்ல. ஆகையி னால் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்ற சந்திரிகா அரசின் பேச் சானது அர்த்தம் எதுவும் அற்றதா கும். இந்த நிலையில் சிறீலங்கா, யுத் தத்தினால் பேரிழப்பைச் சந்திப்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மகிழ்ந்து நிற்கும்



'ஓயாத அலைகள்' கைப்பற்றப்பட்ட ஆட்லறிப் பீரங்கி – வீரத்தின் அறுவடை

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு – ஒட்டிசுட்டான் அடர்ந்த காட்டுப்பகுதி வழியாக நான் பயணம் செய்துகொண்டிருந்த பஸ் வண்டி புதுக்குடியிருப்பு நோக்கி ஓடிக்கொண்டிருந்தது. சாரதி பஸ் வண்டியின் வேகத்தை திடீரெனக் குறைத்து மெதுவாக நகர்த்தினான். நான் யன்னல் வழியாக வெளியே எட்டிப் பார்த்தேன். அங்கு நூற்றுக்கணக்கான வயோதிபர்களும் இளைஞர்களும் பெண்களும் கூட அந்தக் காட்டுப் பாதையை மூடி மறைத்துக்கொண்டு நின்றனர். "தம்பி என்ன நடந்தது? இந்த சனம்மில்லாத காட்டுப்பகுதியில் ஒரே சனமாகக் கிடக்குது'' என்று எனக்கு முன்னால் இருந்த சாரதியை ஆவலுடன் கேட்டு எட்டிப்பார்த்தேன். "ஏதுவும் அக்சிடென்டோ தெரியவில்லை அல்லது வேறேதுவோ தெரியவில்லை.'' என்று அவர் தனக்குத் தெரிந்த ஊகங்களை எல்லாம் சொல்லி மண்டையைப் போட்டு குழப்பிக் கொண்டிருந்தார். எங்களுடைய பஸ்வண்டி நகரமுடியாமல் நின்றது. அங்கே பிரமாண்டமான பீரங்கி வண்டி ஒன்று வீதியோரமாக நிற்பாட்டிக் கிடந்தது. அதைச் சுற்றித்தான் நூற்றுக்கணக்கானோர் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர். இது என்ன சாமான்? நான் என்னுடைய கண்ணால் ஒருநாளும் காணவில்லையே என்று வியப்பாகப் பார்த்துக் கொண்டு அருகில் இருந்த இளம் போராளி ஒருவரைக் கேட்டேன். இதுதான் ஐயா ஆட்லறி ஷெல் அடிக்கின்ற பீரங்கி. முல்லைத்தீவு ஆமிக்காம்பை எங்கடை ஆட்கள் கைப்பற்றினர் என்று அந்த இளம் போராளி கூறினார். அவர் களைப்பாக இருந்த போதும் முகம் பூரிப்பினால் மலர்ந்து கொண்டிருந்தது.

ஆமாம் ஆயுதத்திற்காக தமது உயிரை அர்ப்பணித்து இந்த மண்ணுக்கு உரமாகின போராளிகளை நினைத்தேன். இதற்காகப் பலியான அவர்களை நினைத்து அந்த ஆயுதத்தை தொட்டுப்பார்த்தேன். அண்ணை இன்னும் கொஞ்சம் போங்கோ அங்கே இன்னுமொரு ஆட்லறி நிற்கின்றது என்று யாரோ கூறியது காதில் விழுந்தது ஆச்சரியமாக இருந்தது. ஒரு ஆட்லறி முகாமில் இருந்து எடுத்து வரவே பெரியபாடாக இருந்திருக்கும் அதற்கிடையில் இன்னும் ஒன்றா? மீண்டும் பஸ்ஸில் நாங்கள் ஏறி பயணத்தைத் தொடர்ந்தோம். அந்த இடத்தில் இருந்து சிறிது தூரம் சென்றதும் அதைவிடப் பெரிய ஆட்லறி ஒன்று புல்டோசரில் கட்டிவைத்தபடி நின்றது. அங்கும் ஒரே சனக்கூட்டம். நல்லூர் திருவிழாக் கூட்டத்தில் குவிந்தவர்கள் மாதிரி எல்லோர் முகத்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முல்லைத்தீவு



திலும் ஒரே குதூகலம். "முல்லைத்தீவு முகாம் சரியாம்" "ஆயிரம் ஆமிவரை முடிஞ்சுதாம்" "கனபேர் சரணடைந்திருக்கலாமாம்", "எத்தனையோ ஆயுதங்கள் சாப்பாட்டுச் சாமான்கள், வாகனங்கள் எல்லாம் அள்ளிக்கொண்டு வந்து விட்டினமாம்" என அங்கு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சனமெல்லாம் தமக்குத் தெரிந்தபடியெல்லாம் கதைத்துக் கொண்டிருந்தது.

முல்லைத்தீவு முகாம் வன்னிப் பெரு நிலப்பரப்பிலுள்ள மிகப் பெரியதொரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இராணுவ கடற்படைக் கூட்டுத்தளம். 1990ம் ஆண்டு முல்லைத்தீவில் காலம் காலமாக வாழ்ந்து வந்த மக்களை ஒரே இரவில் அகதிகளாக்கி உடுத்த உடுப்புடன் வெளியேற்றிய ஆயிரக் கணக்கான இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட அந்த நிலம் முல்லைத்தீவு முகாமாக காட்சியளித்துக் கொண்டிருந்தது.

வடக்குக் கிழக்குப் பகுதியில் கடலாலும் தெற்கே நிலப் பரப்பினாலும் சூழப்பட்ட முகாம். 5 மைல் பரப்பிற்குள் தமது தளத்தை அமைத்து அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். அந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்ட பின்னர் குமுளமுனை, செம்மலை, தண்ணீரூற்று, முள்ளியவளை, அலம்பில் பகுதியில் உள்ள மக்கள் தினமும் சொல்லொணாத் துயரத்துக்கும், எறிகணை வீச்சுக்கும் ஆளாகி வந்தனர். இது சர்வதேசத்தின் கண்களுக்குப் படாத தமிழர்களின் பெரிய அவலம். கடந்த சில நாட்களுக்கு முன்னர் கூட வற்றாப்பழை அம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள மாட்டுப் பட்டியில் அடுத்தடுத்து விழுந்த ஆட்லறி எறிகணைகளால் 40 பசுமாடுகள் உடல் சிதறிக் கொல்லப்பட்டன. அந்த பரிதாபகரமான சம்பவம் நடந்து முடிந்த சில நாட்களுக்குள் அதே எறிகணை பீரங்கிகள் எமது மக்கள் குடியிருப்புக்களில் உலாவருகின்றன. "இந்தப் பெரிய சாமான்களைக் கொண்டு வந்து சேர்த்துப் போட்டாங்கள். இனி என்ன எங்களுக்குத் தமிழ் ஈழம் கிடைச்சமாதிரித்தான்" அந்தக் கூட்டத்தோடு ஒருவராக நின்ற அந்தப் பெரியவர் குதூகலித்தார். சில மாதங்களுக்கு முன் வலிகாமத்தில் இருந்தும் பின் தென்மராட்சியில் இருந்தும் இடம்பெயர்ந்து வந்து சேர்ந்தவரின் முகத்தில் எவ்வளவு குதூகலம். அந்த ஆட்லறியை இழுத்து வந்த புல்டோசரின் முன்னால் நான்கு போராளிகள் தூங்கிக் கொண்டு இருந்தனர். ஆம் களத்தில் பல இரவுகள் தூக்கமில்லாமல் தண்ணீர் உணவு கூட அருந்த முடியாமல் போராடிக் களைத்துப் போய் வந்த அந்தப் போராளிகளைப் பார்த்தபோது உடல் சிலிர்த்தது.

முல்லைத்தீவு இராணுவத் தளத்தில் கைப்பற்றப்பட்ட அந்த 122 மி.மீ நடுத்தர பிரிவு ஆட்லறி எறிகணைகளை இழுத்துக் கொண்டு வந்த புல்டோசர்களின் முற்தளத்தில் இருந்த போராளிகளைப் பரிவோடு பார்த்துக் கொண்டு நின்ற மக்கள் அவர்களின் களைத்துப் போன முகங்களைத் தடவிக் கொடுத்தது நெஞ்சைத் தொட்டது. எங்களுடன் பஸ்வண்டியில் வந்துகொண்டிருந்தவர்களில் ஒருவரான கலாதரன் என்ற அதிபர் கண்களை அகலத் திறந்தபடி வியப்பு மாறாத நிலையில் ஆட்லறிப் பீரங்கியை மேலும் கீழும் பார்த்துக்கொண்டிருந்தார். "இந்த ஆட்லறியால எங்கட எத்தின ஆயிரம் மக்களைப் பறிகொடுத்தோம் நாங்கள். எத்தனை கோடிக்கணக்கான சொத்துக்களை அழித்திருக்கின்றார்கள்." உணர்ச்சி வந்த அவரது கண்களில் இருந்து நீர் வடிந்தது. பச்சை நிறத்திலான அந்தப் பீரங்கியைத் தொட்டு கண்களில் ஒத்திக் கொண்டார். இனி எங்கட உயிரையும் சொத்துக்களையும் காப்பாற்றுவதற்கு பயன்படும் என்று அவர் சொல்லிக்கொண்டே பஸ்வண்டியில் ஏறி அமர்ந்தார்.

முல்லைத்தீவு இராணுவத் தளம் விடுதலைப் புலிகளின் கையில் வீழ்ந்ததால் ஆங்காங்கே மக்கள் தம்மை மறந்து ஆனந்தக்கூத்தாடுவதும் கை தட்டிப் பாட்டுப்பாடுவதுமாக இருந்தனர். சில இடங்களில் வெடிகளைக் கொழுத்தியும் கையில் பந்தங்களை வைத்தும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். கிளிநொச்சியில் புலிகளுக்கெதிராக மக்கள் கிளர்த்தெழுந்து ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர் எனச் சில நாட்களுக்கு முன்னர்தான் இலங்கை வானொலி தொடர்ந்து மூன்று நாட்களாகக் கூறிவந்ததை மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். ஆம் புலிகளின் சாதனையால் தம்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மறந்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்து தெருவில் நடமாடிய அந்த மக்களைப் பார்க்கும் போது, மக்கள் எங்கே நிற்கின்றார்கள் என்ற செய்தியை மீண்டும் முழங்கிச் சொல்வது போல் இருந்தது.

நாங்கள் ஏறிய அந்த விஷேட சேவை பஸ்வண்டி உறுமலுடன் புறப் பட்டு புதுக்குடியிருப்பையும் கடந்து உடையார்கட்டை நோக்கிப் பரந்தன் சாலை ஊடாக விரைந்து கொண்டி ருந்தது. முல்லைத்தீவு இராணுவ முகாம் ஓர் இரவினுக்குள் விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டுவிட்டதாம் என்ற செய்தியைக் கேட்டதும் எங்கள் எல்லோருக்கும் வியப்பாகத்தான் இருந்தது. ஆம் எத்தனையோ காவல் அரண்கள், பாதுகாப்பு வலயங்கள், ஆயிரக்கணக்கான விஷேட பயிற்சி பெற்ற இராணுவ படையணிகள் அங்கிருந்தன, நவீனரக ஆயுதங்களைக் குவித்து வைத்திருந்ததுடன் இன்னும் ஒரு சில தினங்களுக்குள் வன்னித் தாக்குதலைத் தொடங்கி வன்னிப் பெரு நிலப்பரப்பு முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விடுவோம் என்ற பெரியளவிலான ஆயத்தங்களை மேற்கொண்டிருந்த நிலையில்தான் முல்லைத்தீவு இரா ணுவமுகாம் மீதான புலிகளின் "ஓயாத அலைகள்" இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1996ம் ஆண்டு ஜூலை 17ம் திகதி இரவு பத்து மணியளவில் இருந்து புதுக்குடியி ருப்பு பகுதிகளில் தொடங்கிய ஆரவா ரமும் இரைச்சலும் தொடர்ந்து காதைப் பிளந்துகொண்டேயிருந்தன. ஒன்றுக்குப்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வாகனங்கள், புல்டோசர்கள், மோட் டார் சைக்கிள்கள் என்று அந்தப் பிரதேசம் அதிர்ந்து கொண்டிருந்தது. அன்றிரவு எங்கள் ஒருவருக்கும் தூக் கம் வரவில்லை. கடவுளே இவ்வளவு ஆயிரக்கணக்கான பெடியள் போகு துகள் அதுவும் வெற்றியோடு சுகமா கத் திரும்ப வேண்டும் என்று இரவு முழுவதும் ஒவ்வொருவரின் பிராத்த னைகளும் இருந்தன. நள்ளிரவு 12.30 மணிபோல் ஊரே அடங்கி இருந்த வேளையில் ஒருசில எறிகணைச் சத் தங்கள் கேட்டன. அதன்பின் பெரிய அளவில் சத்தங்கள் கேட்கவில்லை. மீண்டும் இரவு 2.30 மணி இருக்கும் திரும்ப அமைதியையும் கிழித்துக் கொண்டு வட்டமிட்டுக்கொண்டி ருந்த புக்காரா விமானங்களின் இரைச்சல் எல்லோரையும் ஒரு கணம்


www.tamilarangam.net

'ஓயாத் அலைகள்' களம் செல்லும் வேங்கைகள் - தளராத உறுதி

உலுக்கிவிட்டது. மறுநாள் அதிகாலை வரை சுப்பர்சொனிக் புக்காரா விமா னங்கள் இரைந்து கொண்டே இருந் தன. "நேற்றிரவு முல்லைத்தீவினில் காயப்பட்ட போராளிகளை பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு போகினமாம்" "இரா ணுவ முகாம் முக்கால்வாசிப் பகுதியி யையும் பிடிச்சாச்சாம்." அன்று காலை ஊர் முழுவதும் இதுதான் பேச்சு. காலை 8.30 மணிபோல் 15க்கு மேற்பட்ட பஸ்வண்டிகள், லொறிகள், இழுவை இயந்திரங்களில் வந்த போராளிகள் "முல்லைத்தீவு முகாமில் இருக்கும் ஆயுதங்களையும் சாமான்க ளையும் அள்ளிறதுக்கு ஆட்கள் தேவை, எங்களோட வரவிரும்பிற ஆட்கள் இதுகளிலே ஏறுங்கள் என்று சொல்லி முடிக்க முன்னர் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தாமாகவே ஓடிவந்து வண்டிகளில் ஏறிக்கொண்டனர். அவர்களில் இளைஞர்கள் மட்டுமல்ல வயோதிபர்களும், குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகளும், அரச ஊழியர்களும் கூட இருந்தனர். "ஐயா நீங்கள் போறது ஆபத்தான இடம். காம்பில் இருந்து தப்பியோடிப் போன ஆமிக்காரங்கள் பற்றைகள் வழியே ஒழித்து நின்று ரவுண்ஸ் அடிப்பாங்கள்" அந்தப் போராளிகள் கொடுத்த முன்னெச்சரிக்கையையும் கூடப் பொருட்படுத்தாமல் முண்டிய டித்து ஏறிக்கொண்டிருந்தனர். "தம்பி எங்கட மண்ணை அந்த சிங்களவனி டம் இருந்து மீட்க நீங்கள் செய்யிற இந்த தியாகத்திற்கு நாங்கள் இதுகூடச் செய்யாவிட்டால்" என்று அவர்கள் சொல்லிக்கொண்டு பஸ்வண்டியில் ஏறினர். உற்சாகமும் உத்வேகமும் நிறைந்த அந்த மக்கள் கூட்டத்தை பார்த்ததும் அந்த இளம் போராளிக ளின் உள்ளம் மகிழ்ச்சியால் குதூக லித்தது. ஆம் அங்கே ஒரு மக்கள் போராட்டம் முனைப்பெடுத்துக் கொண்டு இருந்தது. அந்த மக்களை ஏற்றி நிறைத்துக் கொண்ட பஸ்வண் டிகள் தகர்க்கப்பட்ட முல்லைத்தீவு இராணுவ முகாம் நோக்கி விரைந்து கொண்டு இருந்தன.

புதுக்குடியிருப்பு – முல்லைத்தீவு பிரதான வழியாகச் சென்றுகொண்டி ருந்த அந்த பஸ்வண்டிகளும் லொறிக ளும் சிவன் கோயிலைத் தாண்டி முள்ளிவாய்க்காலையும் பரந்தன் வெளியினூடாக கடந்து சென்றது. இடையிடையே வானத்தில் சுப்பர் சொனிக் விமானங்கள், கிபிர் குண்டு வீச்சு விமானங்களின் மிரட்டல் ஓடிக் கொண்டிருந்த வண்டிகளில் இருந்த வர்களைக் கலக்கிக்கொண்டிருந்தது. அந்த மக்களின் தொடர் வண்டிகள் அடர்ந்த காட்டுப் பகுதியூடாக சென்று வெட்டுவாய்க்கால் பாலத் தின் முன்பு நிறுத்தப்பட்டன. அவை ஒன்றன்பின் ஒன்றாக வரிசையில் நிறுத்தப்பட்டதும், அவற்றில் இருந்து இறங்கியவர்களின் இதயங்கள் படபட வென அடித்துக் கொண்டிருந்தன. "பாலத்தாலை இப்ப உள்ளுக்குப் போக ஏலாது. கடலுக்கை இறங்கிச் சுற்றித்தான் போகவேண்டும். கொஞ் சத்தூரம்தான் போகவேண்டும்" அவர் களை அழைத்துக் கொண்டு சென்ற போராளி சிரித்துக் கொண்டு கடலி னூடாக நடக்கத் தொடங்கினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




'ஓயாத அலைகள்' தாக்குதலில் கைப்பற்றப்பட்ட 'பவல்' கவசவாகனம்

முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப் பெரும் பழமை வாய்ந்த கடலேரிதான் அது. நந்தி உடையார் என்பவரால் அணை கட்டப்பட்டதால் அது நந்திக் கடல் எனப் பெயர் பெற்றதாக ஒரு ஐதீகம். அந்த சிறிய ஏரி ஒரு காலத்தில் செல்வம் கொழிக்கும் விளை கடலாக இருந்தது. கடல் நீரும் நன்னீரும் சங்கமிக்கும் அந்த நந்திக் கடலில் இறால் வளர்ப்பு பிரபல்யம் வாய்ந்த ஒரு தொழிலாக இருந்து வந்தது. அந்த பெரிய இன இறால்களை வளர்த்து வருவதற்கேற்ற இயற்கைச் சூழல் இருந்ததால் பெருமளவில் ஏற்றுமதி செய்யக்கூடிய இறால் பண்ணையாக அந்த நந்திக்கடல் இருந்தது.

1990ம் ஆண்டின் பின்னரான இராணுவ முற்றுகையைத் தொடர்ந்து அந்தப் பிரதேச மக்களின் வாழ்வும் வளமும் அழிக்கப்பட்டுவிட்டது. தமிழீழ மாவட்டங்களில் வளம் செழிக்கும் மாவட்டமாக விளங்குவது முல்லை மாவட்டம் ஒன்றுதான். ஆம் கடல்வளம், காட்டுவளம், மண்வளம், நீர்வளம் என எல்லாமே ஓரிடத்தில் இருப்பதாலோ என்னவோ இங்கு வாழும் மக்களும் வந்தோரை வரவேற்கும் பண்புள்ள பரந்த உள்ளம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். அந்த மண்ணில் கால் வைத்ததும் அந்த மக்களில் ஒன்றாகச் சென்ற வேலாயுதம் என்ற வயோதிபர் ஒருவர் நந்திக் கடலைத் தொட்டுக்கும்பிட்ட காட்சி நெஞ்சை உருக்கியது. அவரும் அந்த மண்ணிலேயே காலம் காலமாக வாழ்ந்து பரம்பரை பரம்பரையாகச் சேர்த்துவைத்த சொத்துக்களை எல்லாம் பறிகொடுத்துவிட்டு உடுப்புக்களுடனும் ஒருசில சமையல் பாத்திரங்களுடனும் மட்டுமே வெளியேறி இன்று அகதியாகப் புதுக்குடியிருப்பில் வாழ்ந்து வருகின்றார். ஆம் மரணித்துப் போன அந்த நகரத்தை நோக்கி உயிர்த்துடிப்புள்ள மனிதர்களின் பயணம் அந்த நந்திக் கடல் நீரேரியூடாக ஆரம்பமாகியது. கோரைப் பற்றைகளும் பனைமரங்களுமாகக் காட்சியளித்த அந்த வரலாற்றுப் புகழ் பெற்ற நகரம் பேய்வாழ்ந்த வீடு போல் இருந்தது. உடைந்த கட்டிடங்கள் பற்றைகளால் மூடிப்போய் பாழடைந்து கிடந்தன. தூரத்தில் தெரிந்த இராணுவக் காவலரண்கள் அந்தப் போர்ச் சூழலில் ஒரு பயங்கரமான தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டு இருந்தன. அவர்களை அழைத்து வந்த போராளிகள் முன்னே செல்ல அவர்களைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பொது மக்கள் முழங்கால் அளவு தண்ணீர் ஊடாக நடந்து சென்று கொண்டிருந்தனர். அந்த ஆழம் குறைந்த நந்திக் கடலையும் கடந்து கடற்கரைக்கு வந்து சேர்ந்தவர்களுக்கு அங்கு இருந்த காட்சி பென்கெர் ஆங்கிலத் திரைப் படம் பார்த்தது போன்று திகிலூட்டுவதாக இருந்தது. அந்தக் கடற்கரை நீளத்திற்கு இரண்டு மூன்று அடிகளுக்கு ஒன்றாக ஆயுதம் தாங்கிய போராளிகள் பெருந்தொகையாக தயார் நிலையில் நின்றனர். கடலில் கடற்புலிகளின் நூற்றுக்கணக்கான அதிவேகப் பீரங்கிப்படகுகள் அணிவகுத்து நின்றன. அங்கிருந்து சுமார் மூன்று மைல் தூரம் வரை கடற்கரை மணலினூடாக நடந்து சென்று முல்லைத்தீவு இராணுவ முகாமின் மையப் பகுதியை அடைந்தனர். அங்கே இராணுவத்தினரின் மிகப் பெரிய தகவல் தொடர்புக் கோபுரம் சரிந்துபோய்க் கிடந்தது. சுற்றுப்புறமும் கிடக்கும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினரின் சடலங்கள் சிதறிக் காணப்பட்டன. அந்த சடலங்களையும் கடந்து போவதற்கு அவர்களுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. ஆம், தமிழ் மக்களை குண்டு வீசிக் கொன்றவர்கள், தமிழர் சொத்துக்களை நிர்மூலமாக்கி அழித்தவர்கள் காலம் காலமாக வாழ்ந்த மக்களை அவர்களின் சொந்த மண்ணிலிருந்து அடித்துத் துரத்தியவர்கள். அந்தப் போர் வெறியர்களின் இறந்த சடலங்கள் தெரு வீதிகளிலும் கட்டிட இடிபாடுகளிலும் காவலரண்களிலும் முட்கம்பிகளிலும் தொங்கிக்கிடந்தன.

கடந்த சில வாரங்களாக முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட நூற்றுக்கணக்கான ஆட்லறி எறிகணைகள் பசு மாடுகளை மட்டுமா கொன்றொழித்தன? தினமும் குறைந்தது ஒருவர் என்ற கணக்கில் மனித உயிர்களைப் பலிகொண்டு வந்தன. முள்ளியவளை விநாயகர் ஆலயத் தேரில் விழுந்த ஷெல் அந்தத் தேரையும் ஆலயத்தையும் சிதைத்து 15 இலட்சம் ரூபாவிற்கு மேல் நஷ்டத்தை ஏற்படுத்தியது. அந்த முகாம் வளவினுள் சென்ற பொதுமக்கள் வியப்புடன் சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டு நின்றனர். அவர்கள் இந்தப் பாரிய படைத்தளத்தினுள் வருவார்கள் என நினைத்துகூடப் பார்த்து இருக்கமாட்டார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்து வீடுகளை விட்டு வெளியேறி இனி தங்க தங்கட வீடுகளுக்கு எப்போ போகப் போகிறோம் என்றிருந்த அவர்களுக்கு முல்லைத்தீவு நகரம் ஒரு நம்பிக்கையைக் கொடுத்து விட்டது. அங்கே உதவி செய்தவதற்காக வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து விசுவமடுவில் வாழும் ஒருவரும் வந்திருந்தார். அந்தக் காட்சி அவர்களுக்கு ஒரு உத்வேகத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. "ஐயா தம்பிமாரே கெதியாய் ஓடி வாருங்கள். இந்தப் பெட்டிகளைக் கொண்டுபோய் வள்ளத்திலும், டிரக்டர்களிலும் ஏற்றுங்கோ" அங்கே நின்ற ஏனைய போராளிகளுக்கு கட்டளையிட்டுக்கொண்டு நின்ற ஒருவர் உரக்கக் கத்திக்கொண்டு நின்றார். அவரின் அந்த வேண்டுகோளைத் தொடர்ந்து முகாமின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மையப்பகுதியில் இருந்த மூட்டைகள் பெரிய பெரிய பெட்டிகள் எல்லாம் வெளியே கொண்டு வரப்பட்டன. கடலில் நின்ற வள்ளங்களிலும் டிராக்டர்களிலும் இவை ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. அங்கே ஆயிரக் கணக்கான பெண் போராளிகளும் ஆண்போராளிகளும் நின்று இயந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டு நின்றனர். போராளிகளுடன் சென்ற இளைஞர்கள் மட்டுமல்ல முதியவர்களும் கூட உற்சாகமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தனர். "அண்ணா இதைக் கொஞ்சதூரம் தூக்கிக் கொண்டு வந்து தாங்கோ" அங்கே ஒரு பெண் போராளி பெரிய பெட்டியை தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்தார். சிலர் ஓடிப்போய் அவற்றை வாங்கி தூக்கிக் கொண்டு போய் டிராக்டரில் ஏற்றினர். அதைப் போல் ஆயிரக்கணக்கான பெட்டிகள் வள்ளங்களில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. சிலர் இராணுவமுகாமின் ஏனைய பகுதிகளுக்கும் ஓடிச் சென்று ஆசை தீரப் பார்த்து பிரமித்துப் போய் நின்றனர். அங்கே கண்ட காட்சிகள் அவர்களை மலைக்க வைத்துவிட்டன.

அந்த அறை முழுவதும் பலகோடி ரூபாய் பெறுமதியான உணவுப் பொருள்கள் மட்டும் அடுக்கடுக்காய் இருந்தன. சீஸ்கட்டிகள், நூடில்ஸ் பக்கெட்டுகள், லிப்டன் தேயிலைப் பக்கட்டுகள், ஓவல்டின், மைலோ, நெஸ்டமோல்ட் பெட்டிகள், கோடியல் வகைகள், தகரத்தில் அடைத்த இறைச்சி, மற்றும் கறிகள், உணவு வகைகள், அரிசி மூடைகள், மா மூடைகள், தேங்காய்ப் பால் பைக் கற்றுக்கள் என்று ஏராளமான உணவுப் பொருள்கள் மூட்டை மூட்டையாக அடுக்கப்பட்டு இருந்தன. இந்தப் பண்டகசாலைகளில் சேமிக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களே பல கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று பார்த்தவர்கள் கூறிக்கொண்டார்கள். இவை யாவும் போதாதென்று பெட்டி பெட்டியாக சிகரட் பக்கெட்டுக்கள், வைன், பியர், சாராயம் போன்ற பல்வேறு மதுபான வகைகளும் கூட பெட்டி பெட்டியாக அடுக்கப்பட்டிருந்தன. "மச்சான் இதுகளை ஏற்றுவதற்கே பத்துநாட்களுக்கு மேல் போகும்" காலமையிலிருந்து வெயிலுக்க வேலை செய்கிறோம். ஒரே தண்ணி விடாயாய் இருக்குது என்றான் இளையவனான முரளி. "டேய் முரளி அங்கே பார் அந்தத் தட்டு நிறைய ஜூஸ் போத்தல்கள் அடுக்கிக்கிடக்குது" அவனும் அவனுடன் நின்ற ரமேஷும், அந்த அறை மூலையில் இரண்டு தட்டில் நீளத்திற்கு அடுக்கடுக்காக வைக்கப்பட்ட ஆயிரக்கணக்கான பலரக பழச்சாறு ஜூஸ் போத்தல்களைக் காட்டியதும் இருவரும் ஓடிச் சென்று அதில் ஒன்றை வாயில் கொட்டினர். அத்தகைய வெயிலிலும் தண்ணீர் தாகத்திலும் அனைவரும் ஓயாது வேலை செய்தனர். வெளியே கோச்சி நீளத்திற்கு நின்ற டிரக்ரர்களிலும் லொறிகளிலும் பெட்டி பெட்டியாக ஆயுத தளபாடங்களையும், எறிகணைகளையும், ரவைகளையும் ஏற்றி நிறைத்ததும் அவை ஒவ்வொன்றாக முகாமை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தன. வழியில் ஒரு சிறிய வீட்டின் முன்னால் அழகான "பொமேரியன்" நாய்க் குட்டிகள் இரண்டுகளில் ஒன்று கத்திக் கொண்டு இருந்தது. அந்த அழகான பெட்டை நாய்க்குட்டி வருவோர் போவோரைக் கைகாட்டி அழைப்பது போன்று முன்னம் கால்களை ஆட்டி ஆட்டிக் குரைத்துக் கொண்டிருந்தது. அது பிரிகேடியர் வளர்த்த செல்லப் பிராணியாம். அதனுடைய அழகையும் செயல்களையும் கண்ட ஒரு போராளி ஓடிப் போய் அந்த நாய்க் குட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து அவனது வாகனத்துக்குள் ஏற்றி விட்டான்.

ஜூலை மாதம் 17 ம் திகதி இரவு 12.30 மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் படையணிகளினால் தொடுக்கப்பட்ட இந்த அதிவேக தாக்குதலுக்கு "ஓயாத அலைகள்" எனப் பெயரிடப்பட்டது எவ்வளவு பொருத்தமானது. அன்றைய தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது ஓடி சுமார் நூறு மீற்றருக்கு அப்பால் உள்ள ஒரு தென்னை மரத்தில் ஏறி இருந்து தப்பிச் சென்ற இராணுவ கோப்ரல், பி.பி.சி நிறுவனத்திற்கு அளித்த பேட்டி சண்டையின் அகோரத்தை வெளிக்காட்டியது. "நாங்கள் அன்றும் வழமை போல் இராணுவக் காவலரண்களில் உசாராக இருந்தபோது அலை அலையாக ஆண்புலிகளும், பெண்புலிகளும் ஓடிவந்து அதிவேகத்தில் சுட்டுக் கொண்டு நாலாபுறத்திலும் இருந்து தாக்கினார்கள். அந்த நேரத்தில் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது திணறிவிட்டோம். முடிந்த வரை நாங்களும் எதிர்த்து சுட்டுக் கொண்டிருந்தோம். அவர்களின் துரிதமான அடியின் வேகம் தாங்க முடியாமல் என்னிடம் இருந்த ரவைகள் தீர்ந்ததும் ஓடிப்போய் தென்னை மரத்தில் ஏறி ஒழித்திருந்தேன். பின்னர் ஒரு ஜீப்பில் ஒரு புலி வந்து தமிழில் ஏதோ கூறியதைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான பொதுமக்கள் வந்து ஆயுதங்களையும், பொருள்களையும் இறந்த எங்களுடைய இராணுவத்தின் உடல்களையும் டிராக்டர்களில் ஏற்றிக் கொண்டு இருந்தனர். புலிகள் மற்ற தளத்திற்கு சென்றதும் நான் மரத்தில் இருந்து இறங்கி தப்பிச் சென்றேன்." அந்தப் 19 வயது சிங்களச் சிப்பாய் புலிகளின் இந்தப் புயல்வேகத் தாக்குதலினால் எந்த அளவுக்குப் பாதிக்கப்

**'ஓயாத அலைகள்'** கொல்லப்பட்ட இராணுவம் – வெற்றியின் நிதர்சனம்



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பட்டிருந்தார் என்பதை அவரது மருண்ட வெளுறிய முகம் காட்டிக் கொண்டிருந்ததாகச் செய்தியாளர் கூறினார்.

ஆம் கெரில்லா இயக்கமாகத் தோற்றம் பெற்ற விடுதலைப் புலிகள் இயக்கம் காலப் போக்கில் தரை, கடல் விமான வழித்தாக்குதல் ஊடாக வளர்ச்சி பெற்று ஒரு மரபு வழிப் படையணியாக முதிர்ச்சி பெற்றது. உலகில் விடுதலை இயக்கங்களுக்கு எல்லாம் முன்னோடியாகத் திகழ்கின்றது. இந்த முல்லைத்தீவு முகாம் சமர் தலைவர் பிரபாகரனால் நன்கு திட்டமிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு பல மூத்த தளபதிகள் மூலம் வழிநடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் ஆகும். "ரிவிரச" இராணுவ நடவடிக்கைகள் மூலம் விடுதலைப் புலிகளின் முதுகெலும்பை உடைத்து விட்டோம். அவர்கள் பின்வாங்கிப் போயுள்ளார்கள். அவர்களால் இனியொரு மரபு வழிப்போரை மேற்கொள்ள முடியாது. ஒழித்திருந்து கெரில்லாத் தாக்குதலையே மேற்கொள்ள முடியும். இன்னும் 25 வீதமான புலிகளே இருக்கின்றனர். அவர்களையும் விரைவில் ஒழித்து நாட்டில் அமைதி நிலையை ஏற்படுத்துவோம்" என்று உலகத்திற்கு பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த அவர்கள் அறிக்கை விடுத்து சில வாரங்கள்கூட ஆகவில்லை. இந்தப் பாரிய முகாம் மீதான தாக்குதல் நடத்தப்பட்டது, சிறீலங்கா அரசுக்கும் அவருக்கும் பேரதிர்ச்சியையும், உலகுக்கு திகைப்பையும் கொடுத்துள்ளது.

www.tamilarangam.net

இரவு 12.30க்கு ஆரம்பித்த தொடர்ச்சியான மோட்டார் தாக்குதலின் பின்னர் இராணுவ முகாமில் இருந்த எறிகணை பீரங்கிகளையும், கவசவாகனங்களையும் புலிகள் கைப்பற்றிவிட்டனர். அதனைத் தொடர்ந்து இராணுவ சிப்பாய்கள் எதுவுமே செய்ய முடியாத அளவுக்கு ஆயிரக்கணக்கான புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டனர். அன்று அந்த முகாமில் இருந்த 2 ஆட்லறி எறிகணைப் பீரங்கிகளை கைப்பற்றிய போராளிகள் அதனை உடனடியாக வெளியே கொண்டுவர முடியாமற் போய்விட்டது. அங்கே நின்ற பொதுமக்கள் அவற்றை அப்புறப்படுத்த படாதுபாடுபட்டனர். அங்கே ஓடி வந்த சிலர் தங்கள் தோள்களைக் கொடுத்து ஆட்டிலறியைத் தூக்க முயன்ற காட்சியைப் பார்த்து, வீரச்சாவு அடைந்தாலும் பரவாயில்லை என்று அங்கே நின்ற ஒரு போராளி உணர்ச்சி பொங்க கூறிக் கொண்டு நின்றார். ஆம் எமது மக்களைக் கொன்று, எமது மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய அந்தப் பிரமாண்டமான ஆட்லறிப் பீரங்கி முகாமின் முன் பகுதி மூலமாகக் கொண்டு வரப்பட்டு கடற்கரை வழியாக இழுத்துச் செல்லப்பட்டது. பூநகரித் தளம் விடுதலைப் போராட்டத்தில் டாங்கிப் பலத்தைக் கொடுத்தது. இன்று முல்லைத்தீவு தளம் ஆட்லறிப் பலத்தை பெற்றுக்கொடுத்தது. ஒரு மரபு வழி அணிக்கு இருக்க வேண்டிய அனைத்து தகுதிகளையும், வளங்களையும் பெற்றுள்ள நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இப்பொழுது புதிய பரிணாமத்தை அடைவதற்கு தளம் அமைத்துக் கொண்டு இருக்கின்றனர்.



'ஓயாத அலைகள்' உடல்களைப் பொறுப்பேற்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினர்

"ஏய் தம்பிமாரே கெலிகள் வருது அடிக்கப்போகிறாங்கள். அப்படியே விழுந்து படுங்கோ" அந்தமுகாம் பகுதியில் துரிதமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த மிக எடுப்பான தோற்றத்தைக் கொண்டிருந்த மூத்த போராளி ஒருவர் உரத்துக் கூறியபடி அங்கு ஓடி வந்து பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்துகொண்டிருந்தார். அந்தத் திடீர் எச்சரிக்கையைத் தொடர்ந்து அங்கே இருந்த பொதுமக்கள் சிதறி ஓடி தரையில் விழுந்து படுத்தவர்கள் ஒருபுறமும், கட்டிடங்களுக்குள் ஓடியவர்கள் ஒருபுறமும், தண்ணீர்த் தொட்டியின் கீழ் ஒழிந்து கொண்டவர்கள் எனவும் பதுங்கினர். கீழே விழுந்து முகம் குப்புறப் படுத்தவர்களில் பலர் இறந்து சிதறிக் கிடந்த இராணுவ சிப்பாய்களின் மத்தியில் கூட படுத்து இருந்தனர். அந்த நேரம் கடலோரமாக வரிசையாகப் பறந்து கொண்டிருந்த எட்டு கெலிகொப்டர்களில் இருந்து சரமாரியாக ரொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டனர். அவற்றிலிருந்து ஏவப்பட்ட பல ரொக்கட்டுகளும் குண்டுகளும் கடற்புலிகளின் பீரங்கிப் படகுகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டன. கடற்புலிகள் கீழே இருந்து எதிர்த் தாக்குதல் செய்ததை அடுத்து அவைகள் மேலே ஏறி உயரத்தில் பறந்து மறைந்தன.

"இது என்ர வாழ்க்கையில் என்றைக்கும் மறக்கேலாது" அங்கு நின்ற பொதுமக்களில் ஒரு நடுத்தர வயதுடைய அரச ஊழியராகிய செல்லத்துரை சொன்னார்.

1990ம் ஆண்டு முல்லைத்தீவு நகரை விட்டு இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டோர்களில் அவரும் அவரின் குடும்பத்தினரும் அடங்குவர். அவர்கள் முள்ளியவளையில் அகதியாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இன்று ஆறு வருடங்களின் பின் தான் பிறந்த மண்ணை முத்தமிட்ட மகிழ்ச்சியில் அவரது உள்ளம் குதூகலித்துக் கொண்டிருந்தது. முல்லைத் தீவு முகாமின் மையப்பகுதியில் ஆட்லறி நிலைக்கு அடுத்து பிரதான தபாற் கட்டிடம் உள்ளது. அதைத் தொடர்ந்துள்ள அரசுக் கட்டிடங்களான கச்சேரி, பொது வேலைப்பகுதி, நீதிமன்றக் கட்டிடங்கள், சிறீலங்கா காவல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

துறை, அதற்கெதிராக இலங்கை வங்கிக் கட்டிடம் அதையடுத்து பொது நூல்நிலையம் என்பன அமைந்துள்ளன. அங்குள்ள பெருமளவு அரச கட்டிடங்களில் பெருந்தொகையான புத்தம் புதிய ஆயுதத் தளபாடங்களும் உணவுப் பண்டங்களும் சேமிக்கப்பட்டிருந்தன.

ஆங்காங்கே நின்ற பல வீடுகளின் கூரைத்தகடுகளும், மரங்களும் கழற்றப்பட்டு மொட்டையாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தன. அந்த வீடுகளின் கூரைத் தகடுகள் இராணுவக் காவலரண்கள் அமைக்கவும் போலி அரண்கள் அமைக்கவும் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டு இருந்தன. பல வீடுகள் இராணுவப் படையணிகளின் பல்வேறு பிரிவுப் பொறுப்பாளர்கள் மேஜர், கப்டன் தரப்பினர் தங்கப் பயன்படுத்தப்பட்டு வந்தன. அந்த வீடுகள் மிக அழகாகவும் நவீன வசதிகளுடனும் இருந்தன. அங்கே சென்ற நூற்றுக்கணக்கான மக்கள் போராளிகளுடன் சேர்ந்து அந்த முகாமைத் துடைத்து வழித்துக் கொண்டு இருந்தனர். சில வீடுகளில் இராணுவத்தினரின் பிடியில் சிக்குப்பட்டு கைதிகளாக இருந்த பொதுமக்கள் சிலரை போராளிகள் அழைத்து வந்து லொறிகளில் ஏற்றினார்கள். அவர்களில் ஒரு வயோதிபப் பெண் நடக்கமுடியாது கஷ்டப்பட்டபோது இரண்டு போராளிகள் அவரைத் தூக்கி வந்ததைப் பார்த்த மக்கள் ஒரு நல்ல மீட்பராகவே அவர்களை அங்கு கண்டனர். 1990ம் ஆண்டு இராணுவ முற்றுகையின் போது அந்த நகரமே இடம் பெயர்ந்து ஓடிய போது உறவினர்களாலும், உடன்பிறப்புக்களாலும் கைவிடப்பட்ட பதினேழு பேர் இராணுவத்தின் கையில் சிக்குண்டு அடிமை வாழ்வுக்கு இழுத்துச் செல்லப்பட்டிருந்தனர். அந்த இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்து விடுவிக்கப்பட்ட அறுபது வயதை உடைய பெண் ஒருவரிடம், இந்த ஆறு வருட காலமும் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று விசாரித்தபோது, நாங்கள் 17 பேர் மட்டுமே இராணுவத்துடன் இருந்தோம். எங்களுக்கெனத் தனியாக ஒன்று செய்யமுடியாது. ஆடுகள் வளர்ப்பதும் அவற்றிக்கு வேண்டிய உணவுகளைச் சேகரிப்பதுமே தொழில். அவற்றை இராணுவத்திற்கு கொடுக்க வேண்டும். அவர்கள் மூன்று நேரமும் சோறு தருவார்கள் என்று கூறினார். தனது கொத்தடிமை வாழ்வு பற்றி குறிப்பிட்ட அந்த பெண்ணின் முகத்தில் விடுவிக்கப்பட்ட பூரிப்பு இருந்தது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

## உலங்குவானூர்திகள் தரை இறங்குவதற்காக
## முழுக் கிராமத்தையே அழித்து தளம் அமைத்திருந்த சிறீலங்கா இராணுவம்

முல்லைத்தீவு நகரப் பகுதியையும், அதனை அண்டியிருந்த பல கிராமங்களையும் ஆக்கிரமித்து படைத்தளப் பிரதேசமொன்றை அமைந்திருந்த சிறீலங்கா இராணுவத்தினர் – முகாமுக்கு இராணுவத்தினரையும் பொருட்களையும் ஏற்றியிறக்கும் உலங்குவானூர்திகள் தரையிறங்குவதற்காக – முழுமையாக ஒரு கிராமத்தை அழித்து தரையிறங்கு தளத்தை அமைத்திருந்தமை தெரியவந்துள்ளது.

வண்ணாங்குளம் என்ற கிராமத்திலுள்ள வீடுகள் உடைக்கப்பட்டு – கிராமம் தரைமட்டமாக்கப்பட்டு உலங்குவானூர்திகள் தரையிறங்குவதற்கான தளம் அமைக்கப்பட்டிருந்தது.

அத்தோடு, செல்வபுரம், கள்ளப்பாடு ஆகிய கிராமங்களின் வீடுகளையும் உடைத்து நாசப்படுத்தி பெரும் காப்பரண்கள் கட்டுவதற்காக இராணுவத்தினர் பயன்படுத்தியுள்ளனர். முல்லைத்தீவு நகரப்பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் பலவற்றையும் குண்டுவைத்து தகர்த்து பெரும் அழிவுக்குள்ளாக்கியிருக்கிறார்கள். இவ்வாறு இராணுவம் புரிந்த அழிப்பு நடவடிக்கையால் மக்கள் தமது இருப்பிடங்கள் கூட அடையாளம் காணமுடியாத அளவுக்குச் சிதைந்து உள்ளன. இத்தனைக்கும் மத்தியிலும் தமது வீடுகள் இருந்த இடங்களைத் துப்பரவு செய்து வருகின்றனர் மக்கள்.

முல்லைத்தீவு இராணுவம் ஆக்கிரமித்த வேளை அங்கு இயங்கி வந்த அரச திணைக்களங்களிலிருந்து அதிகாரிகள் எடுக்க முடிந்ததை மட்டும் எடுத்துக்கொண்டு அவ்வேளை வெளியேறியிருந்தனர். பெரும் பகுதி கட்டிடங்கள் அங்கேயே இருந்தன. ஆனால் தற்போது முல்லைத்தீவுப் பகுதி விடுதலைப் புலிகளின் பெரும் சமரின் பின்னர் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு சென்று பார்த்தவேளை முல்லை அரச செயலகம் மட்டுமல்ல அங்கிருந்த அனைத்து வளங்களும் இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளதைக் காணமுடிந்தது. முல்லைத்தீவு மாவட்ட கல்வித்திணைக்களம் சேதமாக்கப்பட்ட நிலையில் உள்ளது. மாவட்ட வைத்தியசாலை வளவு பெரும் காடாகக் காட்சியளிக்கின்றது. கட்டங்கள் முற்றாக சேதமடைந்துள்ளன. மாவட்டப் பதிவாளர் அலுவலகம் பனை மரங்களால் சூழ்ந்துள்ளது. மக்கள் வங்கிக் கட்டடம் முற்றாக அழிக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. பாடசாலைகளும் சேதமாக்கப்பட்ட நிலையில் உள்ளதை அவதானிக்க முடிந்தது. பற்றைகளால் மூடியிருந்த வீதிகள் தற்போது திருத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாக்குதல் திறனும் தற்காப்புப் பலமும்

வடக்குப் போர்முனையில் அண்மையில் இடம்பெறும் நிகழ்வுகள் சிறீலங்கா இராணுவ வட்டாரங்களைப் பெரும் குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ள அதேவேளை இராணுவ ஆய்வாளர்களைப் பொறுத்து பெரிதளவு அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. அந்தளவிற்கு வடக்கில் இருந்து கிடைக்கும் போர்முனைச் செய்திகள் உள்ளன. அதாவது விடுதலைப் புலிகளின் பலம் என்ன? அவர்களின் பலம் பற்றி எவவாறு கணிப்பீடு செய்வது என்பதே கேள்விக்குரியவையாகும். ஏனெனில் சிறீலங்கா பிரதிப் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, "விடுதலைப் புலிகளின் இயக்கம் 70 விகிதம் வரை அழிக்கப்பட்டுவிட்டது" எனக் கூறிக்கொண்டு இருக்கையில் பெரும் மரபு வழி மோதல்களை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாக நடத்தியுள்ளனர். "விடுதலைப் புலிகள் இயக்கம் மரபுவழித் தாக்குதல் ஒன்றை நடத்தும் வலுவை முற்றாகவே இழந்துவிட்டது. சிறுசிறு கெரில்லாத் தாக்குதல்களை நடத்தும் ஆற்றல் மட்டுமே அதனிடம் உள்ளது" என 'ரிவிரச' நடவடிக்கையின் பின்னர் இராணுவத் தரப்பினராலும் விமர்சகர்களாலும் கணிக்கப்பட்டது. ஆனால், முல்லைத்தீவு படைத்தளம் மீதான புலிகளின் தாக்குதலும், கிளிநொச்சி மீதான படையெடுப்பின் மீதான புலிகளின் எதிர்த்தாக்குதலும் இன்று பல புதிய கேள்விகளை எழுப்பி வைத்துள்ளது.

முல்லைத்தீவு படைத்தளம் மீதான புலிகளின் தாக்குதல் நடவடிக்கையானது, நவீன இராணுவ வரலாற்றில் முக்கியமானதொன்றாகும். ஏனெனில் போர் வரலாற்றில் ஒரு குறுகிய காலத்திற்குள் பெருந்தொகையில் இராணுவத்தினர் பலியானது சாதாரணதொரு விடயம் அல்ல. அத்தோடு இராணுவத்தினால் இழக்கப்பட்ட போர்த்தளபாடங்களும் புறந்தள்ளிவிடக்கூடிய தொகையைக் கொண்டிருக்கவில்லை. முல்லைத்தீவு இராணுவத் தளம் மீதான புலிகளின் தாக்குதலானது நன்கு உளவு பார்த்து, திட்டமிடப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டதாகும். இந்த வகையில் ஆயிரக்கணக்கான போராளிகளை ஒழுங்காக நெறிப்படுத்தி வெற்றிகரமாக நடத்தப்பட்ட மரபுவழி தாக்குதல் நடவடிக்கைகளில் இது முதன்மை பெறுகின்றது. இத்தாக்குதல் திட்டமானது இராணுவ போர் யுக்திகளுள் முக்கிய இடம் பெறக்கூடியதும் ஆகும். இதே சமயம் கிளிநொச்சி நோக்கிய இராணுவத்தினரின் படையெடுப்பு பல ஆயிரக்கணக்கான துருப்புக்கள், டாங்கிகள், கவச வாகனங்கள், ஆட்டிலறி எறிகணைகள், எறிகணைச் செலுத்திகள் என்பனவற்றுடன் மேற்கொள்ளப்பட்ட பாரிய நடவடிக்கையாகும். இந்த நிலையில் படையினரை புலிகள் இதுவரை தடுத்து நிறுத்தியமையும், இராணுவத்திற்கு பலத்த இழப்பை உண்டு பண்ணியமையும் தற்காப்பு போர் முறை என்ற ரீதியில் முக்கியமானதாகும். அதாவது மரபு வழிப் போர் முறையில் தாக்குதல், தற்காத்தல் என்ற இரு வடிவங்களிலும் புலிகள் வெற்றிகரமான போர் நடவடிக்கைகளை நடாத்தியுள்ளனர். இந்த நிலையிலேயே இராணுவ வட்டாரங்களிலும், இராணுவ ஆய்வாளர்கள் மத்தியிலும் இன்று எழுந்துள்ள அதிர்ச்சிக்கும் ஆச்சரியத்திற்கும் காரணமாகும். ஏனெனில் புலிகள் மரபு வழிப் போர்முறைகளை எதிர்கொள்ள மாட்டார்கள் எனக் கூறியவர்களுக்கும் எதிர்பார்த்தவர்களுக்கும் இது பெரும் குழப்பத்தை உண்டாக்கியுள்ளது. இதில் தற்பொழுது இராணுவம் இடைநிறுத்திய கிளிநொச்சி மீதான தாக்குதலை மீண்டும் தொடங்கலாம். ஆனால், இதில் முக்கியமான விடயம் என்னவென்றால் இராணுவம் தனது பலத்தை அதிகரிக்கும் அதேவேளை தனது தாக்குதல் திட்டத்தை இரு பிரிவு படுத்தி மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. மேலும், இராணுவம் புலிகள் தொடர்பாக கொண்டிருந்த மதிப்பீட்டை மீள்பரிசீலனை செய்வதாக இருக்கும் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், சிறீலங்கா இராணுவத் தரப்பினர் மட்டுமல்ல, இராணுவ ஆய்வாளர்கள், மற்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தொடர்ச்சியாக அவதானித்து வருபவர்களும் விடுதலைப் புலிகளின் வளர்ச்சியை மட்டுமல்ல தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பரிணாமத்தையும் விளங்கிக்கொள்ள இது உதவியாக இருந்திருக்கும். இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்று கூறுபவர்களை தெளிவான சிந்தனையுடன் இருப்பவர்கள் கொள்ளமுடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சத் ஜய :

யூலை மாதம் பதினாட்டம் திகதி ஆரம்பித்தது 'ஓயாத அலைகள்', வரலாற்றுப் பெருமிதத் தைச் சுமந்து நெஞ்சை நிமிர்த்தி அது உலகிற்குத் தன்னை இனம்காட்டிக் கொண்டது. இரண்டு நாளிலேயே முல்லைப்படைத்தளம் முழுமையை யும் விடுதலைப் புலிகளின் கைகளில் வந்தது. அடுத்த ஓரிரு தினங்களி லேயே சுற்றுவட்டாரத்திலும் சிங்களக் கொடுங்கோன்மையினரின் பாதச் சுவடுகள் துடைத்தெறியப்பட்டு முல்லை நகர் சுத்தப்படுத்தப்பட்டது. அதற்கிடையில், முல்லைத்தீவு முகாம் எக்காரணம் கொண்டும் மூடப்படமாட்டாது, எக்காரணம் கொண்டும் அதனைக் கைவிடமாட் டோம் என, சிறீலங்காவின் பாது காப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த சூழுரைத்து அனுப்பிவைத்த படை, பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் முல்லைப்படைத்தளத்தில் இருந்து சுமார் பத்து கிலோமீற்றர் தொலைவில் அலம்பிலிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இறக்கப்பட் டது. ஆனாலும் நிலைமையை முன் னரேயே எடைபோட்டிருந்த விடுத லைப் புலிகள் அவர்களைச் சுற்றி வளைத்துக் குறிவைத்தனர். நகர முடியாத இறுக்கமான பொறியில் சிக்கிக்கொண்ட படையினர் வாழ் வுக்கும் சாவுக்கும் இடையில் போரா டிக்கொண்டிருந்தனர். விடுதலைப் புலிகளோ பாதுகாப்பாக நிலை எடுத்து எதிரிகளிடம் இருந்து கைப் பற்றிய ஆயுதங்களைக் கொண்டே எதிரிகளைத் தாக்கினர். இங்கு கள நிலைமை இப்படியிருக்க, கொழும் பில் குளுகுளு அறையில் இருந்து கொண்டு அமைச்சர்கள் விடும் அறிக்கை வேறுவிதமாக இருந்தது. முல்லைத்தீவு முகாமுக்கு அனுப்பப் பட்டுள்ள மேலதிக படையினர் முகாமில் உள்ள படையினருடன் எந்த நேரத்திலும் இணைந்துகொள் வார்கள், முல்லைத்தீவு முகாமின் ஒரு பகுதியில் இருந்துகொண்டு படையினர் புலிகளுடன் சண்டை யிட்டு வருகின்றனர் என்றெல்லாம் அமைச்சர்கள் இலகுவாக செய்திகள் தந்து கொண்டிருந்தனர்.

ஆனால் களநிலைமை வரலாறு காணாத ஒரு பெரும் தோல்வியை அரசின் தோள்களில் சுமத்திக்கொண் டிருந்தது. யாழ் வெற்றி என்ற உள்ளீ டற்ற பொய்மைத் தோற்றம் பொசுங் கிக்கொண்டிருந்தது. எதிர்காலத்தில் மீளமுடியாத ஒரு கிடுக்குப் பிடியில் அரசு சிக்கிக்கொண்டிருந்தது. உண்மை இப்படியிருக்க பொய்மை கள் வேறு முகத்தில் ரூபவாஹினி யில் தோன்றின.

உண்மையை எவ்வளவுகாலம் திரையிட்டு வைப்பது. முழுப்பூசனிக் காயை சோற்றில் மறைக்க முடியுமா..? ஆனால் மறைக்க முனைந்தார்கள், சத்ஜய இராணுவ நடவடிக்கையின் வாயிலாக.

சத்ஜய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது யூலை இருபத் தாறில். இந்த இராணுவ நடவ டிக்கை ஆனையிறவில் இருந்து கிளி நொச்சியை நோக்கி, கையறுநிலை யில் சடுதியாக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நகர்வு என்பது இராணுவ விவகாரங்கள் புரியாதவர்களால் கூட புரிந்து கொள்ளக்கூடியதே.

முல்லைத்தீவு முகாமைக் காப் பாற்றப் போனவர்கள் காப்பாற்று வார் இன்றி, மாழ்வதைத் தவிர மீளும் வகையறியாமல் திகைத்து நிற்க, இந்த சத்ஜய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. ஆனையிறவில் இருந்து கெடுகாலத்தில் புறப்பட்ட





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# (அ) சத்தியத்தின் தோல்வி

இராணுவம் பரந்தனில் தடுத்து நிறுத்தப்பட்டு தாக்கப்பட்டது. கடும் எதிர்ப்பு இன்றி பரந்தன் வரை முன்னேறிய சிறீலங்காப் படையினர் பத்துநாட்கள் பரந்தனிலேயே தரித்து நின்று, தமது நிலைகளைப் பலப் படுத்தி, மீண்டும் அடுத்த நகர்வை ஆகஸ்ட் மாதம் *5* ஆம் திகதி ஆரம் பித்தனர். முன்னர் குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட சூரியக்கதிர் கள், போல் இது சுலபமாக இருக்க வில்லை. வான்வழியாகக் குண்டுக ளைச் சொரிந்தபடி, எறிகணைகளை மழைபோல் பொழிந்தபடி, டாங்கி கள் கனரக வாகனங்கள் சகிதம் புறப்பட்ட இராணுவத்தினர் சொற்ப தூரத்தில் வைத்தே கடுமையாகத் தாக்கப்பட்டனர். உறுதியான முடிவு டன் விடுதலைப் புலிகள் தாக்கு தலை நடத்தினர். பெரும் எடுப்பி லான இந்த நகர்விற்கு விடுதலைப் புலிகள் முகம் கொடுக்காமல், குடாநாட்டில் பின்வாங்கியது போல் பின்வாங்குவர்; நகர்வு சுலபமாய் அமையும் எனத் திட்டம் வகுத்தோர் தப்புக்கணக்குப் போட்டிருக்கக் கூடும். ஐந்தாம் ஆறாம் திகதிகளில் நடந்த சண்டையில் ஆறு யுத்த டாங் கிகள் அழிக்கப்பட்டன. நூற்றிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல் லப்பட்டனர். மேலும் பலர் படு காயப்படுத்தப்பட்னர். இரண்டு நாள் சண்டையில் பெருமளவில் இரா ணுவ வளங்களை இராணுவம் இழந் தது. பரந்தனில் இருந்து முன்னேறிய படையினர், மீண்டும் ஒரு தோல்வி யைச் சுமந்துகொண்டு பரந்தனுக்குப் பின்வாங்கியுள்ளனர்.

காலப் பொருத்தமின்றித் தொடங் கப்பட்ட இந்த சத்ஜய இராணுவ நட வடிக்கையின் தேவை என்ன என்ப தற்கு ஒரு காரணம் வெளிப்படை யாக சொல்லப்படுகின்ற போதும், இதற்கு இன்னுமொரு காரணமும் காட்டப்படுகின்றது. முல்லைத் தீவைக் காப்பாற்றவென, அமைச்சர் ரத்வத்தையால் அனுப்பிவைக்கப் பட்ட படையினர் விடுதலைப் புலிக ளால் சுற்றிவளைக்கப்பட்டு தாக்கப் பட்டுக் கொண்டிருந்த அதேவேளை, அவர்களை மீட்டெடுப்பதற்கு வழி



தேடிய சிறீலங்கா பாதுகாப்பு உயர் பீடம், இந்த சத்ஜயவைக் கண்டு பிடித்ததாகச் சொல்லப்படுகின்றது. ஒருமுகப்பட்டிருந்த விடுதலைப் புலி களின் கவனத்தை, சிதறடித்து படை யினரைக் காப்பாற்ற அரசாங்கம் திட்டமிட்டதாகக் கருதப்படுகின் றது.

அதாவது விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் இருந்து, சிக்கிய படையினரை இழுத்தெடுக்க அரசு கையாண்ட உத்தி என சொல்லிக் கொள்கின்றார்கள். கிளிநொச்சி வரை முன்னேறுவது, முடிந்தால் தரைப் போக்குவரத்துப் பாதை ஒன்றை அமைப்பது என்ற அடிப் படையில், முன்னர் வரைந்த திட்டத் திற்கு திடீரென உயிர் கொடுத்து நகரவிட்ட அரசு, இதன் மூலம் இரு காரியங்களைச் சாதித்துக் கொள்ள லாம் என நம்பியிருக்கக்கூடும். முல் லைத்தீவில் அப்பிக் கொண்ட சகதி யைத் துடைப்பது, சிக்குண்ட படை யினரைக் காப்பது என்ற வகையில் அது சிந்தித்திருக்கக்கூடும்.

எது எப்படி இருப்பினும், இரு களநிலையிலும் விடுதலைப் புலிகள் தமது உறுதியான பலத்தை வெளிக் காட்டியுள்ளனர். முல்லைத்தீவை சுத்தப்படுத்தி மக்களின் வளமான வாழ்க்கைக்கு பாதை திறந்த விடுத லைப் புலிகள், கிளிநொச்சி நோக்கிய இராணுவத்தின் ஆக்கிரமிப்புப் பாதைக்கும் ஆப்பு வைத்தனர்.

**— சுப்பு**



'சத்ஜய' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்கு சில நாட் களுக்கு முன்னராகவே, கிளிநொச்சி நோக்கிய பெருந்தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டன. குண்டுவீச்சுத் தாக் குதல்களும் எறிகணைத் தாக்குதல்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட் டன. இடியுடன் கூடிய கெந்தக மழை யில் கிளிநொச்சி நகர் நனைந்தே போனது. யூலை 26ல், தாக்குதலை இன்னும் தீவிரப்படுத்திக்கொண்டு, சிறீலங்கா இராணுவத்தினர் ஆனையிறவில் இருந்து பரந்தன் வரை முன்னேறினர். இந்த முன்னேற்றத்திற்காக, ஏற்கனவே இடம்பெயர்ந்து பெரும் துன்பச் சுமையில் வாடிய மக்கள், அடுத்த ஒரு இடப்பெயர்வுக்குத் தள்ளப்பட்டனர். சுமார் இரண்டு இலட்சத்துக்கு அதிகமான மக்கள் 'சத்ஜய' இராணுவ நடவடிக்கையால் வேரிழந்த மரங்களாய் காடுகளுக் குள்ளும் வீதியோரங்களிலும் வீசியெறியப்பட்டனர். கிளிநொச்சி செயலகம் மூடப்பட்டது, வைத்தியசாலை மூடப்பட்டது, பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டன. மக்களுடன் சேர்ந்து சர்வதேச தொண்டர் நிறுவனங்களும் இடம்பெயர்ந்தன. சத்தியவெற்றி என்று பொருள்தரும் குறியீட்டுப் பெயரில் மேற்கொள்ளப்பட்ட இந்த அதர்மம், வைத்தியசாலையைச் சிதைத்தது, பாடசாலைகளைப் பதம்பார்த்தது. மதவழிபாட்டுத்தலங்களையும் அந்த பௌத்த சிங்கள இனவெறி விட்டுவைக்கவில்லை. வீடுகள், கடைகள், பொதுச்சந்தைகள் என, எதுவும் அவர்களின் குறியில் தப்பவில்லை. இஸ்ரேல் தயாரிப்பு கிபிர் ஜெற் விமானங்கள் தேடி நடாத்திய வெறித்தாக்குதலில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; பலர் படுகாயமடைந்தனர்; பலர் அங்கவீனமாகினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# சிறீலங்காவில் அமெரிக்க விசேட படையினர்: இலக்கு என்ன?

அமெரிக்க விசேட படைப் பிரிவினரின் சிறப்புப் பயிற்சி பற்றிய செய்தியை, அதாவது அமெரிக்க விசேட படையினர் விரைவில் சிறீலங்கா இராணுவத்துக்கு பயிற்சி அளிக்க வருவர் என்பதை சிறீலங்கா அரசாங்கம்தான் முதலில் வெளியிட்டது. அரசாங்கம், இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெரி டி சில்வா இளைப்பாறும் போது, 30, ஏப்ரல் 96ம் திகதி, அதற்கென நடந்த வைபவத்தில் அவருக்கூடாக அதனை வெளிப்படுத்த விரும்பியதோ தெரியவில்லை. அல்லது ஜெரி டி சில்வா, தான் பதவி வகித்த காலத்துச் சாதனையாக அதனைக் கூற எண்ணினாரோ என்பதும் தெளிவில்லை. பிரான்ஸ், இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு இராணுவ உதவிகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட பின்னரே அவரது இளைப்பாற்று வைபவமும் இடம்பெற்றது. ஆயினும், மனஉறுதி குலைந்து போகும் இராணுவத்தினரையும், சிங்கள மக்களின் இனவாதப் பிரிவினரையும் திருப்திப்படுத்தும் அரசியல், இராணுவ நோக்கங்களுக்காக அரசாங்கம், தனது சார்பில் அமெரிக்க இராணுவம் நேரடியாகத் தலையிடுவதாக பகிரங்கமாகப் பீற்றிக்கொள்ள விரும்பியது என்பது உண்மையே. ஆனால், அமெரிக்கா, இத்தகு செய்தி வெளிவருவதை கிஞ்சித்தும் விரும்பவில்லை. பின்னர் *'Sunday Leader'* என்ற கொழும்புப் பத்திரிகை வெள்ளைநிற இராணுவ அதிகாரிகளின் படத்தை தனது பத்திரிகையில் வெளியிட்டு "சிறீலங்காவில் ஓரிடத்தில் காணப்படும் 'மற்றவர்கள்'" என்று புதிர் போட்டிருந்தது. பின்னர், அமெரிக்க *Seattle Times* என்ற பத்திரிகை தனது 28, யூன் 96 திகதியிலும், *Dallas Morning News* என்ற பத்திரிகை 30, யூன் 96 திகதியிலும் *Marc Kaufman* என்பவரின் நேரடி அறிக்கையை வெளியிட்டன. இரத்தம் சிந்தும் உள்நாட்டுப் போரில் பச்சைத் தொப்பிகளின் பங்கு (*Green Berets playing role in Bloody Civil war*) என்ற தலைப்பில் நீண்டதொரு கட்டுரையை அவர் வரைந்திருந்தார். வீரவில என்னும் இடத்தில் அமெரிக்க பச்சைத் தொப்பிகள் 12 பேர் சிறீலங்கா இராணுவத்திற்குப் பயிற்சி கொடுப்பதை தான் நேரில் கண்டதாகவும், அவர்களுடன் உரையாடியதாகவும் அவர் விபரித்திருந்தார். அவர்கள், காயம்பட்ட இராணுவத்தினரை களத்தில் இருந்து அகற்றும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உத்திகள், வானொலி தொலைதொடர்பு, களத் தொழில்நுட்பம் ஆகிய பிரிவுகளில் பயிற்சி அளிப்பதாகவும், அடுத்ததாக நிஜ வெடிபொருட்களைப் பயன்படுத்தி சுடுதல் பயிற்சியில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்திருந்தார். சமநிலை வடிவம் *'Operation Balanced Style'* என்ற குறியீட்டுப் பெயரிடப்பட்டுள்ள இப் பயிற்சிப் பணி, வளைகுடாப் போரின் போது, சிறீலங்கா அரசாங்கம், அமெரிக்க இராணுவ விமானங்களுக்கு எரிபொருளை மீள் நிரப்புவதற்காகப் பயன்படுத்த தனது விமானத்தளங்களைக் கொடுத்தமைக்கு நன்றிக்கடனாக கடந்த இரண்டு வருடங்களாக நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

அபாயகரமான ஆயுதங்களை சிறீலங்காவுக்கு (உள்நாட்டுச் சண்டைகள் இடம்பெறும் நாடுகளுக்கு) விற்பதில்லை என்ற தடையையும் அமெரிக்கா எடுத்துவிட்டதாக தெரிவிக்கிறார். அண்மையில், 6 ரோந்துப்படகுகளை அமெரிக்கா சிறீலங்காவுக்கு விற்றதாகவும், துப்பாக்கிகள், இராணுவ ஹெலிகொப்டர்கள் ஆகியவற்றை விற்பதற்கான பேச்சுவார்த்தை நடைபெறுவதாகவும், சிறீலங்கா இரவுப் பார்வைக் கருவிகளைக் *(night vision equipment)* கேட்டுள்ளதாகவும் கூறுகிறார். செய்மதி வழியாக படம் பிடிக்கும் தொழில்நுட்பத்தை அமெரிக்கா மறுத்துவிட்டு, அவற்றை இஸ்ரேலிடம் பெறுமாறு கோடிகாட்டியதாகவும் அவர் கூறியுள்ளார். அமெரிக்க இராணுவத் தலையீட்டிற்கான தந்திரோபாய காரணமாக பின்வருவனவற்றைக் கூறுகிறார். சிறீலங்கா, மத்திய கிழக்கிற்கும், சீனா உட்பட்ட தூர கிழக்கிற்கும் நடுவே கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருப்பதாகவும், பெரிய அயல் நாடான இந்தியாவிற்கு ஈடுகொடுக்க தனது மண்ணில் அமெரிக்காவின் இருப்பை சிறீலங்கா விரும்புவதாகவும் அவர் தெரிவிக்கிறார். லண்டனிலிருந்து வெளிவரும் *'Hot Spring'* பத்திரிகை நிருபர் *Mr. Marc Kaufman* ஐ தொடர்புகொண்டபோது, செப்டெம்பர் மாதத்தில், இன்னும் கூடுதலான பச்சைத் தொப்பிகள் சிறீலங்காவிற்கு வரப்போவதாகவும், சிறீலங்கா அரசாங்கம் மனித உரிமைகளைப் பேணுவதில் தான் முன்னேற்றம் கண்டதாகக் காட்ட முயல்வது இவ் இராணுவ உதவிக்கு ஒரு காரணம் என்றும் கூறியிருந்தார். அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களம் இதனை மறுத்துள்ளதை சுட்டிக்காட்டியபோது, பயிற்சி உண்மைதான் என வலியுறுத்திய அவர், வெளிவிவகாரத் திணைக்களம் தமிழ் மக்களுக்குத் தவறு இழைப்பதாகவும் சொல்லியிருந்தார். சிறீலங்காவின் மனித உரிமைகளில் முன்னேற்றம் என்ற விடயத்தை சர்வதேச மன்னிப்புச் சபையின் அமெரிக்கப் பிரிவு கடுமையாக மறுத்து, உலகிலேயே சிறீலங்கா ஆட்களைக் காணாமல் செய்வதில் இரண்டாவது இடத்தை வகிப்பதாக அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களத்திற்குச் சுட்டிக்காட்டியது. அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபையின் லண்டன் தலைமையகமும், சிறீலங்காவை இவ் விடயத்தில் கடுமையாகக் கண்டித்திருந்தது. 11, ஓகஸ்ட் 96 திகதியிட்ட *'The Sunday Times'* கொழும்புப் பத்திரிகையில் இது குறித்துக் கட்டுரை எழுதிய தராக்கி, அமெரிக்க அரசாங்கம், உள்நாட்டுப் பிரச்சினையில் இவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பதற்கும், இரணவிலவில் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் (VOA) கட்டப்படுவதற்கும் இடையில் தொடர்பிருப்பதாக சில தமிழர்கள் கருதுவதாக குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க அரசாங்கம், செய்மதி படம்பிடிக்கும் தொழில்நுட்பத்தை சிறீலங்காவிற்கு வழங்க மறுத்துவிட்டதை உறுதிப்படுத்தும் அவர், நவீன கண்காணிப்புக் கருவிகளை *(advanced surveillance technology)* இஸ்ரேலிடமிருந்து பெறுவதற்கு அமெரிக்கா உதவிசெய்துள்ளதாக விடுதலைப் புலிகள் கூறுவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இஸ்ரேலிடமிருந்து வாங்கப்பட்ட கிபிர் *(Kfir)* விமானங்கள் இத்தகைய குறிப்பிட்ட இலக்குகளை நுட்பமாக அடையாளம் காட்டக் கூடிய கருவிகளைக் கொண்டிருக்கலாம் என்று விடுதலைப் புலிகள் எண்ணியிருக்கக்கூடும் என்றும் மேலும் தெரிவிக்கிறார்.

பி.பி.சியின் டெல்லி நிருபர் ஜோர்ஜ் ஆனி *(George Arney)* இது குறித்து வெளியிட்ட செய்தியறிக்கையில், இவ வருடக் கோடை காலத்தில் பல டசின் பச்சைத் தொப்பிகள் உட்பட்ட அமெரிக்கத் துருப்புக்கள் சிறீலங்காவில் பயிற்சிச் செயற்பாடுகளில் ஈடுபட்டதை உண்மையென்று அமெரிக்க அதிகாரிகள் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார். தென்னாசியப் பிராந்தியத்தில் பூட்டான் தவிர்ந்த ஏனைய நாடுகளில் பல வருடங்களாக நடைபெறும் சிறியரக பயிற்சித் திட்டம் என அவர்கள் வலியுறுத்துவதையும் அவர் குறிப்பிட்டுள்ளார். வான் வழி நகர்வு *(air mobility)*, சிறு குழு உத்திகள் *(small unit tactics)*, கள வைத்திய சேவை போன்றவற்றில் தாம் பயிற்சி அளித்துள்ளதாக ஒத்துக் கொண்டபோதிலும், இலங்கையில் நடைபெறும் சண்டைகளில் நேரடியாகத் தம்மை ஈடுபடுத்தும் நோக்கம் இல்லையென அமெரிக்க நிர்வாகம் தொடர்ந்து வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பிரிட்டனும், அமெரிக்காவும் சிறீலங்காவிற்கு அபாயகரமான ஆயுதங்களை விற்பதற்கிருந்த தடையில் தளர்வை கொண்டு வந்துள்ளதாகவும், அமெரிக்கா கெலிகொப்டர்களையும், ரோந்துப்படகுகளையும் சிறீலங்காவிற்கு விற்க முன் வந்துள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், அமெரிக்காவின் அனுசரணை இல்லாமல் இஸ்ரேல் சிறீலங்காவிற்கான முக்கிய ஆயுத விநியோகத்தராக வந்திருக்க முடியாதென்றும் தெரிவித்துள்ளார். *Marc Kaufman* கூறியதற்கு மாறாக சிறீலங்கா கேந்திர அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக



அமெரிக்காவால் கருதப்படவில்லை என்றும் எனவே, அமெரிக்கா இங்கு மிக ஆழமாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாதென்றும் கணிப்பிடுகிறார். *Scotland* என்ற ஆங்கிலப் பத்திரிகை 14, யூலை வெளியீட்டில் *Paul Harris* என்ற பத்திரிகையாளர் எழுதுகையில், கொழும்பிலுள்ள அமெரிக்க தூதுவராலயத்திலிருந்து அரை டசின் விஷே–

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




படைப்பிரிவினர் (*Green Berets or Rangers*) புறப்பட்டு காலை வேளையில் காற்றுவாங்கப் போனதைக் கண்டதாக எழுதியுள்ளார். அவர், மேலும் தெரிவிக்கையில், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தகவல் சேவையைச் சேர்ந்த பில் டோசன் என்ற அதிகாரி, இந்திய உபகண்டத்தின் நுனிப் பகுதியில் இப்பயிற்சி இடம்பெறுவதை உறுதிப்படுத்தியதாகத் தெரிவிக்கிறார். விசேட இராணுவ நடவடிக்கைகளுக்கான திறமையை பெறுவதற்கான இப் பயிற்சி, பசுபிக் பிராந்தியம் பாதுகாப்பாகவும், ஸ்திரமாகவும் இருக்கவேண்டியதன் அவசியம் குறித்த அமெரிக்க அரசாங்கத்தின் தொடர்ச்சியான ஈடுபாட்டைக் காட்டுவதாக அவ்வதிகாரி தெரிவித்ததாக *Paul Harris* கூறுகிறார். இஸ்ரேலால் தயாரிக்கப்பட்ட கண்காணிப்பு, தொலைதொடர்பு கருவிகளும் சிறீலங்காவில் மிகத் தீவிரமாக பரீட்சிக்கப்பட்டு வருவதாகவும், ஆட்பலத்தில் மட்டுமல்ல விடுதலைப் புலிகள் தொழில்நுட்பத்திலும் முதன்முறையாக சமபலத்தை இழந்துள்ளதாகவும் அப்பத்திரிகையாளர் சுட்டிக்காட்டியுள்ளார். அமெரிக்க வேர்ஜினியா மாநிலத்தில் அலெக்ஸாண்டிரியா நகரில் இராணுவ நிபுணத்துவத்திற்கான நிறுவனம் (*Military and Professional Resources Inc.*) என்ற இளைப்பாறிய அமெரிக்க இராணுவ நிபுணர்களைக் கொண்ட தனியார் அமைப்பு இயங்குகின்றது. இவ் அமைப்பைச் சேர்ந்தவர்கள் சிறீலங்காவில் செயல்படுவதாகச் சொல்லப்பட்ட கூற்றையும் இப்பத்திரிகையாளர் மறுத்துள்ளார். இதன் பேச்சாளரான அமெரிக்க இராணுவ உளவுத் துறையைச் சேர்ந்த முன்னாள் ஜெனரல் எட் சொய்ஸ்ரர் சிறீலங்காவில் தமது நிறுவனத்துக்குள்ள அக்கறையை மறுத்துள்ளதாக போல் ஹரிஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் ஓகஸ்ட் 7ம், திகதி, வெளிநாட்டுச் செய்தியாளர் மையத்தில் இடம்பெற்ற செய்திக்குறிப்பின் போது,. அமெரிக்க வெளிவிவகார திணைக்களப் பேச்சாளர் நிக்கலஸ் பேன்ஸ், அஸிஸ் ஹனிபா என்ற *Indian Abroad* பத்திரிகையாளர் கேட்ட கேள்வியின் போது இதனை உறுதிப்படுத்தினார். *Philadelphia Inquiror* பத்திரிகையில் பச்சைத் தொப்பிகள் சிறீலங்கா இராணுவத்தினருக்கு பயிற்சியளிப்பதாக வெளியிடப்பட்டுள்ளது. கடந்த யூன் மாதம் முழுமையும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் பயிற்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. இதுபற்றிய அவரது கருத்து என்னவென்று கேட்டதற்கு, சிறீலங்கா அரசாங்கத்துடன் கூட்டுச் செயற் பாட்டில் அமெரிக்க அரசாங்க அதி காரிகள் ஈடுபட்டிருந்தால் அது எனக்கு ஆச்சரியமளிக்காது. காரணம் அமெ ரிக்கா அந்த அரசாங்கத்துடன் உற வைப் பேணி வருவதேயாகும் என்று தெரிவித்தார். அமெரிக்க வெளிவிவ காரத் திணைக்களத்தின் தென்னாசி யாவிற்குப் பொறுப்பான திருமதி ரொபின் ரபேல், இந்தியா சென்றிருந்த போது இவ் இராணுவ ஒத்துழைப்பை ஒத்துக்கொண்டிருந்தார். மேலும் அமெ ரிக்கப் பாதுகாப்பிற்குப் பொறுப்பான பென்ரகன் அமைப்பும் இதனை ஏற் றுக்கொண்டிருந்தது. இத்தகைய தரவு களின் அடிப்படையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ 'விடுதலைப் புலிகள்' 1 – 15 யூலை ஏட்டின் ஆசிரியர் தலையங்கம் இவ் விடயம் குறித்து எழுதியிருந்தது. (இதனைப்பெட்டிச் செய்தியில் பார்க் கவும்) விடுதலைப் புலிகள் அமெரிக்க அரசாங்கத்திற்கு, உள்நாட்டுப் போரில் நடுநிலையாக இருக்குமாறு சாதுவாக மிரட்டியதாக கொழும்புப் பத்திரி கைகளும் செய்தியூடகங்களும் திரிபு படுத்தி செய்திவெளியிட்டன. இவ் வாறு 'விடுதலைப் புலிகள்' ஆசிரியர் தலையங்கம் தவறாக வெளிப்படுத்தப் பட்டதன் அடிப்படையில், விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் அவ்வாசி ரியர் தலையங்கத்தின் அதிகாரபூர்வ மான ஆங்கில மொழிபெயர்ப்பை, அமெரிக்க வெளிவிவகாரத் திணைக் களத்தின் இந்திய, சிறீலங்கா ஆகியவற் றிற்கான இயக்குனர் ஸ்ரீபன் மானுக்கு (*Steven Mann*) அனுப்பிவைத்துள்ளது. அமெரிக்க வெளிவிவகாரத் திணைக் களம் இவ் இராணுவப் பயிற்சிச் செயற்பாட்டைக் குறைத்து மதிப்பிட்டே தொடர்ந்து சொல்லி வருகின்றது. ஒவ்வொரு வருடமும் சுழற்சி முறை யில் 10, 12 அமெரிக்க இராணுவத் தினர் சிறீலங்காவிற்கு செல்கின்றனர். இது ஒன்றும் புதியதல்ல. கடந்த சில ஆண்டுகளாகவே இது இருந்து வருகி றது. வழமையான (*routine*) இப்பயிற் சிச் செயற்பாடு, இந்தியா, பாகிஸ் தான், பங்களாதேஷ், நேப்பால் ஆகிய நாடுகளிலும் இடம்பெறுகின்றதாக, விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா அரசாங்கத்திற்குமான போரில் அர சாங்கச் சார்பான அமெரிக்க இராணு வத் தலையீட்டை மறுத்து வருகின் றது. இது குறித்து *Hot Spring* நிருபர் *Marc Kaufman* இடம் கேட்டபோது, மற்ற நாடுகளுக்கும் சிறீலங்காவுக்கு மிடையில் வேறுபாடு இருக்கிறது. சிறீலங்காவில் ஒரு உள்நாட்டுப் போர் இடம்பெற்று வருகின்றது என்றும் இங்கு சண்டை நடவடிக்கைகளுக்கு உடனடியாக அனுப்பப்படும் இராணு வத்தினருக்கு பயிற்சியளிக்கப்படுகின் றது என்றும், இது அமைதிக்கால இராணுவப் பயிற்சி (*Military Exercise*) அல்ல என்றும் குறிப்பிட்டார். மேலும், அவர், இந்தியாவிற்கு இவ்விடயம் தெரியும் என்று தான் கருதுவதாகவும், ஆயினும், அமெரிக்கா தற்போது உலகில் ஒரே பெரும் வல்லரசாக இருக்கின்ற காரணத்தினால், சிறீலங் காவின் விடயங்களில் அமெரிக்கத் தலையீட்டை கண்டிக்கத் திராணியற்று இருப்பதாகவும் தெரிவித்தார்.

www.tamilarangam.net

பிராந்திய இராணுவத் தலைமையும் இது குறித்து ரொய்ட்டருக்கு செய்தி அறிக்கையொன்றை அனுப்பியுள்ளது. அவ்வறிக்கை, உள்ளூர் இராணுவத்து டனான இப் பயிற்சி நெறி, வழமை யான ஒத்துழைப்பு என்ற வரைய றைக்கு உட்பட்டதாகத் தெரிவிக்கின் றது. அமெரிக்க இராணுவம், தற் போது நடைபெறும் ஆயுத முரண் பாட்டில் இதுவரை கலந்துகொள்ள வும் இல்லை, இனிமேல் கலந்து கொள்ளப் போவதுமில்லை என்று அது தெரிவிக்கின்றது. அமெரிக்க இராணுவத்தினர், கடந்த காலங்க ளில், சிறீலங்கா இராணுவத்துடனும், ஆகாயப்படையினருடனும் கூட்டுப் பயிற்சிகளில் (*Joint combined exchange training*) ஈடுபட்டிருந்தனர். இக்கூட் டுப் பயிற்சி, கள வைத்தியம், படை



அமெரிக்கா இவ்விடயத்தைப் பகி ரங்கப்படுத்திப் பெரிதுபடுத்த விரும்ப வில்லை என்று தெரிகின்றது. மேலும், வியட்னாம் போன்றோ, சோமாலியா போன்றோ பெரும் படைகளை இறக்கி சண்டைகளில் நேரடியாக பங்குபற்றப் போவதில்லை என்பதான கருத்துக்களும் அமெரிக்க அரசாங்கப் பேச்சாளர்களால் சொல்லப்பட்டுள் ளன. ஹவாய் தீவை பிரதான தள மாகக் கொண்ட அமெரிக்க பசுபிக் விநியோகம் (*Logistics*), தலைமைத்து வம், பாதுகாப்பு, தரைநகர்வு போன்ற பல்வேறு சிறப்பம்சங்களில் கவனம் செலுத்தியது. நாலு அமெரிக்க அதிகா ரிகள் அப்பயிற்சிகளை வழங்கியதாக வும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

தமது பயிற்சிக் கடமையை முடித் துக்கொண்டு, அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தமது நாட்டிலுள்ள தமது நிரந்தர நிலைகளுக்குத் திரும்பி விட்டதாகவும் அவ்வறிக்கை தெரிவிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கின்றது. சிறீலங்காவின் சண்டை நடவடிக்கைகளில் *(combat operation)* ஒருபோதும் அமெரிக்கப் படையினர் ஈடுபட்டதில்லை என்றும் தமது பயிற்சிச் செயற்பாடுகள், இராணுவ நடவடிக்கைகள் நடைபெறும் இடங்களிலிருந்து வெகுதூரத்தில் நிகழ்வதாகவும் பசுபிக் பிராந்தியப் படைப்பிரிவுகளின் தலைமையகம் விடுத்த அவ்வறிக்கை கூறுகின்றது.

ஓகஸ்ட் 11 ம் திகதி *"The Sunday Times"* பத்திரிகையில், பிரபாகரனே இலக்கு *(Target Prabha)* என்ற தலைப்பில் தராக்கி எழுதிய கட்டுரையை இங்கு மீண்டும் குறிப்பிடவேண்டியுள்ளது. பிரபாகரனின் நகர்வை மிக மிக நுணுக்கமாகக் கணித்து அவரைத் தாக்கிக் கொல்லக்கூடிய உயர்தொழில் நுட்பத்தை அமெரிக்காவிடமிருந்து சிறீலங்கா இராணுவம் பெறமுயல்கிறது. இது சிறீலங்கா இராணுவத்தின் தந்திரோபாயத்தில் மிக முக்கிய அம்சமாக உள்ளதாக விடுதலைப் புலிகள் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்காவிடமிருந்து அத் தொழில்நுட்பத்தை சிறீலங்கா இராணுவம் பெற்றாலும் இன்னொரு முக்கிய குறைபாடு சிறீலங்கா உளவுத்துறையிடம் இருப்பதாக அவர் தெரிவிக்கிறார். அதாவது, மனிதர்கள் மூலம் தகவல் அறியும் விடயத்தில் மிகக் குறைபாடு உள்ளதாக உளவுத்துறை விளங்குகின்றது. எனவே, விடுதலைப் புலிகளின் கவனம் எங்குள்ளதெனில் அமெரிக்க அரசாங்கத்தின் நல்லாதரவை தமது அமைப்புக்காகவும் தமது இலட்சியத்திற்காகவும் பெறமுயல்வதே எனத் தெரிவித்துள்ளார். தராக்கியின் இவ் வெளிப்படுத்தல் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவராலய அதிகாரிகள் மட்டத்திலாவது கோபத்தை ஏற்படுத்தியிருக்கும்.

இவ்வனைத்துச் செய்திகளையும் ஒட்டுமொத்தமாக வைத்துப் பார்க்கும் போது சில விடயங்கள் தெளிவாகின்றன.

1. பச்சைத் தொப்பிகள் போன்ற அமெரிக்க இராணுவ நிபுணர்கள் அல்லது ஆலோசகர்கள் சிறீலங்கா இராணுவத்திற்கு பயிற்சி கொடுக்கிறார்கள் என்பது;

2. விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்க படைகளுக்கும் இடையில் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அரசாங்கத்திற்கு சார்பாக, சண்டைக்கு உடனடியாகச் செல்லும்

www.tamilarangam.net

# இலங்கை இனப்பிரச்சனை மீதான அமெரிக்காவின் பக்கச்சார்பு நிலைப்பாடு

அண்மைக்காலமாக இலங்கையின் இனப்பிரச்சனை தொடர்பாக, அமெரிக்கா அதிக அக்கறை செலுத்தி வருகின்றது; அரசியல்— இராணுவ ரீதியில், ஒருதலைப்பட்சமாக, சிறீலங்கா அரசுக்கு உதவும் செயல்களில் அது தீவிரம் காட்டுகின்றது.

'கிறீன் ஃபெறே' என்கின்ற – அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் பிரிவு ஒன்று கொழும்பு வந்து, சிங்களப் படையினருக்கு போர்ப்பயிற்சி அளித்து வருகின்றது.

அத்துடன், தமிழரின் போராட்ட நடவடிக்கைகளுக்கு பயங்கரவாத முத்திரை குத்தும் வகையில் அது, அறிக்கைகளையும், கண்டனங்களையும் வெளிப்படுத்தி வருகின்றது.

அதேவேளை, 'சிறீலங்காவுக்கு அழிவாயுதங்களை விற்பதில்லை' என்ற தன் முன்னைய முடிவை இப்போது விலகிக் கொண்டதால், அமெரிக்க ஆயுதங்கள் சிங்கள அரசுக்கு விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல, தனக்கு அனுசரணையாகவுள்ள நாடுகள் மூலமாக, சிங்களப் படைகளுக்கு, சலுகை அடிப்படையில் அழிவாயுதங்களை விற்கும் விவகாரங்களில், அமெரிக்கா பின்னணியில் நின்று செயற்பட்டு வருகின்றது.

மனித உரிமை விவகாரம்— உலகளாவிய ரீதியில் சமாதானம் என்ற கொள்கைகளை முன்வைத்துச் செயற்படும் அமெரிக்க அரசு, சிறீலங்கா – புலிகள் போர் நடவடிக்கைகள் தொடர்பாக பக்கச்சார்பு நிலை எடுத்து, தமிழரின் போராட்ட நடவடிக்கைகளை மட்டும் கண்டிக்க முயல்வது எமக்கு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது.

அமெரிக்காவின் இச்செய்கை காரணமாக, சிங்கள அரசின் போர்க் குற்றங்களும் – தமிழரின் போராட்ட நியாயங்களும், உலக சமூகத்தின் முன் மறைக்கப்படும் அபாயம் ஒன்று தோன்ற இடமுண்டு.

40 வருடகாலமாக – பல்வேறு வழிகளிலும் – தமிழினத்தை ஒடுக்கிவரும் ஒரு அடக்குமுறை அரசுக்கு, அரசியல் – இராணுவ ரீதியில் உதவிகள் பல புரிந்து, ஒத்தாசையாக இருக்க முயலும் அமெரிக்காவின் நடவடிக்கை, ஈழத்தமிழர்களுக்கு விசனத்தைக் கொடுத்துள்ளது.

அமெரிக்கா கடைப்பிடிக்கும் இந்தத் தவறான நிலைப்பாட்டிற்குப் பிரதான காரணம், தமிழ் – சிங்கள இன முரண்பாட்டின் வரலாற்றையும் அதன் ஆழ அகலங்களையும் அது, சரிவர அறிந்து வைத்திருக்காததே ஆகும்.

தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்று அடிப்படைகளைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, அடக்கும் சிங்கள அரசுக்கும் அடக்கப்படும் தமிழினத்திற்கும் இடையே ஒரு அரசியல் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கான இராஜதந்திர முயற்சிகளைச் செய்வதற்குப் பதிலாக, அடக்குமுறை அரசுக்கு ஆதரவாகச் செயற்படும் அமெரிக்காவின் அணுகுமுறை, தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

குடாநாட்டை சிங்களப் படையினர் ஆக்கிரமித்துவிட்ட இந்த நிலையிலும் கூட, 'பேச்சுவார்த்தை மூலமே அரசியல் தீர்வு காணப்படவேண்டும்' எனப் பல்வேறு தரப்பினரும் அரசை வலியுறுத்தும் இந்த நேரத்தில், சிங்களப் பேரினவாதத்தின் இராணுவ முனைப்புக்கு ஆதரவும் – உதவியும் நல்கும் விதமாக அமெரிக்க அரசு செயற்படுவது நல்லதல்ல.

இதேவேளை, உதவிகள் என்ற போர்வையில் சிங்கள அரசின் போர்த்தேவையை ஈடுசெய்யத் தேவையான நிதியை – உலக நிறுவனங்கள் வழங்கும் விவகாரத்தின் பின்னணியிலும், அமெரிக்கச் செல்வாக்கு காணப்படுகின்றது. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக சிங்கள அரசு கடைப்பிடிக்க விரும்பும் இராணுவக் கொள்கைக்கு, இந்த வெளிநாட்டுப் பணம்தான் முதுகெலும்பாக இருக்கின்றது. இந்தச் சூழலிலேயே, சிங்களப் படைகளுக்கு அமெரிக்கா வழங்கும் போர்ப் பயிற்சிகளும் ஆயுதங்களும் மற்றும் பிரச்சார உதவிகளும், சிங்கள அரசிற்கு மேலும் மேலும் போர்வெறியை ஊட்டிவருகின்றன.

ஒட்டுமொத்தமாகச் சொன்னால், இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பதற்காக சிங்கள அரசு கடைப்பிடிக்கும் இராணுவ அணுகுமுறைக்கு அமெரிக்காவின் மேற்குறித்த செயற்பாடுகள், ஊக்கம் கொடுத்து உற்சாகப்படுத்துபவையாகவே காணப்படுகின்றன. இலங்கையின் இனப்பிரச்சினையில் அமெரிக்கா ஆக்கபூர்வமான முயற்சிகளை எடுப்பதற்கு வாய்ப்புகள் தோன்றும். இந்த வகையில் இனப்பிரச்சினை விவகாரத்தில், சிறீலங்கா அரசுக்கு ஒருதலைப்பட்சமாக வழங்கும் ஆதரவு நிலைப்பாட்டை அமெரிக்கா கைவிட்டு, இருபகுதியினருக்கும் இடையே நடுவுநிலைமையைக் கடைப்பிடித்து இனப்பிரச்சினையை அணுக வேண்டும் என்பதே தமிழ்மக்களின் எதிர்பார்ப்பாகும். அத்துடன் சிறீலங்கா அரசின் இராணுவவாதக் கொள்கைக்குச் சார்பாக, தற்போது அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கை, அதன் மனித உரிமை விவகாரம் மற்றும் சமாதானம் என்ற வெளிநாட்டுக் கொள்கைக்கு முரணானதாக உள்ளது என்ற உண்மையையும், அமெரிக்க அதிகாரிகள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆகவே, நடுநிலையுடனும் இராஜதந்திர ரீதியிலும் தமிழ் சிங்கள இப்பிரச்சினைய அணுகி, இலங்கைத் தீவில் சமாதானச் சூழல் ஒன்றை உருவாக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது மக்களின் விருப்பமாகும். அதை விட்டுவிட்டு, சிறீலங்கா அரசின் போர் முனைப்பிற்கு அமெரிக்கா ஆதரவும் உதவியும் வழங்குவதென்பது தமிழ் சிங்கள இனமுரண்பாட்டை மேலும் சிக்கலாக்குவதுடன், போரும் விரிவுபெற்று அதனால் மனித அவலங்கள் பெருகவுமே வழிசமைத்துக்கொடுக்கும்.

ஆகவே, இத்தீவின் இனப்பிரச்சினை விவகாரத்தில் அமெரிக்கா, ஒரு நடுநிலைமைக் கொள்கையையும் நிதானப் போக்கையும் கடைப்பிடித்து, இராஜதந்திர வழிமுறைகள் மூலமாக சமாதானத் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே, ஈழத்தமிழர்களின் விருப்பமாகும்.

(ஜூலை, 1996 'விடுதலைப் புலிகள்' ஆசிரியர் தலையங்கத்திலிருந்து)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிறீலங்கா படையினருக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றது என்பது;

3. சிறு குழு நகர்வு, வான்வழி வினியோகம், கெலிகொப்டரில் படை இறக்கல், கள வைத்தியமும் காயம் பட்டோரை அப்புறப்படுத்தலும், தலைமைத்துவம் ஆகிய விஷேட பயிற்சிகள், பொதுவாக கெரில்லாப் போர் நடவடிக்கைகளுக்கு எதிரான செயல் பாடாகவும் குறிப்பாக காடுகளை அரணாகக் கொண்டு செயல்படும் கெரில்லாக்களுக்கு எதிரான செயற் பாடாகவும் விளங்குகிறது. இவ்வடிப் படையில் அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற பெரும் படையெடுப்புக் களை சிறீலங்கா அரசாங்கம் நடத்திய போதிலும், கெரில்லா எதிர்ப்பு நட வடிக்கையாக இவ்வதிரடி நடவடிக் கைகளில் கவனம் செலுத்தப்படுகின் றது என்பது; எனவே பெரும் சண் டைகளில் அமெரிக்கத் துருப்புக்கள் பெருமளவில் நேரடியாக ஈடுபடாது என்பது;

4. அப்படி ஈடுபட்டால் அது இந்தியாவுக்கு தர்மசங்கடமான விடய மாகவும், அமெரிக்க மக்கள் மத்தியில் இன்னொரு வியட்நாமை ஞாபகப் படுத்தும் விடயமாகவும் இருக்கும் என்பது;

5. ஒவ்வொரு வருடமும் ஒரு குழு மாறி இன்னொரு குழுவாக இவ விஷேட பயிற்சிகள் இடம்பெறும் என்பது; அதாவது வெவ்வேறு விஷேட துறைகளில் நிபுணத்துவக் குழுக்கள் சுழல் முறையில் விஷேட பயிற்சிகளை வழங்கும் என்பது;

6. சிறீலங்கா இராணுவ அதிகா ரிகள் ஒரு சிலருக்கு அமெரிக்க இரா ணுவக் கல்லூரிகளில் பயிற்சி வழங் கப்படுவது பல வருடங்களாக நடை பெற்ற போதும், மிக அண்மையில் இவ்வருடம்தான் அல்லது ஒரு சில வருடங்களாகத்தான் இவ் விஷேட இராணுவ பயிற்சிக் குழுவின் வருகை உள்ளதென்பது;

7. இக் கெரில்லா எதிர்ப்பு நட வடிக்கைக்கான விஷேட கருவிகளை அமெரிக்கா அல்லது அதன் நட்பு நாடுகள் வழங்குகின்றன என்பது; அமெரிக்கா கெலிகொப்டர்கள், ரோந் துப்படகுகள், இரவு பார்வைச் சாத னங்களை வழங்க முன்வந்துள்ளது என்பது; செய்மதி படம்பிடிக்கும் கரு விகளின் தொழில்நுட்பத்தை அமெ ரிக்கா வழங்க மறுத்தபோதும், கண் காணிப்பு, தொலைதொடர்பு சம்பந் தமான விஷேட கருவிகளையும், விமா



னங்களையும் இஸ்ரேல் மூலம் வழங்க முன்வந்துள்ளது என்பது; இப் பயிற்சி நன்கு திட்டமிடப்பட்ட, நவீனஉயர் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட, அவசரப்படாத, உறுதியான தகவல்களை ஆதாரமாக வைத்து ஒரு குறிப்பிட்ட இலக்கை குறியாகக் கொண்டு செயற்படுகின்ற குறுக்கு வழிச் செயற்பாடு என்பது.

இவ்விடயம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு பெரிய விடயம் என கொழும்பிலுள்ள மனித உரிமை கள் செயற்பாட்டாளரான ஷெரின் சேவியர் என்ற பெண்மணி கூறியதாக *Marc Kaufman* தனது கட்டுரையில் தெரிவிக்கிறார். எனவேதான் இதனை வெளியில் விடாமல் மறைக்கப் பார்க் கிறார்கள் என்றும் அப்பெண் கூறிய தாக அக்கட்டுரை தெரிவிக்கின்றது. தமிழ் மக்கள் செய்யக்கூடியது என்ன வெனில், அமெரிக்க அரசாங்கத்திற்கு விண்ணப்பம் செய்யவேண்டியது தான். விடுதலைப் புலிகள், ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டதுபோல், அமெரிக்கா சமாதானத் தீர்வுக்கான முயற்சியில் தனது ராஜதந்திரத்தை பிரயோகிக்கவேண்டும் என்பதே தமிழ் மக்கள் விண்ணப்பிக்கக்கூடியதாகும். இனப்படுகொலை ஒன்றின் மூலம், தமிழ் மக்கள் மீது சிங்கள பௌத்த இனவாத மேலாதிக்கத்தை ஏற்படுத்த விரும்பும் சிங்கள அரசாங்கத்துக்கு உதவக்கூடாது என்று கேட்கவேண் டும். ஆக்கிரமிப்பின் மூலம் இராணு வத் தீர்வுகாணும் சிறீலங்காவின் முயற்சிக்கு ஆதரவு தருவது போரை யும், அழிவுகளையும் விஸ்தரிக்கவும், நீட்டவுமே உதவும் என்று கூறுதல் வேண்டும். தமிழ் மக்களின் போராட் டம் நியாயமானது எனவும், அவர்க ளது ஜனநாயக உரிமைக்கான போராட்டம் எனவும் எடுத்துரைத்தல் வேண்டும். விடுதலைப் புலிகளையோ அதன் தலைமையையோ அழித்தல் மூலம் விடுதலைப் போராட்டத்தை, தர்மத்தை அழித்துவிட முடியாது என்று அறிவுறுத்தல் வேண்டும். உலக சமாதானத்திற்காகவும், மனித உரிமை களுக்காகவும், விடுதலை, சமத்துவம் ஆகிய உயரிய கொள்கைகளுக்காக வும் வாதாடுவதாகக் கூறும் அமெ ரிக்கா மனித உரிமைகளை காலில் போட்டு நசித்து, இனவாத ரீதியாகச் செயல்படும் கொடூர சிங்கள அரசுக்கு உதவக்கூடாது என்று எமது விண் ணப்பங்களை அமெரிக்கத் தலைவர்க ளுக்கு அனுப்புவதோடு அமெரிக்க



மக்களுக்கும், ஏனைய உலக மக்களுக் கும் அறிவிக்கும் கடமையினையும் நாம் ஆற்றுதல்வேண்டும். இதன்மூலம் எமது விடுதலைப் போராட்டத் துக்கான ஆதரவைப்பெற முயலுதல் வேண்டும்.

– வளவன்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மரணத்துள் தொடரும் வாழ்வு

**வாழ்க்கையின் முடிவே மரணம்**
**என்போம்**
**ஆயின் எமக்கோ**
**மரணமே வாழ்வாய் உள்ளது.**

யாழ். குடாநாட்டில், இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்கிய மக்களின் வாழ்க்கையை எண்ணுகையில் இக்கவிதையே ஞாபகத்திற்கு வருகிறது. பாலியல் வன்முறை




கள், சித்திரவதைகள், காணாமல் போகின்ற அவலம், படுகொலைகள் என இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்கிறது. தாய் நிலத்தில் ஆள வேரோடியிருக்கும் ஆணி வேர் வரை வாழ்க்கை ஆக்கிரமிப்பாளர்களால் உலுப்பப்படுகிறது. மக்கள் அச்சத்துடனும் பயபீதியுடனும் நாளும் மரணத்தை எதிர் கொண்டபடி இருக்கிறார்கள். வீடுகள் எரிந்து கிடக்கின்றன. அதன் கூரைகள் சிதைந்து கிடக்கின்றன. எரியூட்டப்பட்ட தோட்டங்களிலிருந்தும், வயல்களிலிருந்தும் துயரம் கிளர்ந்துகொண்டு இருக்கிறது. இன்னும் அணையாதபடி நெருப்பு எரிந்து கொண்டிருக்கின்றது. இந்த வாழ்வியலுக்குள் இருந்து மக்கள் தங்களைக் காத்துக்கொள்வதற்காக பல வழிகளிலும் போராடவேண்டி இருக்கிறது. வாழ்க்கை எந்தவிதமான உத்தரவாதமும் அற்ற நிலையிலேயே இருக்கிறது.

"சூரியக் கதிர்" தமிழ் மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய அவலம் இன்னும் எங்கும் எதிரொலித்தபடியே தான் உள்ளது. மக்களின் வாழ்வும் வளமும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் கால்களில் மிதிபடுகிறது. மனித இருப்பே கேள்விக்குறியாக்கி இருக்கும் இந்த இராணுவ ஆக்கிரமிப்புக்குள் சிக்கித் தவிக்கும் மக்களின் வாழ்வை சூரியக்கதிர் சுட்டெரிக்கிறது. சூரியக் கதிர் ஒருபோதும் சுடரேற்றாது என்பது தமிழ் மக்கள் படித்துப் பெற வேண்டிய பாடமாக ஒருபோதும் இருக்க முடியாது. தமிழ் மக்களை அடிமை கொள்ளும் சிங்கள அரசுகளின் புதிய தந்திரோபாய நடவடிக்கைகளை தமிழ் மக்கள் நன்கு புரிந்தும் அனுபவித்தும் வந்தவர்கள். இதில் வேடிக்கை என்னவென்றால் சந்திரிகா இந்தத் தன்மைகள் வாய்ந்த சிங்களத் தலைமைகளிலிருந்து தான் வேறுபட்டு நிற்பவர்க் காட்டுவதற்காக வரிந்து கட்டிக் கொண்டு நின்றமையே. பல வாக்குறுதிகளை தேர்தல் காலத்தில் அள்ளி எறிந்து உலகையும் சிங்கள மக்களையும் ஏமாற்றினார். ஆனால் தமிழ் மக்கள் ஏமாந்து போகின்ற நிலையில் இருக்கவில்லை. சந்திரிகா போன்ற தலைவர்களால் ஒருபோதும் சமாதானத்தை எட்டவே முடியாது. ஏனெனில் அவர்கள் பிழையான அடித்தளங்களில் நின்றுகொண்டு பிரச்சனைகளை தொடர்ந்து பிழையாக அணுகிக் கொண்டே போகிறார்கள்.

யாழ்ப்பாண நகரத்தில் வாழும் தமிழ் மக்கள் மீது இருள் சூழ்ந்திருப்பதாகக் கூறி அந்த நகரத்தின் மீது ஒளிமயம் நிறைந்த வாழ்வைப் படைககப்போவதாகக் கூறி தன் நாட்டுப் படைகளின் பெரும்பலத்தை ஒன்று திரட்டி சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கைகளை மேற் கொண்ட போது தமிழ் மக்கள ஒளியை நோக்கிய வாழ்வுக்கான பயணத்தை ஓரிரவில் உடுத்த உடைகளுடன் மேற்கொண்டார்கள். அப்பொழுதே சந்திரிகாவின் போலித்தனமான, ஏமாற்றுத் தனமான, நயவஞ்சகத்தனமான போக்குககு சாவு மணி அடித்தார்கள். இருந்தும் இந்த நீண்ட பயணத்தில் கலந்து கொள்ளமுடியாது போய் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் அகப்பட்டுக்கொள்ள நேரிட்ட மக்களின் வாழ்வில் சூரியக் கதிர் சுடரேற்றியதா என்றால் இல்லை. அங்கே சந்திரிகாவினுடைய அகமும் முகமும் அசிங்கமாக அவிழ்ந்து தொங்கிக் கொண்டி நக்கிறது.

யாழ் குடாநாட்டிற்குள் வாழும் மக்களின் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் தான் தீர்த்துவிடப் போவதாக கூறினார். ஆனால் மக்கள் மீது உணவையும் ஆயுதமாக்கி விட்டிருக்கிறார். பசி, பட்டினி என்கிற ஓலம் காதைப் பிளக்கிறது. கொள்ளை நோய் போல மக்களை அடிமைப் படுத்தி காவு கொள்ள பல திட்டங் களை சந்திரிகா தீட்டி வருகிறார். சந்திரிகாவின் போக்கில் மாற்றம் ஏற் படுவதற்கில்லை. ஒருபோதும் தமிழ் மக்களின் வாழ்வின் நலங்களில் அக் கறை கொள்வதற்கான தகுதியும் பண் பும் அவரிடம் இல்லை. ஒரு பல்லின மக்களின் அபிலாசைகளைப் புரிந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




www.tamilarangam.net

கொண்டு செயற்படுவதும் அவருக்கு சாத்தியமாகப் போவதில்லை. அவர் ஒரு இனவாதி என்பதை யாரும் மறுக்க முடியாது.

சந்திரிகா அரசு தமிழ் இளைய சமுதாயத்தை திசை திருப்பி போராட வலுவற்ற சக்திகளாக்கிவிடத் துடிக் கின்ற துடிப்புக்கு அளவே இல்லை. யாழ். குடாநாட்டுள் ஆபாசமான பாலுறவுக் காட்சிகளைக் கொண்ட புத்தகங்களையும், திரைப்படங்களை யும் தாராளமாகப் பரவவிடுவதிலும், கசிப்பு உற்பத்தியை ஊக்கிவிப்பதிலும் இன்னோரன்ன சமூகச் சீரழிவை ஏற்படுத்தும் தீய செயற்பாடுகளைப் பரப்புவதிலும் கொடிய நோய்பரப்புக் காரணியாக சந்திரிகா செயற்பட்டு வருகிறார். இதற்காக பல திட்டங்க ளைத் தீட்டி ஆக்கிமிப்பு இராணு வத்திடம் செயல்முறைப்படுத்த விட்டி ருக்கிறார். பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை கைதுசெய்து வைத்தி ருக்கிறார்கள். அவர்கள் பற்றிய விப ரங்கள் ஏதும் இதுவரை தெரியவில்லை. ஒவ்வொரு நாளும் குடாநாட்டில் ஒரு இளைஞனோ ஒரு யுவதியோ காணா மல் போகிறார்கள். ஆக்கிரமிப்பாளர் களின் கால்களில் பல பெண்களின் வாழ்வு சிதைக்கப்படுகிறது. கட்ட விழ்த்து விடப்பட்டிருக்கும் பாலியல் வன்முறைகள் மூலம் யாழ்ப்பாணத் தில் எத்தனையோ இளம் பெண்களின் வாழ்வு கருக்கப்பட்டிருக்கிறது. இரா ணுவ பயங்கரவாதத்திற்கு அஞ்சி மக் கள் வெளியேறுவதும் அதிகரித்து வருகிறது.

எதிரியானவன் திட்டமிட்டு எமது பண்பாட்டு விழுமியங்களைச் சிதைத்து மேலான வாழ்வினை அழித்திடத் துடிக்கிறான். தமிழர்களின் தனித்துவ மும் சிறப்பும் அழிந்துவிடும் பட்சத் தில் போராட்டமும் ஒடுக்கப்பட்டு விடும் என அவர்கள் எண்ணுகிறார் கள்.

யாழ் நகரில் சிக்கி இருக்கும் இராணுவத்திற்கு விடுதலைப் புலிகள் பிடரியில் கொடுப்பது போன்ற அடி அவர்களை வலிகொள்ள வைப்தோடு ஆத்திரமூட்டவும் செய்கிறது. அத்தோடு பொறிக்குள் அகப்பட்டது போன்ற ஒரு நிலையில் சிக்கிய இராணுவத் திற்கு இராணுவ மேலாளர்கள் மீதும் தாங்க முடியாத கோபம் இருக்கிறது.

இவர்களது கோப ஆக்கினைக்கு தமிழ் மக்களா பலியாகவேண்டும்? ஏற்க னவே இராணுவத் தந்திரோபாயமற்ற சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கை, தென்னிலங்கை எதிர் தரப்பு அரசியல் வாதிகள் மத்தியிலும் கோபத்தை ஊட்டிய விடயமே.

இவ்வாறு அரசியல் இராணுவ பரிணாமங்களில் படு தோல்வியை அடைந்து வருகின்ற சந்திரிகா இது போன்ற இராணுவ ஆக்கிரமிப்புக்க ளுக்கு பச்சை காட்டுவார் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆடு மழையில் நனைகிறது என்று ஓநாய் அழுகின்ற கதையாக யாழ் நகர புனரமைப்பு பற்றியும், நூல் நிலைய புனரமைப்பு பற்றியும் கதைவிட்டுக் கொண்டு வெளிநாடுகளில் காசு திரட்டி தமிழ் இன அழிப்பில் உக்கிர மாக ஈடுபடுவதற்கான அரசின் முயற் சிகள் தமிழ் மக்கள் அறிந்ததே. தமி ழின அழிப்பில் எந்நேரமும் திட்ட மிட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் சந்திரிகா அரசு தமிழ் மக்கள் மீதான சகல கொடுமைகளையும் முழுப் பூசனிக்காயை சோற்றுக்குள் மறைக்க முயல்வது போல மறைக்க முயன்று வருகிறது. மண்ணின் போராட்ட சக்தியை அழித்தொழித்து மக்களை முடமாக்கி அவலங்களையும் துன்பங் ளையும் பரிசாகக் கொடுத்து அடிமை கொள்ள நிற்கும் ஆக்கிரமிப்பாளர் களுக்கு எதிராக உலகம் பூராகவும் பரந்து நிற்கும் தமிழ் மக்கள் ஓரணி யில் திரண்டு எமது இனத்தை அழிவி லிருந்து காப்பதற்காக எழவேண்டும். அத்தகையதோர் எழுச்சி நிலையே உதயத்தின் தோற்றகாலம் எனலாம். ★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தாண்டிக்குளம் இராணுவ முகாம் மனநோயாளிகளின் கூடாரம்

'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையை நடாத்தி யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த பின் யாழ் குடாநாடு என்பது சிறிலங்கா படைகளுக்கான மரணப்பொறியாகவே மாறி வருவதை பார்க்கிறோம். தொடர்ந்து அங்கு நிலைகொள்வதில் அரசபடைகள் மிக வலுவான சிரமங்களை எதிர்கொண்டபடியே இருக்கின்றன. எந்தளவுக்கு இறுக்கமான தடைகளுடனும், நுணுக்கமான அவதானிப்புகளுடனும் படையினர் செயற்பட்டாலும் அதையெல்லாம் மீறி எவரும் எதிர்பாராத விதமாக விடுதலைப் புலிகள் தாக்குதல்களை நிகழ்த்திக்கொண்டே இருக்கின்றனர். இராணுவத்தினது பூரணமான கட்டுப்பாட்டில் உள்ளதாக கூறப்படும் யாழ். குடாநாட்டினுள் எங்கு, எப்போது தாக்குதல் நிகழும் என்பதை தெரிந்துகொள்ள முடியாமல், ஒவ்வொரு கணத்திலும் உயிர் பற்றிய அச்சத்துடனேயே படையினரின் காலம் நகர்ந்துகொண்டிருக்கிறது.

குடாநாட்டுக்குள் இருக்கும் தமிழ் மக்களில் போராளிகள் யார், போராளிகள் அல்லாதோர் யார் என பிரித்தறிந்துகொள்ள முடியாத இராணுவம், திடீர் சுற்றிவளைப்புக்களையும், தேடுதல் வேட்டைகளையும், கைதுகளையும், சித்திரவதைகளையும் மேற்கொண்டவண்ணம் உள்ளது. கைது செய்யப்படுவோர் சுட்டுக்கொல்லப்பட்டு எவருக்கும் தெரியாமல் புதைக்கப்படுவது ஒருபுறமிருக்க, இளம்பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளையும் இராணுவத்தினர் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். இதனால், பொதுமக்கள் எந்த நேரமும் பயபீதியுடனேயே காலத்தைக் கழித்துக்கொண்டிருப்பதுடன், குடாநாட்டை விட்டு தப்பி ஓடிக்கொண்டுமிருக்கின்றனர். தற்போதைய நிலவரப்படி யாழ் குடாவில் தங்கியிருப்பவர்கள் வெளியேறுவதற்கான எல்லா மார்க்கங்களையும் சிறீலங்கா அரசு தடை செய்துள்ளது. யாழ் குடா என்பது ஏறத்தாழ ஒரு திறந்தவெளி சிறைச்சாலையாகவே செயற்படுகின்ற நிலையே தொடர்கின்றது. வெளியுலகச் செய்திகள் எதுவும் தெரியாமல் ஒரு கற்காலத்தை நோக்கிச் செல்லும் அபாயம் தோன்றியுள்ளது.



குடாநாட்டு நிலைமை இவ்வாறிருக்க, தரைவழிப்பாதையான தாண்டிக்குளம் இராணுவத் தடைமுகாமை தாண்டி மக்கள் வவுனியாவிற்கோ அல்லது கொழும்பிற்கோ செல்வதாயின் வார்த்தைகளில் வடிக்க முடியாதளவிற்கு துயரங்களையும் தொல்லைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்கிக்கொண்டிருக்கின்றனர்.

இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமான பின்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவத் தடைமுகாம், நாளுக்குநாள் புதிய இறுக்கமான கட்டுப்பாடுகளை அமுல்படுத்திக் கொண்டிருக்கிறது. வடக்கில் இருந்து மக்கள் வெளியேறுவதை தடுக்கும் முகமாகவும், தென்பகுதி நோக்கிச் செல்வோர் மீதான தொடர் கண்காணிப்பின் முதற் புள்ளியாகவும் இத் தடைமுகாம் உள்ளது. அதேவேளை, யாழ் குடாநாடு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தவேளை – தென்பகுதியில் இருந்து யாழ் வரும் பொதுமக்கள் மீதான இராணுவத் தொடர் கண்காணிப்பு மையங்களின் இறுதி முகாமாகவும் இது விளங்குகிறது.

இங்குள்ள படையினருக்கு தமிழ் துரோகக் குழுக்களும் தோள் கொடுப்பதால், இங்கு அப்பாவிப் பொதுமக்கள் மீதான வன்முறைகளை மேற்கொள்வதும், விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் மனித உரிமை மீறல் நடவடிக்கைகளைத் தொடர்வதும் இலகுவாக இருக்கிறது.

யாழ் குடாநாடு மீதான இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து பெரும்பாலான மக்கள் வன்னிப் பகுதியை நோக்கி வெளியேறி இருந்தது படையினர் மத்தியிலும் அரசின் மத்தியிலும் ஒரு காழ்ப்புணர்வைத் தோற்றுவித்திருந்தது. அந்த மக்கள் அரச படைகளின் கீழ் வாழ விரும்பாமல் விடுதலைப் புலிகளுடன் அவர்கள் பின் தொடர்ந்ததே இந்தக் காழ்ப்புணர்வுக்கு முக்கிய காரணமாகும். அரசு எவ்வளவோ வாக்குறுதிகளை வாரி வழங்கியும் மக்கள் அதனை நம்ப மறுத்து விடுதலைப் புலிகளின் பின்னே சென்ற செயலானது அரசுக்கு இன்று வரை ஆத்திரமூட்டிக்கொண்டே இருக்கிறது.

இதனாலேயே விடுதலைப் புலிகளின் பின்னால் இடம்பெயர்ந்து வன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னிக்கு வந்து தற்காலிக இருப்பிடங்களை அமைக்க முயன்ற மக்களுக்கு அரசு எந்தவிதமான உதவிகளையும் வழங்க மறுத்தது. அரசின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சானது, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் இந்த நெருக்கடிகள் எதனையுமே கவனத்தில் கொள்ளாமல் கண்ணை மூடிக் கொண்டிருந்தது. அரசசார்பற்ற வெளிநாட்டு – உள்நாட்டு சமூக சேவை நிறுவனங்களின் சேவையையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் தடைசெய்தது. எனினும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தன்னால் முடிந்தளவுக்கு தனது சேவைகளை வழங்கியது. புகலிடத்தில் வாழும் தமிழ் மக்களின் பங்களிப்பும் இதில் கணிசமான அளவு இருந்ததையும் நாம் இங்கு குறிப்பிட வேண்டும்.

இந்தக் காலகட்டத்தில்தான் தாண்டிக்குளம் தடைமுகாம் மிகவும் இறுக்கமான நடைமுறைகளை பின்பற்றத் தொடங்கியது. இடம்பெயர்ந்தவர்களுக்கான எல்லாவித உதவிகளையும் இவ் எல்லையில் வைத்து தடை செய்தது. மக்களை வெளியேற விடாமல் தடுத்தது.

அண்மைக் காலங்களில், குறிப்பாக முல்லைத்தீவு தோல்விக்குப் பின் அத்தோல்வியை மறைக்க ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி வரையிலான இராணுவ நடவடிக்கை என அறிவிக்கப்பட்டு பின் பரந்தனுடன் முன்னேற முடியாமல் இராணுவம் தேக்கமடைந்துள்ள 'சத்ஜய' இராணுவ நடவடிக்கை பிசுபிசுத்ததைத் தொடர்ந்து, தாண்டிக்குளம் முகாமின் கெடுபிடிகள் மிக மோசமான அளவுக்கு வலுவடைந்துள்ளன. செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக அவர்களது வாகனத்தில் பொருட்களை ஏற்றச் சென்ற வாகனச் சாரதிகளுக்கு மாட்டுச்சாணத்தை உண்ணும்படி கட்டாயப்படுத்தி சித்திரவதை செய்தது முதல் பயணி ஒருவரை முகாம் வாசலில் வைத்து சுட்டுக்கொன்றது வரை நடைபெற்றுள்ளது.

முன்னரெல்லாம் சாதாரணமாக பல நாட்கள் காத்திருக்கும் பயணிகள் அனுமதி வழங்கப்பட்டதும் உடனடியாக பயணத்தை மேற்கொண்டு நடாத்த அனுமதிக்கப்பட்டனர். இப்போது, விசாரணைகள் தனித்தனியாக நடைபெற்று, ஒவ்வொரு தனிநபரும் கிரிமினல் குற்றவாளிகள் போல் புகைப்படமெடுக்கப்பட்டு அவரவர் பற்றிய விபரங்கள் விசாரணைக்கோப்பில் சேர்க்கப்படுகின்றன. அத்துடன் தனித்தனியாக அல்லது நான்கு பேர்களாகச் சேர்த்து வீடியோ மூலமும் படமாக்கப்பட்டு கோப்புகளில் சேர்க்கப்படுகின்றது. ஒருவர் ஏதாவது சந்தேகமுள்ளவராக படையினருக்குத் தோன்றினால் அவர் உடனடியாக தடுத்துவைக்கப்படுவார். பின்னர் அவர் பற்றிய எந்தவிதமான விபரங்களையும் யாரும் அறிந்துகொள்ள முடிவதில்லை. முகாமில் கைதுசெய்யப்பட்டு காணாமல் போன சிலர் இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. அண்மையில் வவுனியாவில் கைதுசெய்யப்பட்ட யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவர் வவுனியாவுக்கு சற்றுத் தொலைவில் அமைந்துள்ள இடமொன்றில் கழுத்தில் ரயர் போட்டு எரிக்கப்பட்ட நிலையில் கிடந்ததை சிறீலங்கா பொலிசாரே ஊர்ஜிதப்படுத்தியிருப்பதால் இதே நிலைமையே மற்றவர்களுக்கும் நேர்ந்திருக்கலாம் என நம்ப இடமுண்டு. அதேபோல் யாழ் குடாவில் கைதுசெய்யப்பட்டு காணாமல் போவோர்களும் புதைகுழியிலிருந்து மீட்கப்படுகின்ற சம்பவங்களும் இச் சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

கைதானோர் நிலைமை இவ்வாறிருக்க, தடைமுகாமை கடப்பதற்கு வரும் நோயாளிகளின் நிலைமை மிகவும் பரிதாபகரமாகவே உள்ளது. மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா போன்ற இடங்களுக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனத்தின் மூலம் கொண்டுசெல்லப்படும் நோயாளர்களும் முகாம் பிரதேசத்தை தாண்டுவதாயின் வாகனத்தை விட்டு இறங்கி நடந்து செல்ல வேண்டுமெனக் கட்டாயப்படுத்துகின்றனர். நடக்க முடியாதவர்களை அவர்களது உறவினர்கள் அல்லது பொதுமக்கள் தூக்கிச் சென்று தடைமுகாமின் மறுபகுதியில் நிற்கும் வாகனத்தில் ஏற்றிவிட வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது.

வயோதிபர்களையும் பெண்களையும் பொறுத்த வரையில் படையினர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அவர்களது மன விகாரங்களையே வெளிக்காட்டுவதாக இருக்கின்றது. நடக்கவே சிரமப்படும் வயோதிபர்களை குறிப்பிட்ட தூரம் வரை ஓடுமாறு ஆயுத முனையில் மிரட்டுதல் இதில் ஒரு வகை. தள்ளாத வயதில் உயிர் பற்றிய அச்சத்தில் அவர்கள் ஓடமுயன்று நிலத்தில் விழும்போது கைகொட்டி ரசிப்பதும், சிரித்து மகிழ்வதும் மனிதாபிமானம் தொலைத்த மனவிகாரம் அன்றி வேறென்ன?

பெண்களைப் பொறுத்த வரை, அதிலும் குறிப்பாக இளம்பெண்களைப் பொறுத்த வரையில் கீழ்த்தரமான முறைகளில் பாலியல் வக்கிரம் தொனிக்கும் மிகக் கேவலமான கேள்விகளை விசாரணை என்ற பெயரில் கேட்கின்றனர். இதனால், பலர் உடல், உளரீதியாகப் பெரும் பாதிப்படையும் நிலை தோன்றியுள்ளது. மேலதிக விசாரணை என்ற பெயரில் தடுத்து வைக்கப்படும் இளம் பெண்கள் இத் தடைமுகாமில் உள்ள படையினராலும் காட்டிக்கொடுக்கும் தமிழ்க் கூலிக்குழுக்களாலும் மாறி மாறி பாலியல் வன்முறைக்கு ஆளாகி சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். இப்படியாக கைதானவர்களில் விசாரணைகளின் பின் மீள்பவர்கள் சிலர், மீளாமல் அப்படியே மாள்பவர்கள் பலர்.

தமிழீழ நிலப்பரப்பில் சிறீலங்கா அரசு நிறுவியுள்ள இராணுவத் தடைமுகாம்களில் வவுனியாவில் அமைந்துள்ள தாண்டிக்குளம் தடைமுகாம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் குறுக்கும் ஒரு தடைச்சுவர்களில் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியில் வாடுவதற்கும், மருந்துக்கு வழியின்றி நோய்க் கொடுமைகளால் துடிப்பதற்கும், உறைவிடமின்றி – அடிப்படை வசதிகள் அனைத்தும் தடுக்கப்பட்டு தவிப்பதற்கும் இத்தடைமுகாமும் ஒரு பிரதான காரணிதான்.

நாளும் பொழுதும் அச்சத்துடன் வாழும் இராணுவத்தினர் எந்தத் தமிழர்களையும் பயங்கரவாதிகள் என்ற கறுப்புக் கண்ணாடியூடாகவே பார்க்கின்றனர். மனிதாபிமானங்களைத் தொலைத்த இவர்களின் மன விகாரங்கள் முற்றி இவர்கள் மன நோயாளியாக மாறும் அபாயம் தோன்றியுள்ளது.

கண்ணுக்குத் தெரியாத எத்தனையோ காயங்களுக்கும், வார்த்தைகளில் வடிக்க முடியாத எத்தனையோ துயர்களுக்கும் காரணமாய் விளங்கும் தாண்டிக்குள தடைமுகாமும் இருந்த சுவடே தெரியாமல் முற்றாக அழித்தொழிக்கப்பட்டு துடைத்தெறியப்படும் நாள் தூரத்தில் இல்லை என்பதே உண்மை.

– ஆதிரையன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




# ஆட்டுவிப்பவன் அவனே!

ஒரு ஜனாதிபதி அல்லது ஒரு பிரதம மந்திரி அல்லது அந்த நாட்டின் தலைவர் எனப்படுவோரது கைகளிலேதான் அரசியல் அதிகாரம் இருக்கும் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அவர்கள் வகிக்கின்ற பதவிதான் அந்த நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கிற அதிகாரத்தைக் கொடுப்பதாக இருக்கும். ஆனால் சிறீலங்காவைப் பொறுத்தவரையில் அவர்களுடைய அரசியல் யாப்பு அந்த நாட்டு ஜனாதிபதிக்கு ஒரு கிளின்ரனுக்கோ, ஒரு சிராக்குக்கோ கூட இல்லாத அதி கூடிய அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறது. அப்படியிருந்தும், மக்கள் சமாதானத்துக்காகக் கொடுத்த வாக்குகளின் மூலம் பதவிக்கு வந்த சந்திரிகாவால் சமாதானத்தைக் கொண்டுவர முடியவில்லை. மாறாக மீள முடியாத போருள் அது சிக்கியிருக்கிறது. அது ஏன்? அக்கேள்விக்கான பதில் இலகுவானது... அந்த நாட்டின் அரசியல், இராணுவ முன்னெடுப்பை தீர்மானிக்கிறவர் கொழும்புக்கு கிட்டவே இல்லை. அவருக்கு பதவி, நிர்வாக அலுவலகம் கூட இல்லை. அதிலும் பார்க்க வேடிக்கை என்னவென்றால் அவருடைய தலைக்கு விலை வேறு தீர்மானித்து இருக்கிறார்கள். அதுபோக சிறீலங்காவின் அரசியல் அகராதியில் அவர் ஒரு பயங்கரவாதி.

பயங்கரவாதிகள் இரகசியமாக குண்டுகள் வைப்பதை நாங்கள் எல்லோரும் கேள்விப்பட்டிருக்கிறோம். உலகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயங்கரவாதிகள் வெளிப்படையாக ஒரு பலத்த பாதுகாப்புடைய இராணுவ முகாமை தாக்கி அழித்து அங்கிருந்து ஆயுதங்களை எடுத்துச் சென்றதாக நாம் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறோமா? இதிலிருந்து விளங்கிக் கொள்வது என்னவென்றால், சிறீலங்கா அரசு தனது அகராதியில் தமிழீழ விடுதலைப் போரைப்பற்றியும் அதைத் தலைமை தாங்கி வழி நடத்தச் செல்கின்ற தலைவர் பிரபாகரனைப் பற்றியும் பிழையான விளக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதே. இந்தப் பிழையான விளக்கமே அவர்களின் பிழையான சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளது. அதனால் அவர்களுடைய நடவடிக்கைகளும் குழப்பம் மிகுந்ததாக, முட்டாள் தனமானதாக இருக்கிறது.

13 வருடங்களாக முனைப்புப் பெற்று நடந்துவரும் தமிழர் மீதான ஆக்கிரமிப்புப் போரில் சிறீலங்கா அரசாங்கம் ஒருவித முன்னேற்றமும் அடையாமல் இருப்பதற்குத் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் சொற்பிரயோகமும் அதன் மூலம் எழுகின்ற பிழையான சிந்தனையுமே மூல காரணமாக இருக்கின்றது.

புலிகளைப் போன்ற ஒரு சக்தி வாய்ந்த விடுதலை அமைப்பை நெடுகலுமாகவே "பயங்கரவாதிகள்" என்று சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அதனால் அவர்கள் ஒருபோதும் உண்மையைத் தரிசிக்க முடியாத நிலை நேரிடுகிறது. இயலாமைகளின் வெளிப்பாடாக வெளிவருகிற கோபத்தின் மூலம் – அவர்கள் ஒரு அர்த்தமும் இல்லாமல் பயங்கரவாதி எனக் கூறுவதால் பிற்காலத்தில் வெட்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். ஏன் என்றால் அண்மைய வரலாற்று நிகழ்வுகளை பார்க்கின்றபோது, "பயங்கரவாதி" எனக் கூறப்பட்டவர்கள் நாளைக்கு நாட்டின் தலைவர்களாக வந்திருக்கிறார்கள். சிலர் சமாதானத்துக்கான நோபல் பரிசுகளை தட்டிக் கொண்டு போயிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு ஏப்பிரலில், ஒரு அவுஸ்ரேலியப் பத்திரிகை ஒன்றின் ஆசியாவுக்குப் பொறுப்பான இருந்த நிருபரை இலங்கையின் வடகிழக்குப் பிரதேசங்களை பார்த்து வர அனுப்பியிருந்தார்கள். அவர் எழுதிய கட்டுரை ஒன்றில் 'தமிழவள்' என்ற பெண் புலியைச் சந்தித்து அவருடன் செவ்வி கண்டதாகக் குறிப்பிடுகிறார். நீண்ட காலமாக தமிழீழ விடுதலைப் போரில் பங்குகொண்டிருந்த இருபத்தைந்து மதிக்கத்தக்க அந்தப் பெண்போராளியை அவர் கேட்கிறார், "நீங்கள் பிரபாகரனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" "நான் அவரைப் பற்றிவார்த்தைகளில் சொல்லமுடியாது. ஆனால் ஒன்று சொல்வேன். அவர் பிறந்த காலத்தில் நானும் பிறந்ததையிட்டு பெருமை கொள்கிறேன்."

உலகின் பல இடங்களில் வாழும் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் அவரை தங்களின் விடுதலையை பெற்றுத்தரவல்ல பெரும் தலைவராக போற்றுகிறார்கள். தமிழ் நாட்டிலே (திராவிடர் கழகம்) வீரமணி, "ஒரேயொரு திருவள்ளுவர், ஒரேயொரு கம்பர், அதே [illegible] ஒரேயொரு பிரபாகரன்" என் [illegible] இப்படிப் பலரும் பிரபாகரனை [illegible] பலவிதமான கருத்துக்களை [illegible] டவர்களாக இருக்கிறார்கள்.

www.tamilarangam.net

இப்படி [illegible] கையில் சிறீலங்கா



வின் ஜனாதி[illegible] சந்தி[illegible] சிறீலங்காவிற்கு [illegible] 'இந்தியா டு[illegible]' ஆங்கில இத[illegible] கு அளித்த பேட்டியில் "கருணை[illegible] ற்ற – தற்பெருமை பிடித்த மன[illegible] என்க் குறிப்பிட்டமை [illegible]

ஜனாதிப[illegible] ருக்கு ஒரேயொரு பிரப[illegible] ன்தான் பிரச்சனை. ஆனால் நாட[illegible] னைவுகூர வேண்டியது என்[illegible] லை, தலைவர் பிரபாகரன் [illegible] திலை சந்திரிகாவுக்கு முன் மூன்று [illegible] திபதிகள் வந்து போய்விட்[illegible] ர். தற்போதைய சந்திரிகாவின் [illegible] மனாரான யுத்த அமைச்சர் உட்[illegible] அதத்துலத்தமுதலி, ரஞ்சன் விஜயர[illegible] ன) மூன்று அமைச்சர்களைக் கண்[illegible] ருக்கிற[illegible].


அவரது [illegible] த்தில் 10 இந்திய மேஜர் ஜெனரல்களைப் பார்த்திருக்கிறார். அதுபோ[illegible] சின் காலத்தில் சிறீலங்காவின் ஜெனரல்கள் வந்து போயிருக்கிறார்கள்.

தலைவர் பிரபாகரன் (லண்டனிலுள்ள இராணுவப் பயிற்சி நிலையம்) சான்டஹேஸ்ரில் பயிற்சி எடுக்கவில்லை. லெ[illegible]னானில் பயிற்சி எடுக்கவில்லை. இராணுவக் கல்லூரிகளுக்கு போய்வரவில்லை. வீரவிலவில் கூட பயிற்சி எடுக்கவில்லை. அப்படியென்றால் அவரை என்ன சக்தி இயக்குகின்றது?

இஸ்ரேலிய ஆயுதங்களையும், சீனாவின் ஆயுதப் படகுகளையும் அமெரிக்காவின் பயிற்சிகளையும் பெற்ற சிறீலங்காவை விட விடுதலைப்புலிகள் பலமான சக்தியாக வளர்ந்து வருவதற்கு என்ன காரணம்? இலங்கையில் நிரந்தர சமாதானம் வரவேண்டுமாயின் இந்தக் கேள்விகளுக்கு சரியான பதில்களைக் கண்டுபிடிக்க வேண்டும். எப்போது சிறீலங்கா அரசாங்கமும், கொழும்புப் பத்திரிகைகளும் சிங்கள மக்களும் 'பயங்கரவாதி' என்ற சொற்பிரயோகத்தை தூக்கி எறிவார்களோ அன்றுதான் அவர்களுக்கு நல்ல அரசியல் ஞானமும் விவேகமும் கைவரப் பெறும்.

இயற்கை கொடுத்த கொடைகள் நிறைந்த இந்தத் தீவை அரசியல்வாதிகள் சீர்குலைத்து வைத்திருக்கிறார்கள். சிங்கள அரசியல்வாதிகளிடம் ஏற்படும் மனமாற்றமே அந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த வழிவகுக்கும். அன்றுதான் சிங்கள மக்கள் தாங்களே தங்களுடைய தலைவிதியை நிர்ணயிக்கிற காலம் வரும்; தமிழர்கள் தங்களுடைய தலைவிதியை நிர்ணயிக்கிற காலமும் வரும்.

சிங்களத் தலைவர்களும் சிங்கள அரசும் தமிழர்களுடைய வாழ்க்




கையை தாங்களே தீர்மானிக்கவேண்டும் என்கிற ஆதிக்க உணர்வை விடுகின்ற அன்றுதான், தமிழ் மக்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் விடுதலை பெறுவர். ஆனால் இன்று அவர்கள் அனைவரினதும் அரசியல் விதியை தீர்மானிக்கும் ஒரு தமிழனாகப் பிரபாகரனே இருக்கிறார்.

*('Hot Spring', ஓகஸ்ட், 1996 இதழில் வெளியாகிய 'The man in the Driving Seat' என்ற கட்டுரையின் தமிழாக்கம்)*



www.tamilarangam.net

# வாழ்வியலுடன் இணைந்த அரங்கியல்



குழந்தை ம. சண்முகலிங்கம்

அனைத்துக் கலைகளும் மக்களுக்காவே. கலைகள் மக்களால் மக்களுக்காக ஆக்கப்படுவதால் அவை மக்களின் கலைகள் ஆகின்றன. இங்கு 'மக்கள்' என்பது பரந்த பொருளில் கொள்ளப்படுகின்றது. 'மனிதர்' என்ற பொருளில் இச்சந்தர்ப்பத்தில் 'வேத்தியல்', 'பொதுவியல்', 'மக்கள் கலை', 'செந்நெறிக்கலை', உயர்ந்தோர் கலை', 'தாழ்ந்தோர் கலை' என்ற பாகுபாடுகள் பொருந்தாது என்பது உறுதி. பொதுநோக்கில் பார்க்குமிடத்து கலைகள் யாவும் வாழ்வியலோடு அல்லது மக்கள் தம் வாழ்வோடு இணைந்தவையாகவே இருக்கும். அனைத்து மக்களையும் உள்ளடக்கியதாகவே ஒரு மக்கள் கூட்டத்தின் 'வாழ்வியல்' அமையும். 'சங்க காலத் தமிழர்' என்னுமிடத்து அன்று வாழ்ந்த வீரர், தலைவர், தலைவியர் மட்டுமன்றி அவர்களோடு வாழ்ந்த ஏழைகள், கோழைகள், பாடி ஆடிப் பிழைத்த பாணர், விறலியர், ஏனைய கலைஞர் என்போரும் வேறு பல மக்களும் அக்காலத்துள் அடங்குவர். அத்தோடு வாழ்வியல் என்பது குறித்த ஒரு காலத்தில் வாழ்ந்த மக்களின் நம்பிக்கைகள், மூடநம்பிக்கைகள், இலட்சியங்கள், கொள்கைகள், கருத்து நிலைகள் யாவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கும். குறித்த அக்காலகட்டத்தில் அச்சமூகத்தின் தேவைக்கேற்ப முனைப்புப் பெறவேண்டியவை எனக் கருதப்படுபவை, கலை இலக்கியங்களில் முன்தள்ளப்பட்டு முதன்மை பெற்று நிற்கும். இந்த முன்தள்ளலுக்கு அக்காலத்தில் கலை இலக்கியங்களே காரணமாக அமையும். இவையே அக்காலத்தின் வாழ்வியல் முறை எனப் பிற்காலத்தவரால் நம்பப்படும். உ–ம்: வீரமும் காதலும் சங்க காலத் தமிழனின் வாழ்வியல் என்று இன்று நம்பப்படுகிறது; பரத்தமையும் பாலியல் பண்ணைகளும் கூட அக்காலத்துக்குரியன எனினும், அவை கண்டு கொள்ளப்படமாட்டா. எனவே, 'வாழ்வியல்' என்பது குறித்த ஒரு கட்டத்தில் ஒரு மக்கள் கூட்டத்தினர் மத்தியிற் செல்வாக்குப் பெற்ற நிலையில் உள்ளவர்கள் தமது மக்களின் உயர் இலட்சியங்கள், வாழ்க்கை விழுமியங்கள் எனக் கருதிக்கொண்டவற்றை முன் தள்ளி நிறுத்த, அவற்றைக் கலை இலக்கியங்கள் பாடு பொருளாகக்கொண்டு பதியவைத்தவற்றின் தொகுப்பு எனக் கொள்ளலாம்.

வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு மக்கள் கூட்டத்தினர் தம்முள் திரட்டி எடுத்துக்கொள்ளும் கோட்பாடுகள், கருத்து நிலைகள் என்பவற்றுக்கமையவே, அரங்க வடிவங்கள் தோற்றம் பெறுகின்றன. இதன் காரணமாகவே ஒரே மக்கள் கூட்டத்தினர் மத்தியில் வெவ்வேறு காலங்களில் வேறுபட்ட நாடக வகைகளும் வடிவங்களும் தோன்றி வளர்ந்துள்ளன. இத்தகைய வேறுபட்ட வாழ்வியல் முறைமைகளால் வெவ்வேறு பண்பாட்டு வலயங்கள் மேற்கிளம்பியுள்ளதை நாம் காணலாம். வெவ்வேறு காலகட்டங்களின் சிந்தனை வேறுபாட்டாலும், வெவ்வேறு மக்கள் கூட்டத்தினரின் பண்பாடு வேறுபாட்டாலும் அரங்க வடிவங்கள் வேறுபட்டவையாக அமைந்துவிடுகின்றன. எனினும் அரங்கியல் வரலாறு என்பது நாடக வடிவங்கள், வகைகளின் வரலாறல்ல; அவ்வடிவங்களையும் வகைகளையும் அரங்கக் கலைஞர் பயன்படுத்திய முறைமையால் பார்வையாளர் மத்தியில் எழுந்த மனப் பதிவுகளின் வரலாறே அரங்க வரலாறாகும். எனவேதான், ஆற்றப்படும் முறைமையே அரங்கின் சாரம் எனக் கொள்வதை விடுத்து, ஆற்றுகையின் விளைவே அரங்கின் சாரம் எனக் கருதுவது சரியெனக் கொள்ளப்படுகிறது.

மேலும் ஒவ்வொரு காலத்து அரங்கும் சில வர்க்கங்களையே குறிப்பாக முதன்மைப்படுத்தி வந்துள்ளன. உம்– மன்னர்கள், பிரபுக்கள், அதிகாரிகள், மத்தியதர வர்க்கத்தினர், உழைக்கும் வர்க்கத்தினர் என காலத்துக் காலம் வேறு வேறு வர்க்கத்தினர் முன்தள்ளப்பட்டுள்ளனர். மேலைத்தேயங்களில் 'நவீன நாடகம்' தோற்றம் பெற்ற போதுதான் 'வர்க்கப் பார்வை' என்பது துவக்கம் பெற்றது. மன்னர் காலத்திலும் வர்க்கங்கள் இருந்தபோதிலும், அது பற்றிய அறிவுத் தெளிவு பலருக்கு இருக்கவில்லை. சிறு முதலாளித்துவம் முனைப்புப் பெற்று அவர்கள் தமது அதிகாரப் பெருக்கத்துக்கும், தமது சுயசுதந்திரத்துக்கும் போராடிக்கொண்டிருந்த வேளையில்தான், அரங்கம் அந்த வர்க்கத்தின் நாடகமாகச் செயற்பட ஆரம்பித்தது. இந்தப் புதிய நாடகத்தில் புதியதொரு பெறுமான நீதி தோற்றம் பெற்றது. அதாவது அரங்கில் உணர்ச்சிகள் மட்டும் மோதாமல், கருத்து நிலைகள் மோத ஆரம்பித்தன.

அரங்கினை ஒருபோதும் மனிதனிலிருந்து பிரித்தெடுத்து நோக்கமுடியாது. தனி மனிதனுக்கும் மனித இனத்துக்கும் இடையேயுள்ள பிணைப்பை அது எப்பொழுதும் வெளிக்காட்டி நிற்கும். தனிமனிதனும் மன்பதையும் ஒன்றுடன் ஒன்று உடன்பட்டாலென்ன முரண்பட்டாலென்ன இப்பிணைப்பு நிரந்தரமானது.

ஒருவர் அல்லது ஒரு சிலர் பலரை 'விழித்தலே' கலையின் பணி. இந்த வகையிலே அரங்கக் கலை என்பது ஆற்றுவோரும், ஆற்றப்படுவோரும் நேருக்கு நேர் சந்தித்து, பரஸ்பர ஊடாட்டத்தின் மூலம் உற்பத்தியாக்கிக்கொள்ளும் ஒரு கலையாக அமைகிறது. பார்ப்போரின்றிக் கலை சாத்தியப்படாது. பார்ப்போரின் பங்கு கொள்ளலும் பங்களிப்பும் இல்லாத •

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அரங்கக் கலை நிறைவேறாது. எனவே, மக்கள் பங்குபற்றாதவிடத்து இக்கலை நேராது, நிகழாது, பிறக்காது.

மக்களிடையே நாளாந்தம் சாதாரண முறையில் இடம்பெறும் தொடர்பு கொள்ளலுக்கும், கலை மூலம் நிகழும் தொடர்புகொள்ளலுக்குமிடையில் வேறுபாடு உண்டு. சாதாரண தொடர்பு கொள்ளலின் போது மேற்கிளம்பும் விஷயங்களின் அர்த்தம் மிக எளிமையானதாகவும் வெளிப்படையானதாகவும் இருக்க, கலை சார்ந்த தொடர்பு கொள்ளலில் இரண்டு அர்த்தங்கள் இருக்கும். அதில் ஒன்று வெளிப்படையானதாக இருக்க, மற்றையது மறைவானதாக இருக்கும். மறைந்துள்ள பொருளுக்கான குறியீடாகவே கலைகளில் வரும் வெளிப்படையான பொருள் அமைந்திருக்கும். வெளிப்படையான பொருள் மக்களது வாழ்க்கை அனுபவங்களை ஒட்டியதாக இருக்கும்போது மறைபொருளை புரிந்துகொள்வது சுலபமாகிவிடும். எனவேதான் கலைகள் மக்களது அனுபவங்களோடு ஒட்டியதைத் தெரிந்தெடுத்து, அவற்றின் மூலம் ஆழமானவற்றை விளக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரங்கு ஒரு சமூக கூட்டுக் கருத்தாடல் மன்றம் என்ற வகையில் அது சமூகத்தின் சகல வகையான போராட்டங்களிலும் பங்குகொள்ளும் பிரதான கருவிகளில் ஒன்றாக உள்ளது. மனிதரை நல்லவர்களாக ஆக்குதல் என்பதே அனைத்துப் பிரச்சினைகளுக்குமான அடிப்படைத் தீர்வாக அமைகிறது. 'நல்லவர்' என்ற எண்ணக்கருவுக்குள் மன்பதையின் மேம்பாட்டுக்கான அனைத்தும் அடங்கிவிடும். மனிதரை நல்லவராக வளர்த்தெடுப்பதற்காக போராட்டம் காலாதிகாலமாக இருந்து வருகிறது. தத்துவஞானிகள், சமயக்குரவர்கள், கவிஞர்கள் அனைவரும் இதைச் சாத்தியமாக்குவதற்கே போராடி வந்துள்ளனர். அவர்கள் அதில் வெற்றி காணவில்லை. அதனால், அவர்களது அந்த இலக்கு அவர்தம் படைப்புக்களிலும் முயற்சிகளிலும் அழகிய கனவுகளாகவும், பக்தி மிகு வெற்றுரைகளாகவுமே புதையுண்டு போயுள்ளன. இதனால் தாம் வாழும் சமூக முறைமையினை மாற்றியமைப்பதற்கான போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். அதற்கு முடிவிருக்க முடியாது. அது மனித இனம் உள்ள வரை தொடர்ந்து இருக்க வேண்டிய ஒன்று. எனவேதான் சமூகத்தின் நேரிய வளர்ச்சியில் சிறுவருக்கான அரங்கு முக்கியத்துவம் பெறுகிறது. இளமையிற் கற்பவை நிலைத்து நிற்கும். இளமைக் கல்விக்கு அரங்கு பெருந்துணை என்பது கல்வியியலாளர்தம் முடிவு.


www.tamilarangam.net

மனித வாழ்க்கை மீதே அரங்கின் பார்வை குவிக்கப்படுகிறது. வாழ்வில் காணப்படும் போட்டிகள் அரங்கு ஆற்றுகையில் ஊடுருவுகிறது. நாடகத்தின் வாழ்வு, வாழ்வின் வாழ்வோடு பிணைப்புறுகின்றது. இரண்டும் ஒன்றின் மீது ஒன்று படிந்துகொள்கிறது. அவை தமது வர்ணத்தை ஒன்றுக்கொன்று பூசிக்கொள்கின்றன. அதனால் அவை இரண்டுமே செழுமையும் பிரகாசமும் அடைகின்றன.


நாடகத்தின் தூய்மையை ஒரு போதும் நிஜ வாழ்க்கை குறைத்து விடுவதில்லை. நாடகத்தைப் புரிந்துகொள்வதற்கு உதவும் சந்தர்ப்பமாக சில சமயங்களில் வாழ்க்கை அமைந்து விடுகிறது; அவ்வாறே வாழ்க்கையை உற்று நோக்கிப் புரிந்துகொள்ள உதவும் சந்தர்ப்பமாக நாடகமும் அமைந்து விடுகிறது. இதன் பயனாக மனிதர் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. புரிந்துகொள்ளல் வாழ்வைச் செழுமைப்படுத்துகிறது.

சமயத்தைப் போன்று நாடகமும் மக்களை ஒன்று கூட்டி ஒன்றிணைக்கின்றது. கூட்டமாகக் கூடியிருக்கும் மக்களுக்கு — கூடியிருத்தலால் பிறக்கும் மந்திர வலுவோடும் கரணப் பிணைப்போடும் இருக்கும் மக்கள் கூட்டத்திற்கு — நிகழ்த்தப்பட வேண்டியதே நாடகம். இந்த வகையில் நாடக நிகழ்வென்பது ஒரு சமூக வைபவம், குடும்ப ஒன்று கூடல், சமய விழா என்பவற்றின் பண்புகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.

அரங்கக் கலைஞர்கள் தமது காட்



## இயற்கையின் மடியில் எல்லாளன் மெய்யியல் ஓர்மையில் பெருஞ்சித்திரனார்!



தமிழ் வானில் அதோ ஒரு விடிவெள்ளி! வந்தேறிகளிடம் ஆயிரம் ஆண்டுகளாய் அடிமைப்பட்டு, மண்ணிழந்து, மதிப்பிழந்து, மொழிகெட்டு, விழி கெட்டு, கடலிழந்து, கரையிழந்து, கொடியிழந்து, கொற்றமிழந்து, அடிமை வாழ்வையே பேரின்பம் என நம்பி உழன்று வரும் தம்ழினம், இன்று ஒரு வழியாய் மறைந்த பொன்புலமாம் குமரிக்கண்டத்தின் திசையை நோக்குகின்றது! பன்னூறு ஆண்டுகளாய்த் தமிழரினம் நோற்ற தவமே, தமிழீழத்தில் விடுதலைக்களமாடுகின்ற எல்லாளனைத் தோற்று வித்தது போலும். அவன் என்ன, சொந்த வரலாறு அறியாது, ஐரோப்பிய வரலாறுகளையும், மார்க்சியத்தையும் கரைத்துக்குடித்து விட்டு உருசியாவைப்பார்! சீனத்தைப்பார்! என வாய்ப்பந்தலிட்டவனா? புரியாதவற்றைப் புரிந்து கொள்ளாமலேயே, புரியாத வகையில் புரிந்து கொள்ளாமலேயே பேசக்கற்றவனா? இல்லையே!

ஆனால் அவனல்லவோ இன்று தமிழரின் வீரத்திற்கும் விடுதலை வேட்கைக்கும் இலக்கணமாகி விட்டான்? அவன் எங்கு படித்தான்? என்ன கற்றான்? யாரிடம் பயின்றான்? அந்த எல்லாளன் சொன்னான்:

**இயற்கை எனது நண்பன்; வாழ்க்கை எனது மெய்யியல் ஆசான்; வரலாறு எனது வழிகாட்டி"**

அதே பல்கலைக்கழகத்தின் முதுநிலை மாணவர்தாமே பெருஞ்சித்திரனார்? அதனால் அவரது பொதுமை ஓர்மையில் மண்வாசம் உண்டு; தமிழியம் உண்டு. பெருஞ்சித்திரனாரின் பொதுமை அறிவு, தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ்நிலத்திற்கும், தமிழர் இனநலன்களுக்கும் இரண்டகம் செய்யவில்லை. மாறாக, தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ்நிலத்திற்கும் என உழைத்தே தேய்ந்தன அவரது மெய்யும் உயிரும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டுருக்களை வாழ்விலிருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் எப்போதும் இயற்கையைத் தங்கள் பார்வையில் நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும். தாம் படைக்கும் பாத்திரங்களின் தோலுக்குள் அவர்கள் புகுந்து நிற்க வேண்டும். ஒவ்வொரு பாத்திரத்தினதும் மனப்போக்குகளின் தனித்துவத்துள் புகுந்து அவற்றை ஆய்வு செய்யவேண்டும். பல்வகைத் தன்மை என்பது வாழ்வின் கலையல்லவா? பல்வகைப்பட்ட மனப்போக்குகள் கொண்டவர்கள் இருப்பதால்தான் மனித வாழ்வில் மோதல் எழுகிறது. ஒவ்வொரு பாத்திரமும் வாழ்ந்துகொண்டு வந்த கடந்த கால சமூகத்தை மறந்து விட்டு, அவற்றை உயிர்ப்புடன் படைக்க முடியாது. இன்றைய மோதல், முரண்பாடு, உடன்பாடு, சமரசம் யாவும் கடந்தகால வரலாற்றின் விளை பயன்களே. எனவே, தமக்கு அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் படைப்பாளிகள் உலகினுள் பிரவேசிக்க முயல வேண்டும். பொதுமக்கள் மத்தியில் மனிதனை நிறுத்தி அவதானிக்க வேண்டும். சமகால மோதல்களுக்குச் சுவை சேர்க்கும் எந்தவொரு சம்பவத்தையும் தவறவிடக்கூடாது. குறித்தவொரு சம்பவம் குறித்தவாறு நிகழ்ந்தமைக்கான முன் நிபந்தனையை அப்பொழுதான் அவதானிக்க முடியும். புனைவைவிட உண்மை விசித்திரமானது. ஆயினும் அதுவே உண்மை. எனவே, வாழ்க்கையிலிருந்தே எமது தராதரங்களை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்; அதற்கு வாழ்க்கை பற்றிய தெளிவான, யதார்த்தமான பார்வையும் சரியான எதிர்வினைகளும் அனைத்து ஆக்கக் கலைஞர்களுக்கும் அவசியம்.

'புத்தகத் தட்டிலிருந்து தேவைப்படும் போது எடுத்துப் பார்த்துக் கொள்ளக்கூடியதொரு, படவிளக்கங்களோடு கூடிய புத்தகமல்ல அரங்கு' என்கிறார் ருஷ்ஷிய அரங்க மேதை ஸ்டான்ஸ்லாவஸ்கி. 'குறித்த காலத்துப் பார்வையாளரின் உயிர்நிலைத் தேவைகளை அரங்கு நிறைவு செய்ய வேண்டும்' என்றும், 'சமகாலக் கருத்துக்களின் எதிர்வினையாக அமையும் நாடகங்களை அவை பழையனவாகவோ புதியனவாகவோ இருப்பினும் – அரங்கு தயாரிக்க வேண்டும்' எனவும் அவர் கூறுகிறார்.

அரங்குக்கும் வாழ்க்கைக் குறிக்கோள் திட்டம் என்று ஒன்று உண்டு. 'குறிக்கோள் இல்லாது கெட்டேன்' என அது கழிவிரக்கம் கொள்ள வாய்ப்பில்லை. சமூகத்தின் பிரச்சினைகளுக்கு அரங்கிலும் தீர்வு காணப்படுகிறது. 'சமூகத்திலும், மன்பதையின் உயிர் நிலையிலும் இயங்கிக் கொண்டிருக்கும் சிக்கலும் பல்வகைத் தன்மையும் கொண்ட படிமுறைப் போக்குகளை நாடி அறிவதும், மனிதனில் உள்ள நல்லவற்றை, மனதைக் கவரும் முறையில் வெளிப்படுத்துவதும், "மனிதனின் மெய்யான மதிப்புக்கு இழிகேடாக அமையும்" அனைத்துக்கும் எதிராக கருணையற்றதோர் போராட்டத்தைத் தொடர்வதும், அனைத்துக் கலைகளினதும் – குறிப்பாக அரங்கக் கலையினது உயிர்க் குறிக்கோளாகும்' என்று மைக்டேவிடோ என்பார் கூறுகிறார்.

www.tamilarangam.net



மனிதரை நல்லவராக வளர்த்தெடுப்பதற்காக போராட்டம் காலாதிகாலமாக இருந்து வருகிறது. தத்துவஞானிகள், சமயக்குரவர்கள், கவிஞர்கள் அனைவரும் இதைச் சாத்தியமாக்குவதற்கே போராடி வந்துள்ளனர். அவர்கள் அதில் வெற்றி காணவில்லை. அதனால், அவர்களது அந்த இலக்கு அவர்தம் படைப்புக்களிலும் முயற்சிகளிலும் அழகிய கனவுகளாகவும், பக்தி மிகு வெற்றுரைகளாகவுமே புதையுண்டு போயுள்ளன.

தமது தொழில்களிலும், ஆக்க முயற்சிகளிலும் இலட்சியமொன்றினை நோக்கிய தேடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மக்கள் பற்றி அரங்கு கூற வேண்டும். மனிதனும் மனிதனது பணியுமே அரங்கின் ஆய்வுப் பயணத்தின் குறியிலக்காகும். மனிதனது அன்றாட கருமங்களுக்கும், கடமைகளுக்கும் அவனது ஆன்மீக உலகுக்கு மிடையிலுள்ள உறவினையே அரங்கு கண்டுகொள்ள முற்படுகிறது. இவ்விரண்டுக்குமிடையில் இசைவு இருப்பின் நல்லது. இசைவு இல்லையெனில் அரங்கு என்ன செய்யமுடியும்? அந்த இசைவின்மையால் வரும் மோதலைக் காட்ட வேண்டியதுதான். அனைத்து நிலைமைகளிலும் நாடக ஆசிரியர்களும் அரங்கும் கட்டாயமாக மன்பதையை, மானிடத்தை தமது கட்டளைக் கல்லாக, உரை கல்லாக தெரிந்தெடுத்துக் கொள்வது அவசியம். 'மானிடமே' அவர்களது கலங்கரை விளக்கம்.

ஒவ்வொரு மக்கள் கூட்டத்தினரது அரங்கும், தத்தம் பெருமை மிக்க மரபுகளும், பண்பாடும் தரும் இதந்தரு மெய்ப்பொருளை தனது உயிர்மூச்சாகச் சுவாசித்துக் கொண்டு, அந்த உற்சாகமான வீரியம்மிக்க மனநிலையில் நின்றுகொண்டு சமகாலப் பிரச்சினைகளை அணுகும் போதுதான் நாடக அரங்கு பலம் மிக்கதாக, பயன் மிக்கதாக உயரும். தமது மக்கள் மீது ஆழமான பற்றுதல் கொண்டவர்களாக இருந்து கொண்டு மானிடத்தை நிமிர்ந்து நோக்கியவாறு மக்களை உளவியல் ரீதியாகவும் மெய்யியல் ரீதியாகவும் ஆய்வு செய்தல் அரங்க மரபாக இருப்பது அவசியம்.

“அரங்கு ஒரு அரசியல் பாராளுமன்றம், அங்கு, அக்காலத்தில் பிரதான பிரச்சினைகள் யாவும் உயிர்நிலையில் வைத்து விவாதிக்கப்படும்” என்கிறார் அலெக்சாண்டர் ஹேர்சன் என்பார். தனது சமூகத்தின் கனதியான பிரச்சினைகளையும், மோதல்களையும் முரண்பாடுகளையும் விவாதிக்கும் அரங்கு, உண்மையில் பாராளுமன்றத்தைவிட மேலானதொரு பணியினை, காத்திரமான முறையில் செய்கிறது எனலாம். காரணம் அரங்கு மக்களோடு கூடி நின்றே பிரச்சினைகளை விவாதிக்கின்றது. எனவே, அரங்கில் விவாதிக்கப்படும் சமூகப் பிரச்சினைகள் யாவும் பார்வையாளரது அங்கீகாரத்தைப் பெறுமிடத்து அவ்வங்கீகாரம் மக்களாணை பெற்றதொரு வலுவுள்ள அரசியற் கருத்தாக அமைகிறது. இதனால் அரசாங்கங்களும் அரசியல் தலைவர்களும் அரங்கின் நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை கொள்வர் என்பது உறுதி. இவ்வகையில், ஜனநாயக நடைமுறையின் சிறந்ததொரு ஊர்தியாக அரங்கு அமைவதை நாம் காணலாம். மக்கள் கருத்து ஜனநாயகத்தின் உயிர்மூச்சு. சுதந்திரம் மக்கள் கருத்தின் அடித்தளம். சமூகம் எதிர்நோக்கும் போராட்டங்களை நேர்மையோடு பிரதிபலிக்கும் அரங்கு, மிகுந்த பண்பு நயமுடைய மனிதரை வடித்தெடுப்பதில் துணைபுரியும். இத்தகையதொரு அரங்கு வளர்வதாயின் அவ்வரங்கில் படைப்புக்களை விளக்கத்தோடு நயக்கின்ற, விமர்சிக்கின்ற பார்வையாளர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கள் அவசியம். அரங்கப் படைப்பின் மூலப் பொருளாக உள்ள, மக்களே, அதன் வளர்ச்சியின் உரைகல்லாகவும் உள்ளனர். இவ்வாறு மக்கள் நயப்பையும் விமர்சிப்பையும் பெறும் அரங்கம், மக்களது வாழ்வுப் போராட்டத்தின் சத்தியப்பதிவாக அமைந்துவிடும். அத்தகைய பதிவுகளாக அமையும் படைப்புக்கள் அன்பெனும் மெய்ப்பொருளையும், மன்பதை மீது தளராத நம்பிக்கையையும் தன்மூச்செனச் சுவாசிக்கும்.

பார்வையாளரது திறன்களை வளர்ப்பது அரங்கின் பிரதான பணிகளுள் ஒன்று எனக் கொள்வது அவசியம். இத்திறன் வளர்ச்சி இளமையில் ஆரம்பமாவது நல்லது. இளம் பார்வையாளரது இதயத்தைப் பேணிப் பயிற்றி வளர்ப்பது அவசியம். வெகுஜனக் கல்வியும் மனிதரை வளர்த்தெடுத்தலும் அரங்கின் இலக்கு. “ஆற்றலை வளர்த்தல்” என்பது மக்களை, பண்பாட்டு ரீதியிலும் “ஆன்மீகம்” இல்லது “மெய்ப்பொருள் காணல்” என்ற ரீதியிலும் செழுமையடையச் செய்வதாகும். இது இளமையில் ஆரம்பிக்கப் பட வேண்டிய ஒன்று. ஐந்தில் வளைக்க வேண்டியது. உலகினை, அதன் பல்வகைத் தன்மையதான சிக்கலோடும் நாம் எமது குழந்தைகளுக்குத் திறந்து விட வேண்டும். அவர்கள் யதார்த்த உலகினை நேரடியாகத் தரிசிக்க வேண்டும். ஒருவரில் ஒருவர் அக்கறை கொள்ளுதல், வாழ்க்கைச் சிக்கலைப் புரிந்து கொண்டு, அவற்றை எதிர்கொள்ளல்; கொடுமைக்கும் பலத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டைப் பிரித்தறிதல்; பிறரின் துயரினை அறிதல் என்பவற்றில் அக்கறை உள்ளவர்களாக குழந்தைகளை வளர்த்தெடுத்தல், சிறுவருக்கான அரங்க நடவடிக்கையின் நோக்கமாக அமைதல் அவசியம்.

பிள்ளைகளும் பிரச்சினைகளை எதிர்நோக்குகிறார்கள். பிரச்சினைகளை எதிர்நோக்கக் கற்றுத் தரும் நாடகம் பிள்ளைகளுக்கும் உதவ வேண்டும். அதேவேளையில், கலை என்ற வகையில் அது களிப்பூட்டுவதாகவும் வினோதம் நிறைந்ததாகவும் இருக்கவும் வேண்டும். பெற்றார் மதித்து நயக்காத அரங்க வகையை பிள்ளைகளும் நயக்கார். வளர்ந்தவர்களுக்குள் சிறுவர்களுக்கான குணாம்சங்கள் இருப்பது போலவே சிறுவருக்குள்ளும் தாம் வளர்ந்தவர் என்ற எண்ணம் இருப்பதை நாம் அறிந்து கொள்வது அவசியம். எனவே, இரு சாரராலும் நயக்கப்படக்கூடிய அரங்க

www.tamilarangam.net

(இது ஒரு உண்மை நிகழ்ச்சியை வைத்து எழுதப்பட்டது. இக்கவிதையில் சொல்லப்பட்ட குடும்பத்தலைவன் யாழ்ப்பாணத்துக் குப்பிழான் என்ற கிராமத்தைச் சேர்ந்த நா. இராசரத்தினம் என்ற விவசாயி)

# ஒரு ஈழத்தமிழனின் இறுதிப் பயணம்

வழுவிலா உழவுத் தொழிலினைச் செய்து
வாழ்ந்த அக் குடும்பம் எளிமையின் வடிவம்!
அழகிய கிராமம் இவர்களின் உலகம்!
அதிலொரு சிறுநிலம் அவர் பயிர் விளைநிலம்;
வாழ்வுடன் பின்னிய கிராமமும் நிலமும்
வளம்தரு பயிர்களும் உளம் நிறை எழிலாய்
வளர்ந்திட வாழ்வொரு நிறைவினைக் கண்டது!

ஆண்டவனு பவித்த தமிழ்நிலத் தினிலே
குண்டுகள் வீழ்ந்தன! குடிசைகள் எரிந்தன!
குடும்பம் பலவும் சிதறி அழிந்தன!
இளைஞர் முதியவர் குழந்தைகள் அனைவரும்
அழிவின் விழிம்பினில் நின்று கலங்கினர்!

அரசுதன் மக்களை அனாதைகள் ஆக்கியும்
குண்டுகள் போட்டுக் கொன்று குவித்தும்
நியாயப்படுத்தல் எந் நாட்டினில் உண்டு?
வேறோர் இனத்திலிக் கொடுமை ஏற்படின்,
சீறி எழுந்து உலகமே கொதிக்கும்!
உலகத் தமிழனோ ஒருமுறை நிமிர்ந்து
உரத்துப் பேசுவான்; உறங்குவான் பின்பு!

பின்னரும் தொடர்ந்த கொடுமையால், வாழ்விடம்
அன்னியர் கையில் வீழ்ந்திடப் பலரும்
உயிருக்கஞ்சி ஓடிச் சிதறினர்!

அடைமழை தனில் நெடும் தொலைவு நடந்து
ஆயிரம் ஆயிரம் தமிழர் அலைந்தனர்!
அவர்களில் ஒருவனாய்ச் சென்ற அக்குடும்பத்
தலைமகன் முதுமையில் அனைத்தையும் இழந்து,
செழித்து வளர்ந்த பயிர்களும் வாழ்ந்த
அழகிய கிராமமும் மக்களும் குடும்பமும்
உளத்தினில் எழுப்பிடு நினைவுகள் சுமந்து
குளிரினில் நடுங்கித் தளர்வுடன் நடந்தான்;
வழியினில் உடம்பு விறைத்திட வீழ்ந்தான்!
வாழ்வு முடிந்தது! வாழ்வின் வளத்தை
மண்ணினில் கண்ட அம்மண்ணின் மைந்தனின்
இறுதி இவ்வாறு அமைந்ததே இன்று!

கவிஞர் க. கணேசலிங்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நடவடிக்கைகளையே சிறுவரும் விரும்பி நயப்பர். மேலும், ஒவ்வொரு தலைமுறையும் வேறுபட்டதாக உள்ளது. வேறுட்ட விருப்புக்கள், வேறுபட்ட பிரச்சினைகள், வேறுபட்ட தேவைகள் என, சந்ததிகளுக்கிடையில் வேறுபாடுகள் உள்ளன. இளைய தலைமுறையோடு நாம் சமாந்தரமாக நில்லாதவிடத்து அவர்களைப் புரிந்து கொண்டு அவர்களது தேவைகளை நிறைவு செய்வது கடினம். நாம் அவர்களைத் தொடர்ச்சியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இத்தகைய புரிந்து கொள்ளலின் மூலமே ஒரு சமுதாயத்தின் பண்பாட்டுத் தொடர்ச்சியையும் உலகளாவிய ரீதியில் உள்ள பொதுவான வளர்ச்சியையும் இணைத்து ஒரேவேளையில் எமது தனித்துவத்தையும் உலக சமூகத்தில் எமது உரிமையையும் நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இந்த வகையிலே அரங்கு ஒரு அறிவூட்டல் சக்தியாகவும் பண்பாட்டுச் சக்தியாகவும் இருக்க முடியும்.

புதியதைப் படைக்க முற்படும் கலைஞன் தனது கலைப்படைப்புக்கு தானே பொறுப்பேற்க வேண்டும். புதியதைப் படைப்பவர் மக்களோடு சேர்ந்து படைக்க வேண்டும். மக்களுக்காக நான் படைக்கிறேன் என்ற மமதை மேலோங்கிய நிலையில் நின்று கொண்டல்ல; மக்களின் சார்பாக நின்று கொண்டுமல்ல. மக்களுக்குப் புறத்தே நின்றுகொண்டுமல்ல, அவர்களோடு சேர்ந்து நின்று படைக்க வேண்டும். புதியதைப் படைத்து அதில் வெற்றிப் பெருமிதம் கொள்வதாயின் படைப்பாளியின் பாதத்தின் அடியில் பூமி – அவனது சொந்தமண் இருக்கவேண்டும். அது அவனுக்குப் பலத்தைக் கொடுக்கும். மக்களே அந்தப் பூமி. மக்களோடு இணைதல் – என்பது தமது ஆக்கத் தொழிற்பாட்டுக்கு தடையாக அமைந்துவிடும் என்று சில கலைஞர் கருதக் கூடும். சாய்மனைக் கதிரைகளில் சாய்ந்து கிடந்து கொண்டு படைப்பவர் அவ்வாறு கருதலாம். கூட்டாகச் சேர்வதற்கும் முழுமையான தனிமனிதப் படைப்பாக்கத்திற்கும் இடையில் முரண்பாடு இருப்பதில்லை. அதற்குப் பதிலாக கூட்டு முயற்சி தனிமனிதனின் ஆற்றலை மேலும் வளர்க்கும் என்பதே உண்மை. பொறுப்புணர்ச்சி அற்றதும் சுயநல மிக்கதுமான ஒரு சமூகத்தில் கூட்டு முயற்சி சாத்தியமாவது கடினம். எனினும் சமூகத்தின் சவால்களை எதிர் கொண்டு சமூகத்தை நல்வழி நடத்துவது அரங்கின் பணியாகும்.

மக்களை சிந்திக்கத் தூண்டுவது அரங்கின் நோக்காக உள்ளது. இந் நோக்கினை நிறைவு செய்வதற்காக அரங்கு பல வழிகளில் தனது பார்வையாளரை அணுகுகிறது. மேடையில் நிகழ்பவற்றை அமைதியாக இருந்து பார்த்தவண்ணம் அவற்றிற்கு சாட்சியாக இருந்து கொண்டு அங்கு நடப்பவை பற்றி பார்வையாளர் தத்தமக்குள் சிந்திப்பது இவ்வணுகுமுறையின் பயனாக அமைகிறது. பார்வையாளருடன் நேரடித் தொடர்புகொள்ள முற்படும் இன்னுமொரு முறைமை பார்வையாளரை இணைத்துக்கொண்டு ஆற்றுகையை வளர்த்தெடுப்பதாக அமையும். இதற்குப் பார்வையாளரது தீவிர பங்குகொள்ளல் அவசியமாகின்றது. இதில் ஆற்றுவோர், பார்ப்போர் என்ற பேதம் பெருமளவில் இருப்பதில்லை. இத்தகைய அரங்குகள் மூன்றாம் உலக நாடுகளில் முனைப்புப் பெற்று வருவதைக் காணலாம். மக்கள் மத்தியில் விடுதலை உணர்வை வளர்த்தெடுப்பதற்கும் அவர்களைத் தன் முனைப்பும் செயல்முனைப்பும் உள்ளவர்களாக ஆக்குவதற்கும் இவ்வரங்கு முறை பயன்படுத்தப்படுகின்றது.



வெகுஜனக் கல்வியும் மனிதரை வளர்த்தெடுத்தலும் அரங்கின் இலக்கு. “ஆற்றலை வளர்த்தல்” என்பது மக்களை, பண்பாட்டு ரீதியிலும் “ஆன்மீகம்” இல்லது “மெய்ப்பொருள் காணல்” என்ற ரீதியிலும் செழுமையடையச் செய்வதாகும். இது இளமையில் ஆரம்பிக்கப்பட வேண்டிய ஒன்று. ஐந்தில் வளைக்க வேண்டியது.

அரங்கு தனதும் தான் சார்ந்திருக்கின்ற சமூகத்தினதும், சிறந்த, உயர்ந்த மரபுகளின் பாரத்தால் அழுத்தப்பட்டு விடவும் கூடும். எனவே, அது இருக்கின்ற மரபுகளோடு புதிய மரபுகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இருக்கின்ற மரபுகளைச் செழுமைப் படுத்தவும் வேண்டும். அவற்றை விஸ்தரிக்கவும் வேண்டும். அந்த விஸ்தரிப்பும் செழுமையும் சமகால வாழ்வுடன் பிணைக்கப்பட வேண்டும். இளைஞரின் சிந்தனையே அரங்குக்குப் புத்துயிர்ப்பையும் புதிய வீரியத்தையும் கொடுக்கவல்லது. இங்கு இளைஞர் என்பது, உள்ளத்தால், இதயத்தால், சிந்தனையால், அறிவால், அன்பால், உண்மையால் இளைஞராக உள்ளவரை அல்லாது வெறுமனே உடலாலும் வயதாலும் இளையவராக இருப்பவரைக் குறிக்காது. அரங்கின் வளர்ச்சிக்குத் தடையாக அதன் மூலம் சமூகத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக் கூடிய பழமைவாதிகளும் படுமுட்டாள்களும் எங்கும் எவ்வயதிலும் இருக்கத்தான் செய்வர். இது தாண்டமுடியாத தடையல்ல. புதுமையும் தற்புதுமையும் ஊடறுத்து நோக்கும் பான்மையும் கொண்டதொரு கலைஞன் எந்தத் தடையையும் மீறித் தன்னை வெளிப்படுத்திய வண்ணம் இருப்பான். தடைகள் அவனது வீரியத்தை மேலும் அதிகரிக்கச் செய்ய உதவும்.

மிகவும் துயருற்று இருக்கும் வேளையில் மக்களுக்கு அவர்தம் சமூகத்தின் புத்துயிர்ப்புப் பற்றியும் அப்புத்துயிர்ப்பை ஏற்படுத்த வழிசமைப்பவர்கள் மக்கள்தான் என்பதுபற்றியும் உணர்த்துவது அவசியம். கடந்த காலங்களில் பல நாடக ஆசிரியர்கள் இப்பணியினை நன்கு செய்து வந்துள்ளனர். அத்தகையவர்களுள் ருஷ்ஷிய நாட்டு நாடகமேதை அன்ரன் செக்கோவ் ஆவார். “காலம் கடந்தோடும்; நாம் நிரந்தரமாகப் போய்ச் சேர்ந்து விடுவோம்; அவர்கள் எம்மை மறந்து விடுவார்கள்; எம்மில் எத்தனை பேர் இருந்தோம் என்பதையும் மறந்துவிடுவார்கள். நாளை, எமக்குப் பின்னர் வாழ இருப்பவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுப்பவர்களாக மாறும் அவர்கள் இன்று இருப்பவர்களை ஏதேனும் சில நல்ல வார்த்தைகளால் நினைவில் நிறுத்தி வாழ்த்துவார்கள்” என்று செக்கோவின் நாடகப்பாத்திரம் ஒன்று கூறுகிறது. இது இன்றைய எமக்கெனக் கூறிய வார்த்தைகள் போலே இருக்கிறது! “எமக்கு மகிழ்ச்சி என்பது இல்லை; அது இருக்கக் கூடாது; இருக்கவும் மாட்டாது; நாம் பாடுபட வேண்டும்; கடுமையாக உழைக்க வேண்டும்; தூரத்தே வரவிருக்கும் எமது அடுத்த தலைமுறையினருக்குரியதே மகிழ்வும் களிப்பும்” என்று ஒரு பாத்திரம் கூறுகிறது. செக்கோவைப் போன்றே ஒஸ்றோவஸ்கியும், “எமக்காக எவரும் பரிதாபப்படவேண்டாம்; எம்மைப் பார்த்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துப் பொறாமைப்படுங்கள்” என்கிறார். மக்கள் கூட்டமொன்று தனது வளர்ச்சிக்காக, விடுதலைக்காகப் பாடுகளைச் சுமந்து போராடிக்கொண்டு இருக்கும் வேளையில், அம்மக்களின் மனநிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இவ்விரு ஆசிரியர்களும் எடுத்துக் காட்டியுள்ளனர். உருக்கு எவ்வாறு ஆலையில் உருக்கி உரமேற்றப்படுகிறதோ, அவ்வாறே இலட்சியத்திற்காகப் போராடும் வேளையில் மனிதனும் உருக்குப்போன்று உரமேற்றப்படுகின்றான். அத்தகைய மனிதன், மனிதனது இன்னல் கண்டு மெழுகு போல் உருகுவான் என்பதும் குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

துன்பம் நிறைந்த காலகட்டத்தில் துணிவோடு வாழ்ந்தவர்கள்; துயரத்திற்கு ஆட்பட்டுக் கிடந்தவர்கள்; விடிவை நோக்கி உழைத்தவர்கள் ஆகிய அனைவருக்கும் அவர்களது வாழ்நாளில் கிடைத்தது பாடுகளும் துயரங்களும் மட்டும்தான் என வெளியுலகுக்கு தோன்றினும், ‘நாம் இக் காலகட்டத்தில் வாழ்ந்தோம், சிலுவையைச் சுமந்தோம், சுண்ணாம்புக் காளவாயில் வெந்தோம்; இவை உண்மைதான்; எனினும் இவை யாவற்றையும் எதிர்காலத்தின் மகிழ்வுக்காகவே செய்தோம்’ என்ற எண்ணம் அவர்களுக்குத் தரும் நிரந்தரமான ஆனந்தத்தைப் பற்றி எல்லோரும் அறிந்து கொள்வதில்லை.

இவ்வாறு, தமது மக்களின் பிரகாசமான எதிர்காலத்திற்காக, மிகுந்த அர்ப்பணிப்பும், தியாகமும், கடும் உழைப்பும், போராட்டமும் நடத்தி அரசியல் ஞானிகளதும் நாடகமேதைகளதும் கனவுகளை நனவாக்கிய சோவியத் ஒன்றியம், அந்த நனவை நிரந்தரமாக்கத் தவறியது. 73 ஆண்டுகளாகத் அந்த நனவு கரைக்கப்பட்டு வந்த சோகம் மனித விடுதலைக்காக போராடும் அனைத்து மக்களது மனங்களையும் விழிப்புறச் செய்வது அவசியம். “பொது உடமை மனிதன் என்பவன் நல்லவன். நல்லதைச் செய்பவன்” என்ற உயர் இலட்சியத்தை வாயளவில் அன்றி, உண்மையில் பேணிப் பாதுகாத்து, நாடி அடையத் தவறியமையே அடிப்படைக் காரணம் எனலாம்.

சமகாலப் பிரச்சினைகளை நாடகங்கள் வெளிப்படுத்த வேண்டும் என பெரும்பாலும் எதிர்பார்க்கப்படுகிறது. சமகாலம் என்பது என்ன? இன்று நிகழ்வதை நேரடியாகக் கூறுவது மட்டும் தான் சமகாலப் பிரச்சினை என்பதுள் அடங்குமா? நாடகமொன்றில் கையாளப்பட்டுள்ள பிரச்சினைகள், இன்று மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை ஒத்ததாக இருப்பின் அவற்றைச் சமகாலப் பிரச்சினை என முடியாதா? சொத்தினையும் லாபத்தையும் மக்களைவிட மேலானதாகக் கருதும் விழுமியங்கள் இன்றும் எமது சமூகத்தில் மேலோங்கி நிற்பதை நாம் காண முடியும். இது விளை பொருள் கலாச்சாரம் எனப்படும். இதனைக் கண்டு வெறுக்கும் நாடக ஆசிரியர் ஒருவர் பாரதத்தில் வரும் சூதாட்டத்தில் அப்பண்பினைக் காணலாம். எமக்கு முன்னரும் எம்மை ஒத்த மூடர் வாழ்ந்தனர் என்பதையும், அதனால் அன்று அவர்கள் பட்ட துயரங்களையும் எமக்கு நினைவுறுத்தி எம்மை எச்சரிக்க முடியும். அந்நாடகம் பாரதகாலத்திற்குரியது என்பதற்காக அதனை நிராகரிக்க முடியாது.

விளைபொருள் பண்பாடு சுய நலத்தை விருத்தி செய்கிறது. சுய புகழுக்கான தீவிர ஆசையை வளர்க்கிறது. இப்புகழ் நாட்டம் சுயமேன்மைக்கான அவாவை வளர்க்கிறது. இத்தகைய நிலை சமூகத்தின் உயர்மட்டத்தில் ஊழலுக்கு வழிவகுக்கிறது. உயர்வாக்கம் உயர்வான நாட்டங்கள் அற்ற, பண்பற்ற, தனித்தனி மனிதர்களாக இழிந்துவிடுகிறது. ஒவ்வொருவரும் தன்னிலிருந்தே தான் அந்நியப்பட்டு நிற்கும் அவலம் எழுகிறது. இது சமூகத்தின் ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும். சமகாலச் சமூகத்தில் இந்த இழிநிலையைக் காணும் கலைஞன், பாரதச் சூதாட்டத்தில், இப்பண்பில் அருவருக்கத்தக்க உச்சப்புள்ளியைக் காண்கிறான். எனவே பாரதச் சூதை அப்படியே மீண்டும் படைத்து மக்களுக்கு முன்வைக்கிறான். அதில் வரும் பாத்திரங்கள் தமது காலத்துள், வாழ்ந்து தமது காலத்தின் சாரத்தைப் பிரதிபலித்து நின்றால், அது இன்னும் அர்த்தமுள்ளதாக அமைந்துவிடும். இவ்வாறே பழைய நாடகங்களும் சமகாலப் பயன்கொண்டவையாக அமைந்துவிடுகின்றன.

சிந்தனையிலுள்ள அழுக்குகளை வெளியேற்றி மனிதனது ஆத்மாவைச் சுத்திகரிப்பதே அரங்கின் தலையாய பணியாகிறது. கூட்டு அனுபவத்தின் மூலமே அரங்கு பார்வையாளரது ஆத்மாவைச் சுத்திகரிக்கிறது. இச் சுத்திகரிப்பின் மூலம் மனிதனை நல்லவனாக்கவும், நல்லதைச் செய்யத்

## மரணம் முளைத்து எழும்...!

இளைஞனே..
உன்
தேசத்தின்
சுதந்திர
விடுதலையை
பிரசவிப்பதற்காய்...
அன்றாடம்
நீ...
குருதியில்
குளிக்கின்றாய்!

களங்கம்
இல்லாத
உந்தன்
நெஞ்சில்
விடுதலையின்
சுமைகள்
எத்தனை?
காயங்கள்!

உன்...
கரம்
பற்றியிருக்கும்
துப்பாக்கியை
விட
உன்...
உணர்வுகள்
கூர்மையானது!

நீ...
விடுதலையை
மட்டும்
நேசிப்பவன்!
அதனால்....
தான்
இறந்த பின்பும்
உயிர்த்து
எழுகின்றாய்!

கொய்யை
த. தமிழ்க்கண்ணன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தூண்டவும் அரங்கு பயன்படுகிறது. எனவேதான் நாடக ஆசிரியன் தான் படைக்கும் அனைத்துப் பாத்திரங்களையும் மானிட நேயத்தோடு நின்று அணுகி நாடகத்தைப் படைப்பது அவசியமாகின்றது. கேலிச் சித்திரிப்பாக படைக்கப்படுமிடத்தும் படைப்பாளியின் உள்ளத்தில் மானிட நேயம் இருப்பது இன்றியமையாததாகின்றது.

அரங்கு சமூகத்தோடு மோதிக் கொண்டும் முரண்பட்டுக் கொண்டும் நின்று செயற்படாது சமூகத்திடம் கூடி நின்று பணிபுரியும் போதுதான் ஆக்கத்திறன் உள்ள படைப்புக்கள் தோன்றும். (உதாரணம்) சமகால வாழ்வை மேடையில் சித்தரிப்பதாயின் அரங்கு மக்களோடு அதாவது எத்துறை சார்ந்த விஷயத்தைச் சித்தரிக்கப்போகின்றதோ, அத்துறை சார்ந்த மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாக இருக்க வேண்டும். மனிதர்களுக்கிடையில் நிலவவேண்டிய பரஸ்பர நல்லுறவு, நம்பிக்கை என்பன சமூகத்தின் செழுமையான வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதவையாகும். இதனை அரங்கு வளர்த்தெடுப்பதாக இருந்தால், மக்களிடம் எவை, எவை ஆழமாகவும் விசுவாசமாகவும் உள்ளனவோ அவற்றைக் கண்டுகொண்டு, பேணுவதற்கு உதவ வேண்டும். (உ–ம்) குடும்பம் என்ற நிறுவனம் மிகவும் இன்றியமையாததொன்று. அதன் அழகு, அங்கு நிலவும் அன்பு, இரக்கம், பரிவு, புரிந்துணர்வு, பாசம், நேர்மை, தியாகம், உண்மை என்பன மனிதரை மேம்பாடு உடையவர்களாக உயர்த்த உதவும். இதனூடாக சமூகம் பரஸ்பரம் புரிந்துணர்வும், பரிவும், அன்பும் நிறைந்த மனிதரைக் கொண்டதாக மலரும். குடும்பத்தின் அழகை வெளிப்படுத்துவதின் மூலம் அரங்கு சமூகத்தின் உயர்வுக்கு உதவலாம். குடும்பத்தில் பிணக்குகள் நிலவுகிறது என்பற்காக, குடும்ப முறைமையை நிராகரிக்க முடியாது. அழகிய குடும்பங்களைக் கொண்டிராத சமூகம் அடித்தளம் சிதைந்த கப்பலுக்குச் சமானம்.

கலை என்றாலே அது எந்த வகையிலும் இயற்கையாகாது. அதில் ஒரு செயற்கைத்தனம் இருந்தே ஆகும். வாழ்க்கை பற்றியதொரு செயற்கையான சித்திரிப்பே கலை ஆகும். ஆயினும், இச்செயற்கையான சித்திரிப்பு எப்பொழுதும் உண்மையானதொன்றின் விபரங்களிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும். ஒரு காலகட்டத்தின் அல்லது ஒரு கணத்தின் இதயத்துடிப்பினைத் தொட்டுணர்ந்து, சமூகத்தின் வெளிப்பாடாக அமைவதே நாடகம். செயற்கையானதொன்றாயினும் அது ஒரு சமூக நிகழ்வாகவே அமைய வேண்டும்; இல்லையேல் அது வெறுமையானதொன்றாகிவிடும். காலத்தின் பிரதிபலிப்பு என்று கூறப்படுவது முற்றுமுழுதாகச் சரியானதா? அரங்கில் காலம் என்பது சரியாகவும், உள்ளது உள்ளவாறும் காட்டப்படுகிறதா? கலைஞருக்கும் பார்வையாளருக்கும் இடையில் இடம்பெறும் சிருஷ்டிப் படிமுறையில், சிதைத்தல் என்பது அரங்கின் இயல்பாக அமைந்துவிடுகிறதே. இராவணனின் இலங்கை என்பது கம்பனின் வாய்மொழியல்லவா? எனினும், உண்மையிலிருந்து கலைப் படைப்புக்கள் எவ்வளவு தூரம் மாற்றியமைக்கப்பட்டாலும், அப்படைப்பினை மக்கள் இனங்கண்டு புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும். மக்கள் தமது அனுபவத்தோடு பொருந்திச் சரிபார்த்துக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். வாழ்க்கையில் மிகச் சிறியதாகத் தோன்றும் ஒன்று அரங்கில் மிக முக்கியமானதொரு கருத்து நிலையாக அமைந்து விடும்.



மிகவும் துயருற்று இருக்கும் வேளையில் மக்களுக்கு அவர்தம் சமூகத்தின் புத்துயிர்ப்புப் பற்றியும் அப்புத்துயிர்ப்பை ஏற்படுத்த வழிசமைப்பவர்கள் மக்கள்தான் என்பதுபற்றியும் உணர்த்துவது அவசியம். கடந்த காலங்களில் பல நாடக ஆசிரியர்கள் இப்பணியினை நன்கு செய்துவந்துள்ளனர். அத்தகையவர்களுள் ருஷ்ஷிய நாட்டு நாடகமேதை அன்ரன் செக்கோவ் ஆவார்.

இன்றைய உலகில் மனித வாழ்வு என்பது பல்வகைத் தன்மையும் கொண்டதொன்றாக உள்ளது. எனவே, இன்றைய நாடகங்கள் தீர்வுகளை அதிகம் முன்வைப்பதில்லை. அவை மனித உளக்கிளர்ச்சிகளின் வீரியம், பல்வகைப் பண்பு, குழப்பம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பிரச்சினைகளை முன் நிறுத்தும். அவ்வாறு முன் நிறுத்துவதன் மூலம் நாமாகவே எமது சிக்கல்களைப் புரிந்து கொள்ள உதவும். உளவளத்துணை ஆலோசகர் போன்று, எமது பிரச்சினைகளை நாமே கண்டுகொண்டு, சமநிலை காண உதவும்.

பல காலமாக 'மக்கள் அரங்கு' என்பது பற்றிப் பேசப்பட்டு வருகிறது. 'மக்கள் அரங்கு' என்றால் என்ன? என்பது பற்றிய சரியான, எக்காலத்துக்கும் பொருந்தக்கூடியதொரு விதியை வகுத்துக்கொள்வது கடினம். குறித்த ஒரு காலத்துக்குரிய ஒன்றினையே வகுத்துக்கொள்ள முடியும். 'ஜனரஞ்சகம்' என்பது எம்மத்தியில் மலினப்பட்ட கலைகளைக் குறிக்கும் ஒரு பதமாக மாறி வந்துவிட்டது. சாதாரண மக்களுக்கான கலையை 'மக்கள் அரங்கு' எனலாம். அவை சாதாரண மக்களின் உண்மையான தேவைகளை நிறைவு செய்வனவாக இருக்கவேண்டும். சாதாரண மக்கள் மத்தியிலும் பலதரப்பட்ட குழுவினர் இருப்பர். உ–ம்: நேற்றைய மக்கள், இன்றைய மக்கள், நாளைய மக்கள் எனப் பலவாறு இருப்பர். வெவ்வேறு குறிச்சிகளில் வாழ்வதால் வேறுபட்டு நிற்பர். எனவே, இவர்கள் யாவருக்கும் பொருந்தக் கூடிய ஒரு சாராசரியையே நாம் கருத்திற்கொள்ள முடியும்.

'மக்கள் அரங்கு' பின்வரும் பண்புகளைக் கொண்டதாக அமையவேண்டும் என்கிறார் 'எரிக் பென்ட்லி' என்பவர்.

1. அது பொழுதுபோக்குப் பண்புடையதாக அமைதல் வேண்டும். உழைத்து அலுத்து வருபவர்களுக்கு சோகத்தையும், சலிப்பையும் கொடுக்காது, அவர் தம் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆனந்தத்தைக் கொடுக்க வேண்டும்.
2. சக்தியின் மூல ஊற்றாக அரங்கு இருக்கவேண்டும். மக்களது ஆன்ம பலத்தை அதிகரிக்க வல்லதாக இருக்க வேண்டும். செயலியக்கத்தின் களமாக அது அமைய வேண்டும். மக்களை அவர்களது இலக்குக்கு அழைத்துச் செல்வதாகவும், பயணப் பாதையில் அவர்கள் கைக்கொள்ள வேண்டியவற்றைக் கூறுவதாகவும் அரங்கு இருக்க வேண்டும்.
3. அரங்கு அறிவுக்கூர்மை நிறைந்த வழித்துணை மொழியாக இருக்க வேண்டும். மக்கள், தம்மையும், சூழ

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

லையும் தெளிவுற நோக்க உதவ வேண்டும்.

ஒரு சமூகத்தின் பல மட்டத்தினரும் கூடும் இடம் அரங்கமே. இங்குதான் அடிநிலை மக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க வாய்ப்புக் கிடைக்கிறது. பெரும்பாலும் அரங்கின் விதிகளை அடிநிலை மக்களே தீர்மானிக்கின்றனர்.

சமயற் கரணத்திலிருந்தே அரங்கம் தோற்றம் பெற்றது. கரணம் மீண்டும் அரங்கினுள் வரவேண்டும் என்றதொரு எண்ணம் ஐரோப்பாவில் *1960* களில் தோற்றம் பெற்றது. கரணத்திலிருந்து அரங்கம் பிறந்ததா? அல்லது அரங்கம் கரணத்தைக் கண்டு பிடித்ததா? என்றுமொரு வினா உண்டு. "கரணம் என்பது குறித்த ஒரு சம்பவத்தை மேன்மைப்படுத்துவதோடு தன் பணியினையும் உயர்நிலைப்படுத்துகிறது." என்கிறார் ஆர்த்தர் செயினர் என்பார். "மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படும் ஒன்றில் கரணச் செழுமை, மேன்மை என்பன வந்துவிடும்" எனவும் அவர் கூறுகிறார். மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படும் நாடகம் இவ்வுயர்வை அடைவது உறுதி.

அரங்க நிகழ்வு எங்கு சம்பவிக்கின்றது என்பதும் முக்கியமாகும். நிகழ்வு எப்பொழுதுமே ஒரு வெளிக்குள் நடக்கும். சில வேளைகளிலேயே வெளியும் சம்பவமாகிறது. அரங்க நிகழ்வின் வெளி காலத்தின் தேவைக்கேற்ப வேறுபடுகிறது. காலத்தின் தேவைக்கேற்ப மீண்டும் மீண்டும் வீரியம் ஏற்படவேண்டிய ஒன்றுதான் அரங்க வெளி. எப்படியும் கிடந்துவிட்டுப் போகட்டும் என்று விட்டு விட முடியாத ஒன்று. அதற்கென ஒரு தேவை, பணி, பரிமாணம், முக்கியத்துவம் இருக்கவேண்டும். அது ஆற்றுகையோடு இணைய வேண்டும்.

படச்சட்ட மேடை அரங்கு இன்று உலகெங்கும் பார்வையாளருக்கு பரிச்சயமான ஒன்று. அது எமது வாழ்வின் தன்மைகள் பலவற்றை தன்னகத்தே கொண்டுள்ள போதிலும், திறந்த வெளி அரங்கில் உலகின் பல பண்புகள் வெளிப்பட்டு நிற்கும். அதில் அனைத்துக்கும் அர்த்தமும் பயனும் இருக்கும். "வாழ்வின் உலகு", "அரங்கின் உலகு" ஆகிய இரு உலகங்களின் செழுமை திறந்த வெளியில் எம்மைத் தாக்கும்.

தெருவெளி அரங்கெனில் அது வாழ்க்கையின் நாளாந்த இயக்கங்களோடு இரண்டறக் கலந்துவிடுகிறது. அவ்வரங்கில் ஒரு வேகம் இருக்கும். அது உத்வேகம். இது தெருவுக்குரிய பண்பிலிருந்து பெறப்பட்டது. அது ஒருவகையான மின்வலுவைப் பிறப்பிக்கும். தெருவென்றால் அங்கு அவசரம் நிலவும். அந்த அவசரத்தில் பயமும், கோழைத்தனமும் சாத்தியமாகும். பாசாங்கு மேற்கிளம்பும் வேளையிலும் தெருவில் பொய்மை இருக்காது. தெரு, தன்னிடத்தே நிகழும் அரங்கில் வாழ்க்கையும், வாழ்க்கையில் காணும் அரங்கியல் பண்பையும் ஊடாக விட்டு, இரண்டுக்கும் இடையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தி, இரண்டையும் இணைத்து, தெருவிற்கே உரிய இயங்கியலை சாத்தியமாக்கும். குறியீடு என்ற நிலையிலுள்ள அரங்கினை தெரு செழுமைப்படுத்துவதோடு, அதற்கு ஆபத்தையும் ஏற்படுத்துகிறது. எவ்வாறெனின், தெருவில் நிகழும் அரங்கு ஸ்தூல உலகுடன் மோதுகிறது. அரங்கக் கட்டடத்தின் சுவர்கள் ஆற்றுவோருக்கும் பார்வையாளருக்கும் தரும் பாதுகாப்பை தெரு தராது. அரங்கு என்ற குறியீட்டுக்கும், தெரு என்ற உண்மைக்கும் இடையில் நிகழும் மோதலில் பங்குகொள்ளும் பார்வையாளருக்கும் ஆற்றுவோருக்கும் எந்தவித பாதுகாப்பும் அளிக்கப்படுவதில்லை. இத்தகைய பாதுகாப்பின்மை தரும் மனப்பதட்டமும், கிளர்ச்சியும் இருசாராருக்கும் இடையில் ஒரு பதட்டமான, இதயத் துடிப்புடன் கூடிய யதார்த்தங்களை வெளிக்காட்டிக்கொண்டிருக்கும். ஒரு சமூக நிறுவனமாக உள்ளதால், அதன் வெளி அரங்கின் வெளியாகப் பயன்படுவதில் வியப்பில்லை. வரலாற்றில், மன்னரும், பிரபுக்களும் தெருவெளி அரங்க நடவடிக்கைகளின் களமாக இருந்துவந்துள்ளன.

உலகில் இன்று உள்ள தீவிர அரங்கப் போக்குகள் பல, பார்வையாளரினது பங்கினை மாற்றி அமைத்துள்ளன. இம்மாற்றம் புதிய, உயிர்ப்பான குருதியை அரங்கின் நாளங்களுக்குள் பாய்ச்சியுள்ளது. இதனால், தீவிர அரங்கின் வாய்ப்புக்கள் மிகவும் கிளர்ச்சி ஏற்படுத்துவனவாக உள்ளன. அதேவேளையில், இம்மாற்றங்களினால் விளையக்கூடிய ஆபத்துக்களையும் கருத்திற்கொண்டு, தீவிர அரங்கைக் கடைப்பிடிப்பது அவசியம். அரங்க உலகுக்கும் வாழ்வின் உலகிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை மிகவும் குறுக்கி, இரண்டையும் ஒன்றாகச் சேர்த்துக் கலப்பதன் மூலம், அரங்

# சந்திரிகா முப்படைகளின் தளபதியா?



முல்லைத்தீவு இராணுவ முகாம் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்டு, பெருந்தொகையான படையினர் அழிக்கப்பட்டிருந்த நேரம், நாடு மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக்கொண்டு இருக்கையில், நாட்டின் ஜனாதிபதி தனது விடுமுறையைக் கழிப்பதற்காக நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். இதனால் எதிர்க்கட்சியினர் சந்திரிகா அரசின்மீது கடும் கோபம் கொண்டிருக்கின்றனர். குறிப்பாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க காரசாரமான கேள்விகளை எழுப்பியுள்ளதோடு, நாட்டைவிட்டு வெளியேறிய சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா பற்றி பாராளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்த வேண்டும் எனப் பேசியிருக்கிறார். அத்தோடு நாட்டின் முப்படைகளுக்கும் தளபதி என்ற பொறுப்பிலிருந்து சந்திரிகா குமாரதுங்கா விலகி விட்டார். உலக யுத்தம் நடைபெற்றபோது ஆறாவது ஜோர்ச் மன்னரை, அவரது பாதுகாப்பிற்காக நாட்டைவிட்டு வெளியேறுமாறு கோரப்பட்ட போதும், அவர் அங்கேயே தங்கி இருந்தார். இவ்வாறான தலைவர்களே இன்று எமக்குத்தேவை. சந்திரிகா குமாரணதுங்காவின் அமைச்சரவையில் இருக்கும் பெரும்பாலானோருக்கு உலக அழகிகளின் பின்னால் திரிவதே முக்கிய சேவையாகி விட்டது. மிகுதிப்பேர் அட்லாண்டா போயிருந்தார்கள். நாட்டுமக்கள் வறுமையிலும், சோகத்திலும் வாடுகையில் ஜனாதிபதி சொகுசாக விடுமுறையைக் கழித்துள்ளார் என எதிர்க்கட்சித்தலைவர் ரணில் போர்க்கொடி தூக்கியுள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின் சொந்த வாழ்வை, அதன் இருப்பை வற்றச் செய்யாது பார்த்துக்கொள்வது அவசியம். சுயம் அழிந்தால் அது இறந்து விடும். வாழ்க்கைக்கு சேவகம் செய்யவே அரங்கு வாழ்கிறது. மனித வாழ்வின் மகோன்னதத்துக்காக அரங்கு உழைக்கவேண்டும் என்பது உண்மை எனினும் எமது தீவிர வேட்கை காரணமாக அரங்கின் சுயத்தை, தூய்மையை, நிஜத்தை நாம் கெடுத்து அதனுள் யதார்த்தத்தின் பலதையும் அளவுக்கதிகம் கலந்து அரங்கை ஒரு சோரப்பிள்ளையாக்கி, அதன் உயிரை வற்றச் செய்தோமானால் நாம், வாழ்க்கைக்கு செழுமையூட்டும் ஒரு மூலகத்தை, வாழ்க்கைக்கு அத்தியாவசியமானதொரு பகுதியை இழந்துவிடுவோம். மறுபுறத்தே, கலை என்ற பெயரில் வாழ்விலிருந்து அந்நியப்பட்டு நின்று கருமமாற்றுவோர் பற்றி நாம் என்ன சொல்ல? அவர்கள் மனிதர்களே அல்ல.

நாடகம் பார்த்தல் என்பது ஒரு வகையான தப்பித்தல் மனோபாவத்தின் வெளிப்பாடல்ல; இரண்டாம் தரமான வாழ்வு வாழும் விஷயமல்ல. மனிதனைப் பற்றி, அவனது வாழ்க்கை பற்றி, அவனது பிரச்சினைகள் பற்றி, அவனது விருப்புகள், துக்கங்கள், முயற்சிகள் பற்றி, மனித உறவுகள் மோதல்கள் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வம் எமது இயல்பில் உள்ளது. மேலும், அரங்குக்கு செல்லல் என்பது வாழ்தலின் ஒரு அவசியமான, அவசரமான பகுதியாகும். வாழ்வியலும் அரங்கியலும் ஒன்றே. எனினும் அவை தனித்துவமானவை. பாலும், நெய்யும் போல, பாலைத் தயிராக்கி, கடைந்து வெண்ணை எடுத்து, அதை உருக்கி நெய்யாக்குதல் போல, வாழ்க்கையில் இருந்து — வாழ்விலிருந்து எடுத்தும் வாழ்வினால் தூண்டப்பட்டும் படைக்கப்படும் நாடகமும், இதனைப் படைக்கும் அரங்கமும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு இங்கு விடையாக, "மொஸ்கோ கலையரங்கம்" பற்றி நெறியாளர் ஸ்டானிஸ் லாவஸ்கி கூறியதைச் சுட்டிக்காட்டுவது பொருந்தும். —"அனைவரும் வந்து அணுகத் தக்கதாக வந்து இருக்க வேண்டிய அரங்கம், பகுத்தறிவும் ஒழுக்கவியலும் வாழும் அரங்காக இருக்க வேண்டும். அவ்வரங்கு ஒருபோதும் பழசுபடாது இருப்பதாக; அது தொடர்ந்து புத்துயிர்ப்புப் பெறுவதாக; அது தனது இலட்சியத்துக்காக விசுவாசமாக இருந்து கலையிலென்றும் நிலைப்பதை நாடுவதாக" என்றார் ஸ்டானிஸ்லாவஸ்கி. "என்றும் நிலைப்பது" என்பது பற்றி டஞ்ஸன்கோ கூறும் போது, "கலை என்பது மிக ஆழ்ந்த உண்மையை அடித்தளமாகக் கொண்டிருக்க வேண்டும்" என்கிறார். இந்த மிக ஆழ்ந்த உண்மையின் அடித்தளத்தில் நின்றே நாடக ஆசிரியர்களும் அரங்கக் கலைஞர்களும் தமது காலத்தை வெளிப்படுத்த வேண்டும். அந்த ஆழ்ந்த உண்மை மனிதரது நாளாந்த வாழ்வில் காணக்கிடக்கும் ஒன்றாகும்.

நன்றி:
'வெளிச்சம்'



# துப்பாக்கி அரக்கரும் மனிதனின் விதியும்

*எம். ஏ. நுஃமான்*

நாளையக் கனவுகள் இன்று கலைந்தன
நேற்றைய உணர்வுகள் இன்று சிதைந்தன.
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடினர்
ஒரு பெரும் நகரம் மரணம் அடைந்தது.

வாழ்க்கையின் முடிவே மரணம் என்போம்
ஆயின் எமக்கோ
மரணமே எமது வாழ்வாய் உள்ளது.

திருவிழாக் காணச் சென்றுகொண்டிருக்கையில்
படம்பார்க்கச் செல்லும் பாதி வழியில்
பஸ்நிலையத்தின் வரிசையில் நிற்கையில்
சந்தையில் இருந்து திரும்பி வருகையில்
எங்களில் யாரும்
சுடப்பட்டு இறக்கலாம்
எங்களில் யாரும்
அடிபட்டு விழலாம்.

உத்தரவாதம் அற்ற வாழ்க்கையே
மனிதனின் விதியா?
அடக்குமுறைக்கு அடிபணிவதே
அரசியல் அறமா?

அதை நாம் எதிர்ப்போம்!
அதை நாம் எதிர்ப்போம்!
எங்களின் தேவை;
மனிதனுக்குரிய வாழ்க்கை உரிமைகள்.
மனிதனிக் குரிய கௌரவம்
வாழ்க்கைக் கான உத்தரவாதம்.

யார்இதை எமக்கு மறுத்தல் கூடும்?
மறுப்பவர் யாரும் எம்எதிர் வருக!
காக்கி உடையில்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவம் ஆடுக!

போராடுவதே மனிதனின் விதிஎனில்
போராட்டத்தில்
மரணம் அடைவதும் மகத்துவம் உடையதே.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



26–08–1996 அன்று, சுவிஸ் – ஜெனிவாவில், சந்திரிகா அரசின் இன அழிப்புக் கொள்கையைக் கண்டித்தும், மனித விரோதச் செயற்பாட்டை தடுத்து நிறுத்தக் கோரியும், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு கோரியும், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டு நடத்திய அமைதிப் பேரணியின் சில காட்சிகள்....











தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்ணில் ஓங்கி ஒலிக்கும் விடுதலைக் குரல்கள்

“வரலாறு எப்பொழுதுமே திரும்பிச் செல்வதில்லை” என்ற வாசகம் உண்மையானால் முதல் உலகப்போரைச் சந்தித்த வரலாறு 25 ஆண்டுகளில் இன்னொரு உலக யுத்தத்தைச் சந்தித்திருக்க வேண்டிய தில்லை. வரலாறு திரும்பவில்லை யென்றால் இதுவரை உலகில் நடைபெற்ற ஏறத்தாள 50,000 வரையான போர்களும் ஒரேவிதமான காரணிகளுக்காகவே மீண்டும் மீண்டும் நடாத்தப்பட்டிருக்க வேண்டியதுமில்லை. ஆனால் எதிரெதிரான இவ்விரு காரணிகளுமே கூட்டாக இணைந்து, வரலாற்றை இயக்கிய வண்ணமிருக்கின்றன. இதனால்தான் காலச்சக்கரம் போல வரலாறும் ஒரு வட்டமான பாதையிலேயே பயணித்துக்கொண்டிருப்பதையும்; அது பழைய சங்கதிகளையே மீண்டும் மீண்டும் புதிதாக எதிர்கொள்வதையும் காணமுடிகிறது.

மேற்கண்ட வரலாற்றுச் சுழற்சியில் இடம்பெற்றுள்ள சம்பவக் கோர்வைகளைப் பார்க்குமிடத்து உலக அரங்கில் சொந்த நாடுகளே இல்லாதிருந்த இனங்கள் பல தமக்கென நாடுகளை உருவாக்கிக் கொண்டு தேசிய இனங்களானதும்; அதேவேளை நாடுகளோடும் உயர்ந்த பண்பாடுகளோடும் நிலைத்திருந்த இனங்கள் பல நாடற்ற மக்கள் குழுக்களாகிப் போனதும் தெரியவரும். ஐ.நா. சபையில் புதிதாக அங்கத்துவம் பெறும் நாடுகளின் எண்ணிக்கை புதிய நாடுகளின் உருவாக்கத்தை மட்டுமல்ல; இழந்துபோன தேசத்தை ஒவ்வொரு மக்கள் குழுவும் படிப்படியாக மீட்டெடுத்துக் கொண்டிருப்பததையும் சுட்டிக்காட்டுவதாய் உள்ளது.

உலகில் 15–ம் நூற்றாண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட அறிவு மறுமலர்ச்சியைத் தொடர்ந்து உருவாகிய குடியேற்ற நாட்டுக் கொள்கையால் நாடுகளை இழந்துபோன இனங்கள் பல; அவற்றுள் இதுவரை தமது நாட்டை மீட்டெடுக்கத் தவறியிருக்கும் இனங்கள் ஒருசில; அந்தச் சிறு தொகையில் ஈழத்தமிழினமும் அடங்கும். இலங்கைத் தமிழரைப் போலவே நாடிழந்து போன அவலத்தை 450 வருடகாலமாக அனுபவித்து வந்த சிங்கள இனம்; அதன் தாற்பரியத்தைச் சரிவரப் புரிந்திருக்குமாயிருந்தால் 1948 இல் தனக்



## சிறக்கை முளைக்கிறது

கான நாட்டை ஆங்கிலேயரிடமிருந்து பெற்றுக்கொண்ட போதே தமிழரின் தாயகத்தை மீளளித்திருக்க வேண்டும். சுமார் நான்கு நூற்றாண்டுகால அடிமை வாழ்விற்குப் பிறகும் அவர்கள் தமக்கிருந்த வரலாற்றுக் கடமையை விளங்கிக் கொள்ள மறுத்தனர். சிங்களப் பேரினவாதத்தின் இத்தகு பிடிவாதப் போக்கிலிருந்து விடுதலைபெற தமிழீழப் போரைத் தவிர வேறெந்த மாற்று வழிகளுமற்ற நிலையிலேயே வெடித்திருக்கிறது தமிழீழப் போர்.

இது தமிழர் இடிந்துபோன தேசத்தை மறுபடியும் ஈட்டப் போரிடும் காலம். நகரும் வரலாற்றுக் கடிகாரத்தின் முட்கள் தமிழீழம் உருவாகும் காலத்தை வேகமாக நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இதை மேலும் எவ்வளவு விரைவாக நகர்த்த முடியுமோ அவ்வளவு விரைவாக நகர்த்துவதே அழிவுகளைக் குறைத்து; விடுதலையை வென்றெடுக்கக் கூடிய ஒரே வழியாகத் தெரிகிறது. இந்த உண்மை நிலை நமது மக்கள் மத்தியில் தற்போது பெருமளவில் புரிந்து கொள்ளப்படுகிறது. ஒற்றையாட்சி அதிகாரத்திற்குள் காண முற்படும் ஏமாற்றுத் தீர்வுகளுக்குள் அவிந்துபோகாத மக்கள் குழுவினரின் எண்ணிக்கை இன்று தமிழீழ மக்களிடையே பெரும்பான்மையாகி விட்டதை மறுந்துரைக்க எந்தப் புள்ளி விபரக்காரராலும் முடியவில்லை. அச்சமிகுதியால் சிங்களப் படை வீரர்கள் இராணுவத்தைவிட்டு தலைமறைவாகிக் கொண்டிருக்க; மறுபக்கம் வர்ணிக்க முடியாத அவலங்களுக்குள்ளாலும் போர்க்குரல் கொடுத்து எழுந்தபடியிருக்கும் புதிய விடுதலைப் புலிகளின் எண்ணிக்கை வரலாற்றை வேக

மாக நகர்த்தும் பெரு விசையாகியுள்ளது.

இந்த உண்மைப்பாட்டைப் புரிந்து கொள்வதற்காக சில போர்க்காலச் செய்திகளை இங்கு வரிசைப் படுத்திக் கொள்வது அவசியமாகிறது. "இப்பொழுது எமது கடமை என்ன? அதைச் சரிவர அறிந்து; அதையேநாம் முதன்மைப்படுத்திச் சிந்தித்தல் வேண்டும். எனக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைத்திருந்தது. இப்போது அதை நான் துச்சமென மதிக்கிறேன். இத்தனை காலமாகத் தமிழினம் கஷ்டங்களில் உழன்றதெல்லாம் போதும். இதுவரை கடைப்பிடித்து வந்த பொறுமைக்குப் பரிசே சூரியக்கதிர் வரை நாம் பட்டுக்கொண்ட பாடங்களாகும். இனியும் என்ன தேவைக்காகப் பொறுமை காக்க வேண்டும்? இது எம்மை அழிக்க வந்தோருக்கு எதிரான இறுதிப் போர். இதில் எல்லோருமே பங்கு கொள்ள வேண்டும். விடிவு தரும் எதிர் காலத்தைத் தேடவேண்டுமானால் அடிபணிவதல்ல; போரில் வெற்றி கொள்வதே ஒரே வழி." போராட்டத்தில் புதிதாக இணைந்து கொண்ட அரசரத்தினம் தனராஜ் என்ற யாழ். ஹென்றி அரசர் கல்லூரி மாணவனின் குரல் இது.

"சிங்கள இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் ஒரு அடிமைப்பட்ட தேசத்தின் பிரஜையாகி அவர்கள் காலால் இடும் வேலையை நாம் தலையால் செய்து, கூனிக் குறிகி வாழ்ந்ததும்; அவர்கள் எம்மைத் தாக்கவும்; விரும்பியபோது கொல்லவுமான உரிமையை நாமே அவர்கள் கையில் வழங்கும் கொடிய வாழ்க்கைக்கு நான் தயாரில்லை. அடையாள அட்டைகளால் நமது உயிர்களைக் காப்பாற்ற முடியாது. நீண்ட நாட்களுக்கு முன்பு எமது கிராமத்தைச் சுற்றிவளைத்த சிங்களப் படையினர் அடையாள அட்டைகளைச் சப்பித் தின்னும்படி துப்பாக்கி முறையில் நிர்ப்பந்தித்ததை நான் இன்றும் மறந்துவிடவில்லை. இன்றுள்ள நிலையில் பக்கக் காரணிகள் எதையுமே பொருட்படுத்த முடியாது. போராடாவிட்டால் தமிழருக்கு உயிரில்லை என்ற உண்மையை இனியும் விளங்காது வாழ்வது தவறு." இது புதிய போராளியான மடுக்குளத்தைச் சேர்ந்த லோகன் என்ற 30 வயது இளைஞர் இனியும் போராட மறுக்கும் தமிழினத்தை நோக்கி எழுப்பிய குரலாகும். இன்று தமிழீழத்தில் வெளிவரும் பத்திரிகைகளெல்லாம் இத்தகு வீரர்களின் புதிய செய்திகளாலேயே நிறைந்து வழியக் காண்கின்றோம்.

www.tamilarangam.net

இந்தப் புதியவர்கள் கொடுக்கும் விடுதலைக் குரல்களே இன்றைய சிங்களப் பேரினவாதத்திற்குப் பெரும் கவலையை உண்டுபண்ணி வரும் பிரதான காரணி. அவர்கள் தமிழ் இனத்தின் மீது புதிது புதிதாகப் பிரகடனப்படுத்தும் நெருக்கடிகளெல்லாம் புதிதாகச் சேரும் இளைஞர் அணியால் புலிகள் மேலும் பலம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே. ஆனால் எந்தவொரு நெருக்கடியுமே அரசுக்குச் சாதகமான விளைவை ஏற்படுத்தவில்லை; மாறாக எதிர்விளைவையே உண்டுபண்ணிச் செல்லக் காண்கிறோம். இதற்கு நல்லதொரு உதாரணமாக பிரபல அரசியல் விமர்ச்சகர் ஏ.பி.அட்ரியன் விஜேமான அண்மையில் தெரிவித்த கருத்தொன்றைச் சுட்டிக் காட்டலாம். "இப்போது தமிழர்களின் இதயங்களிலும்; மனங்களிலும் அவர்களுக்கென ஒரு தனிநாடு உருவாகிவிட்டது. சிங்களப்படையின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் இறுதியில் தமிழரின் இறுதி இலக்கான விடுதலையை வென்றெடுப்பதற்கே பங்களிப்பு செய்துவிடும். அதேவேளை மற்றைய யுத்தங்களோடு ஒப்பிடும் போது சுதந்திரப் போராட்டங்கள் என்றாவது ஒருநாள் சுதந்திரத்திற்காகப் போராடும் இனத்திற்கு நாடொன்றையும் பெற்றுக்கொள்வதுடனேயே முடிவடைகின்றன என்பதையும் மறந்துவிட முடியாது." என்றார். இக்கருத்தை நாம் வெறும் ஆய்வாக மட்டுமன்றி, சிறக்கை முளைக்கும் புதிய விடுதலைப் பறவைகள் குறித்து சிங்களப் புத்திஜீவிகளிடையே தோன்றியுள்ள பிரதான கவலையின் வெளிப்பாடாகவும் கருதமுடியும். ஏற்கனவே குறிப்பிட்டதுபோல திரும்பிச் செல்லாத வரலாறு இப்போது தமிழரின் பக்கமாகச் சுற்றிவந்து கொண்டிருப்பதை நிகழ்வுகளின் வழி அறிய முடிகிறது. ஈழத் தமிழரின் விடுதலைப் போர் வெற்றிகண்ட நூற்றாண்டாக இந்த நூற்றாண்டு தன்னை அலங்கரித்துக் கொள்ள சொற்ப ஆண்டுகளே மீதமிருக்கும் இவ்வேளையில் போராட்டத்திற்கு பெரு விரைவு தரும் இந்தப் புதிய புலிகளின் சுதந்திரக் கர்ஜனை ஐந்து நூற்றாண்டுகளாகச் சோர்ந்து கிடந்த தமிழர் வரலாற்றையே நாளும் பொழுதும் புதுப் புது வேகங்கொடுத்து நகர்த்திச் செல்லக் காண்கிறோம்.

– கி. சே. துரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்திரிகாவின் வரையறைகளை உணர்த்தும் அமெரிக்கா

இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் பீட்டர் பேர்லியை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்று பௌத்த சிங்கள பேரின வாதிகள் கருத்து வெளியிட்டிருந்தனர். அண்மையில் பீட்டர் பேர்லி மல்வத்த அஸ்கிரிய பீடாதிபதிகளையும் சந்திரிகாவையும் சந்தித்து சில கருத்துக்களை வெளியிட்டு இருந்ததுடன் இலங்கையின் பிரபல்யம் வாய்ந்த பௌத்த அறிஞர் என்று கருதப்பட்ட ஒருவர் பற்றியும், கடுமையான வார்த்தைகள் பிரயோகித்தமையும் தொடர்கதைகள் ஆகின. மேற்குலக ராஜதந்திரிகள் ஈழத்தமிழர் பற்றி தற்போது சற்று வாய்திறக்கத் தொடங்கியுள்ளனர். முதலில் பிரித்தானியத் தூதுவரும் பிறகு அமெரிக்கத் தூதுவரும் அடுத்தடுத்து வாய் திறக்கின்றார்கள். பிரித்தானியத் தூதுவர் மறைமுகமாகப் பேசினாலும் அமெரிக்கத் தூதுவர் சிறிது வெளிப்படையாகவே பேசியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவர் முதலில் அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகளை அணுகினார். ஈழத்தமிழர் விவகாரத்தில் ஒரு அரசியல் தீர்வுகாணப்பட வேண்டும் என்றும் அதற்கு பீடாதிபதிகள் இணங்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இலங்கை உணர்ச்சிகரமான அரசியல் மையத்தை உடைய நாடு என்பதால் இலங்கைக்கான தூதுவர் விடயத்தில் அமெரிக்கா கூடுதல் கவனம் எடுப்பதுண்டு. இலங்கைக்கான தூதுவர்களுக்கு இலங்கை வரலாற்றை நன்கு கற்பிப்பதும், இலங்கை விவகாரத்தில் தேர்ச்சிபெற்ற பின்பே பதவி ஏற்க அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைப்பதும் அமெரிக்காவின் வழமையாகும். குறிப்பாக இலங்கையின் அரசியல் பற்றி எழுதப்பட்ட நூல்களுள் இலங்கைக்கு தூதுவராக வர முன்னர் காவார்ட் ரிகின்ஸ் என்பவரால் "இலங்கையின் இருதலைக் கொள்ளி நிலை" என்ற பெயரில் எழுதப்பட்ட நூல் முக்கியமானதாகும். இது இலங்கை அரசியலை விளக்குவதற்கு மிகவும் சிறப்பான நூலாக அறிஞர்களினால் கருதப்படுகிறது. தற்போதைய அமெரிக்கத் தூதுவர் பீட்டர் பேர்லி சிங்களத்தில் உரையாடக்கூடியவர். அவர் பீடாதிபதிகளுடன் கதைத்தது சிங்களத்திலேயே. இப்படி சிங்களத்தில் உரையாடி நேரடி தொடர்பு கொண்டதோடு ஒரு அந்நியோன்ய உறவை சிங்களவர்களுடன் ஏற்படுத்த உதவும் என்று எண்ணியே அவர் சிங்களத்தில் உரையாடி இருக்க வேண்டும்.

பேர்லியுடன் கதைத்த அஸ்கிரிய பீடாதிபதி அவருக்கு பதில் கொடுக்கையில், "தமிழர்களுக்கென்று ஒரு பிரச்சினையும் இல்லை" என்று மலையை சுளகால் மூட முயன்றுள்ளார்.

இது தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை உண்டு என்று கூற வந்த தூதுவரை அவமதிக்கும் செயலும்கூட. இது தூதுவரை மறைமுகமாகவே அவமதித்தது. ஆனால் மல்வத்த பீடாதிபதி கூறியது பேர்லியை நேரடியாக அவமதிப்பதாகவே இருந்தது. மேலும் இனப்பிரச்சினைக்கு வெளியார் தலையீடு வேண்டியதில்லை என்றும் அடித்தால் போல் அவர் கூறிவிட்டார். இது தூதுவர் பேர்லியை, அவர் ஒரு இராஜதந்திரி என்ற வகையில் உணர்ச்சி வசப்படுத்தியதாக இருக்காவிட்டாலும் அவருடைய மனத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியதாகவே இருக்கும்.

ஆனால், வெளியாரின் ஆயுதம் மற்றும் பொருளாதார உதவியுடன் தான் சிங்களவர்கள் தமிழர்களை ஒடுக்கி வந்துள்ளார்கள். அப்படி வெளியார் தலையீடு இல்லை என்றால் சிங்களவர்களால் தமிழர்களை ஒடுக்கிவிட முடியாது என்பதை மல்வத்த பீடாதிபதி மிகவும் வசதியாக மறந்து போய்விட்டாரா?

பீடாதிபதிகளுடனான சந்திப்பு தூதுவர் பேர்லிக்கு நம்பிக்கையூட்டுவதில்லாதிருந்ததோடு கசப்பானதாகவும் அமைந்துவிட்டது. ஆயினும் பீடாதிபதிகள் சிங்களவர்களின் உணர்ச்சி மையம் என்பதால் அவர்களுக்கெதிரான கடும் வார்த்தைகளை அமெரிக்கத் தூதுவர் கூறவில்லை.

அமெரிக்கத் தூதுவர் பீடாதிபதிகளிடம் வெற்றியீட்ட முடியாத நிலை ஏற்பட்ட மறுநாள் சந்திரிகாவுடனான சந்திப்பொன்றில் கலந்துகொண்டார். இனப்பிரச்சினை தொடர்பாக சிறீலங்கா அரசாங்கம் கடைப்பிடித்து வரும் அரசியல் தந்திரோபாயத்தில் மாற்றம் கொண்டுவரப்படுவதை அமெரிக்கா வரவேற்கும் என்று சந்திரிகாவிடம் எடுத்துக் கூறினார். அந்தக் கருத்தினை இராஜதந்திர மெருகுடனும் இராஜதந்திர பண்பாட்டுடனும் அவர் கூறியிருக்கின்றார். அந்த ராஜதந்திர பண்பாட்டில், ஒரு தெளிவான விளக்கத்தை காணவேண்டும். கொழும்பு கடைப்பிடிக்கும் தற்போதைய அணுகுமுறையை வோசிங்டன் விரும்பவில்லை என்பது இதில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய செய்தியாகும். மூன்றாவது ஈழப்போரில் உலகம் தன்னுடன் நிற்பதாக சந்திரிகா நம்புகின்றார். அந்த வகையில் மேற்குலகமும் மற்றும் உலக நாடுகளும் தன்பின்னால் நிற்பதாக மிகவும் வெளிப்படையாக கூறிக்கொள்வதுடன், இதை ஒரு யுத்த உபாயமாகவும் கருதி பிரச்சாரத்திலும் ஈடுபட்டுள்ளார். இந்தப் பின்னணியில் தமிழர்களுக்கெதிராக சந்திரிகா கைவீசி நடப்பதை இன்றைய நிலையில் வோசிங்டன் விரும்பவில்லை. அதைத் தெளிவுபடுத்த அது விரும்புகின்றது. இதில் சந்திரிகாவிற்கு உள்ள எல்லைகளைச் சுட்டிக்காட்டுவதே அமெரிக்கத் தூதுவரின் உள்நோக்கமாகும்.

இவ்வரசியல் பரிபாலியத்தை சந்திரிகா தெளிவாகவே விளங்கிக்கொள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வார் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், பீடாதிபதிகள் அமெரிக்கத் தூதுவரின் வேண்டுகோளை சற்றும் பொருட்படுத்தாது நிராகரித்தனர். பீடாதிபதிகளுக்கு மேற்படி இராஜ தந்திரப் பார்வைகள் விளங்கியிருக்குமோ இல்லையோ அவர்கள் தமது பேரினவாத மொழி நடையில் அதற்குப் பதில் கூறிவிட்டார்கள். பீடாதிபதிகளின் நிலைப்பாடு அமெரிக்கத் தூதுவருக்கு மனத்தில் வெறுப்புக்குரியதான போதிலும், அமெரிக்காவின் தகுதிக்கும் அமெரிக்கத் தூதுவர் நிலையின் கௌரவத்திற்கும் இது ஊறுதலானது என அவர் நினைத்திருந்தாலும் நீண்டகால அரசியல் நோக்கம் கருதியும், பீடாதிபதிகள் சமூகத்தில் பெற்றிருக்கும் முக்கியத்துவத்தை மனதில் கொண்டும் அவர் பீடாதிகளுக்கு கண்டிப்பான வார்த்தைகளைக் கூறவில்லை. ஆனால், அதன் நோவை வேறொரு வழியில் அவர் வெளிப்படுத்தியுள்ளார். அதாவது சிங்கள பௌத்தர்களில் அறிஞர் என மதிக்கப்படும் கலாநிதி தேரர் ஒருவரை அப்படியொன்றும் அறிவானவர் இல்லை எனக் கூறியிருக்கின்றார். இதுதான் கௌடில்யா போன்ற சிங்கள இனவாதிகளின் கொதிப்புக்குக் காரணமாகும். அதாவது, அவர் அப்படியொன்றும் அறிவானவர் அல்ல என்ற வார்த்தையினால் முழு பீடாதிபதிகளும் முழு மொக்கர்கள் என்று கூறாமல் கூறிவிட்டார்.

இப்போது அமெரிக்கத் தூதுவரின் நிலைப்பாட்டுக்கான வியாக்கியானங்கள் கணிசமான அளவு வெளிப்படையாக தெரிந்திருந்த போதிலும் இப்படிப்பட்ட ஒரு நிலைப்பாட்டை வோஷிங்டனும் லண்டனும் அடுத்தடுத்து ஏன் வெளியிட்டன என்பதற்கான காரணத்தை கண்டறிய வேண்டியமை, கூடிய முக்கியத்துவம் உடையதாக இருக்கின்றது. ஈழப்போரில் அமெரிக்காவிற்கு நீண்டகால அடிப்படையிலான ஒரு கொள்கை இருக்கும். அதன் பிரகாரம் அமெரிக்கா தனது நோக்கு நிலையில் இருந்து தேவைக்கேற்ப இப் பிரச்சினையைக் கையாளும். ஏற்ற இறக்கங்கள் ஏற்படுமிடத்து அதனைத் தனது பாத்திரத்திற்கூடாக இட்டு நிரப்பும். அவ்வகையில் அத்தகைய ஒரு இட்டு நிரவல் நடவடிக்கையாக இது அமைகிறது. இந்த இட்டு நிரவலில் முக்கியமாக மூன்று சக்திகள் உண்டு. அவையாவன, சிங்கள அரசு, விடுதலைப் புலிகள், இந்திய அரசு. இதில் யாரை எப்போது, எவ்வாறு ஏற்ற இறக்கங்களில் இருந்து சமன் செய்ய வேண்டும் என்பதே அமெரிக்கா எதிர்நோக்கும் முக்கிய இராஜதந்திரப் பிரச்சினைகளில் ஒன்றாகும்.

தற்சமயம் இந்தியாவில் உருவாகியிருக்கும் புதுடெல்லி, சென்னை அரசியல் மாற்றங்களும் "ரிவிரச" படையெடுப்புக்களும் அமெரிக்காவை அதிகம் நிதானப்படுத்தியுள்ளன. மூன்று 'ரிவிரச' படையெடுப்புக்களின் போதும் மேற்குலகம் அதைப் பார்த்துக்கொண்டிருந்ததற்கும் அப்பால் அதனை ஆட்டிப்படைத்தமை ஈழத்தமிழரின் நெஞ்சங்களில் மேற்குலகத்தைக் கணிசமான அளவு அந்நியப்படுத்தி இருக்கும். அவ்வாறு மேற்குலகம் அந்நியப்பட்டுக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் இந்தியாவில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட தமிழரின் மனம் இந்தியாவில் அரசியல் மாற்றங்களை நோக்கி இயல்பாகவே சாயமுற்படும். இவற்றை நிரூபிக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இத்தகையதொரு நிலையில் அரசியல் அழுத்தங்களின் மூலம் சிங்கள அரசு, விடுதலைப் புலிகள், இந்தியா என்ற மூன்றுக்குமிடையில் ஒருவித சரிசம நிலையை பேணவே அமெரிக்கா விரும்புகின்றது.

மேலும் சந்திரிகா அரசாங்கத்தின் தீர்வுத்திட்ட நடவடிக்கைகள் இறுகிப் போய் நெருக்கடிக்குள்ளாயிருக்கும் இன்றைய நிலையில் மாற்றுவழியற்ற தேக்கமானது மேற்குலகின் விருப்பங்களுக்கு மாறன ஒரு போக்கை இலங்கையில் உருவாக்கிவிடும். இதனால் மேற்குலகம் இந்த இறுக்கமான நிலையில் ஒரு பாத்திரத்தை வகிப்பதன் மூலம் இலங்கை அரசியலில் தனக்குரிய இடத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும் இது உதவும்.

உலக விவகாரங்களில் தீர்ப்பாளராக இருக்க விரும்பும் அமெரிக்கா இலங்கையின் விவகாரங்களில் ஏதாவதொரு பாத்திரத்தைத் தேடிக்கொள்ள இது ஒரு உகந்த தருணம் எனக் கருதியிருக்கலாம். எவ்வாறாயினும் சமாதானத் தீர்வினூடாக சிங்கள இனவாதிகளிடம் இருந்து ஒரு தீர்வை எட்டலாம் என யாரும் நினைப்பது தவறு என்பதற்கு மேற்படி அமெரிக்கத் தூதுவருக்கு ஏற்பட்ட அனுபவம் ஒரு தெளிவான பாடமாக அமையும்.

— மு. தி

## பௌத்த இளைஞனுக்கு வந்த ஞானம்

"பல்லின மக்கள் வாழும் நாட்டில் பௌத்தத்திற்கு முதலிடம் தேவையா?" பௌத்த இளைஞன் ஒருவன் இவ்வாறு கேள்வி எழுப்பியமையானது குறிப்பிடப்படவேண்டிய விடயமே. அதுவும் பொது மேடை ஒன்றில் பல அரசியல் தலைவர்கள் மத்தியில் அவர் இந்த வினாவை எழுப்பியிருக்கிறார். பல்லின மக்கள் வாழும் ஒரு நாட்டுக்கு உகந்த வகையில் இயற்றப்படாத, செயற்படாத, அரசியல் கொள்கையினால்தான் நாடு இன்னும் பேரழிவுக்குள்ளாகி வருகிறதா? நாம் எமது சமயம், கலை, கலாச்சாரம் என்பவற்றினை வளர்க்கப் பாடுபடுவது போல ஒவ்வொரு இன, மத மக்களும் எண்ணுவதில் தப்பே இல்லை. இவ்விடயத்தில் யாருடைய சமயம் பெரியது, உயரிய பண்பு கொண்டது, பழமை வாய்ந்தது என்ற போட்டி எழ நியாயமே இல்லை. இவ்வாறு தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

சிங்கள இனவாதச் சூழலுக்குள் இருந்தும், தமிழ் மக்கள் மீது குரோதமும், பகைமையும், கொண்ட சிங்கள அரசியல் தலைமைகளின் வழிநடத்தல்களுக்குள்ளிருந்தும் இவ்வாறான கருத்துக்கள் எழுவது என்பது சிங்கள இளைஞர் மத்தியில் ஏற்பட்டு வரும் புதிய சிந்தனை மாற்றத்துக்கான காலம் உருவாகி வருகிறது என்பதைக் கட்டியம் கூறிநிற்கிறதா?

மீளமுடியாத போரில் சிக்கித் தவிக்கும் சந்திரிகா அரசு அடைந்துவரும் இராணுவ, அரசியல், பொருளாதார வீழ்ச்சியும், தோல்விகளும் இவ்வாறான புதிய சிந்தனையை சிங்கள இளைஞர்களிடம் பிறக்கத் தூண்டிவருகிறது எனலாம்.

எனினும் ஞானசூனியங்களாகவே இருக்கும் சிங்கள அரசியல்வாதிகள் மத்தியில் அவ் இளைஞன் எழுப்பிய கேள்வி புதிய சிந்தனைக்கான கதவைத் திறந்து விடுமா என்பதே கேள்வி?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரத்தைத் தேடி

சுதாக்கா இனி வரமாட்டாள். அந்த கரிய உருவத்துள், வாய் நிறைய புறுபுறுத்துக்கொண்டு, வேடிக்கைச் செயல்களால் எமக்குள் நிறைந்து, இனிய குரல் வளத்தால் எம்மை இரசிக்க வைத்து ஒரு கூட்டில் இணைந்திருக்க இனி அவள் வரமாட்டாள்.

சாதாரண தோற்றத்தில் இளமையாக இருக்கும் அவள் கதைக்கும் போதும், யாரையும் திட்டும்போதும் ஐம்பது வயதுக்குக் குறைத்து யாராலுமே மதிப்பிட முடியாது.

“என்ன சுதாக்கா விடிய வெள்ளனயே புறு புறு கறகறவெண்டு பழஞ்சீலை கிழிஞ்சமாதிரி” என்று அலுத்துக்கொண்டிருப்பார்கள். ‘மண்ணுணிப்பாம்பு’, ‘பெல்லிப்பேய்’, கிழட்டுப் பிசாசு’ என்று யாரையாவது திட்டுவதற்கு அவள் பயன்படுத்தும் உவமைப் பெயர்களுக்கு அவளைத் தவிர எந்த அகராதியிலும் கருத்துக் கண்டுபிடிக்க முடியாது. ஆரம்பகாலத்தில் ‘சுதந்திரப்பறவைகள்’ அமைப்புடன் இணைந்து வேலை செய்தபோதும், இந்திய ஆக்கிரமிப்புக் காலப்பகுதியில் வெளிவேலை செய்தபோதும், அதன்பின் இயக்கத்தில் இணைந்து பலாலி, கோட்டை, ஆனையிறவு, கட்டைக்காடு, வளலாய் என்று எதிரியுடன் பொருதிய நீண்ட களங்களிலும் துணிச்சலாக குழுத் தலைவியாக முன்னணியில் நிற்கும் சுதாக்காவுக்கு சின்னச் சின்ன விடயங்களிலும் பயம் என்றால் யாரும் நம்பமாட்டார்கள். ஒரு வியாழக்கிழமை வேலைக்காகச் சென்றுகொண்டிருந்த சுதாக்காவின் மிதிவண்டிச் சில்லுக்குள் அகப்பட்டு ஒரு கோழி இறந்துபோனது. ‘கள்ள வியாழன் கழுத்தறுக்கப் போகுது’ என்று யாரோ கூறிவிட, பயத்துடன் அதைப்பற்றியே கேட்டுக் கேட்டு ஒரு மாதம் வரை அவள் எம்மைக் கழுத்தறுத்ததை நினைத்தால் இப்பவும் சிரிப்பு வரும்.

ஒருநாள் இரவு நிகழ்ச்சி முடிந்து சுதாக்காவும் இன்னுமொரு போராளியும் மிதிவண்டியில் வந்துகொண்டிருந்தார்கள். நல்ல இருட்டு பாதையே தெரியவில்லை. சுதாக்காதான் ஓட்டுனர். புறுபுறுத்தவாறே வந்தாள். அந்த



கப்டன் சுதா

நேரம் பார்த்து பின்னாலிருந்து வந்த மிதிவண்டி ஒன்று வெளிச்சத்துடன் இவர்களைத் தாண்டிச் சென்றது. சுதாக்கா அதற்குப் பின்னால் போகத் தொடங்கினாள். அந்த மிதிவண்டி போன குச்சொழுங்கைக்குள்ளே எல்லாம் சுதாக்காவும் போனாள்.

“என்னக்கா எங்கே போறியள்?” என்று கேட்க,

“சும்மா இரடி, இருட்டுக்குள்ளே போய் அடிபடுவதை விட வெளிச்சத்துக்குப் பின்னால் போய் எங்காவது நிப்பம்” என்றாளே பார்க்கலாம்.

இரவிரவாக எங்கெல்லாமோ அலைந்து திரிந்து நள்ளிரவுக்குப் பின்னர் முகாம் திரும்பி, எல்லோரையும் அந்தச் சாமத்தில் எழுப்பி நடந்ததைச் சொல்லி சிரி சிரி என்று சிரித்து....

தாளக்கட்டுடன் மிருதங்கம் வாசிப்பதில் அவள் கெட்டிக்காரி. பாடுவதிலும் கூட. தானே பாடி தானே மிருதங்கம் வாசித்து, இரசிக்கும் படியாக எம்மை ஓரிடத்தில் அமர்த்த அவளால் முடியும். கலை பண்பாட்டுக் கழகத்தில் அவள் செயற்பட்ட காலத்தில் இந்த மாலைநேரக் கச்சேரி சுவையுள்ளதாக இருக்கும். கோண்டாவில் வீதியில் இரவில் செல்லும்போது பாடியபடியே செல்லும் அவளுக்கு புரட்சிப் பாடல்கள் எல்லாம் தெரிந்திருக்கும். அன்றும் அப்படித்தான் கச்சேரி செய்துகொண்டிருந்த சுதாக்காவிடம் மிருதங்கச் சக்கரவர்த்தி என்ற சினிமாப் படத்தில் மிருதங்கம் வாசித்து காயாக இருந்த வாழைக்குலையை பழுக்க வைக்கிறார் சிவாஜி என்ற கதையை யாரோ கூற, மிருதங்கம் வாசித்துகொண்டிருந்த அவளுக்குச் சுதி ஏறிவிட்டது. அந்த நேரம் பார்த்து முகாமின் பின்வளவில் நின்ற பலாமரத்தின் காய்கள் இரண்டு எதேச்சையாக விழ, சுதாக்கா மிருதங்கம் வாசித்துத்தான் பலாப் பழம் பழுத்து விழுந்ததாக திரிபுபடுத்தி நாங்கள் விட்ட கதை ஊரெல்லாம் திரிந்தது.

ஒரு முதிர்ச்சியான தோற்றத்தில் உலாவரும் இவள் சிறுபிள்ளைத்தனமான வேடிக்கையான செயல்களைச் செய்வாள் என்று நினைக்க முடியாதுதான். ஆனால், அது அவளது சுபாவம். யாழ்ப்பாணத்திலிருந்து ஆவரங்காலுக்கு மிதிவண்டியில் சென்றுகொண்டிருந்த சுதாக்காவுக்கு நீர்வேலியடியில் கைகள் இரண்டும் வலிக்க, இரண்டு கைகளையும் ‘கான்டிலின்’ முன்பக்கத்தில் ஒரேயடியாகத் தூக்கி வைக்க, மிதிவண்டி சமநிலையற்று ஒரு பற்றைக்குள் போய்விழ, காயங்களோடு முகாம் வந்துபோது செய்தி எமக்குப் பரவ,

“என்ன சுதாக்கா எங்க கரும்புலித் தாக்குதல்?”

என்று நாங்கள் சிரிக்க, அவளுக்கு மட்டுமே புரிந்த பாசையில் எம்மை அவள் திட்ட, சுதாக்கா இருக்கும் முகாமில் சிரிப்புக்குப் பஞ்சமேயில்லை.

சண்டைக் களங்களில் ஆசைதீர நின்று பணியாற்றினாலும் வெளிவேலைகள் செய்வதற்காக கடமையாற்றிய மூன்று வருடங்களும் அடிக்கடி சண்டை, சண்டை என்று சண்டை பிடித்து, எப்படியோ தாக்குதலணிக்குச் சென்றுவிட்டாள். களமுனையில் அவளில் குடிகொள்ளும் ‘சீரியஸ்’ அவள் வாயில் வரும் திட்டுக்களைக் கேட்பவர்களின் சிரிப்பொலியால் குழம்பிப் போக, ‘சூரியக்கதிர் –1’, ஆரம்பித்த 17–10–1995 வரை அவள் நின்ற சண்டைக் களங்கள் நீண்டன. ஆனால், குழுத்தலைவியாக,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிறந்த சண்டைக்காரியாக அவளைச் சுமந்துவர காலம் அதன் பின்னர் மறுத்துவிட்டது.

கிழவிபோல விடியக்காலத்தாலேயே புறுபுறுக்கும் சுதாக்கா, வேடிக்கைச் செயல்களால் ஒன்றிப்போன சுதாக்கா, சண்டைகளில் துணிச்சலோடு முன்னிற்கும் சுதாக்கா இனி வரமாட்டாள். மிதிவண்டியோடு கரும்புலித்தாக்குதல் நடாத்தியதாக நாம் பகிடி பண்ணும் நீர்வேலிப்பற்றையும், அவளது பாட்டுக்களை அடிக்கடி கேட்டு ரசிக்கும் கோண்டாவில் பிரதான வீதியும், இளமைக் காலத்தில் அவளைச் சுமந்த செம்பாட்டு மண்ணும், இப்போதும் அவளைத் தேடிக் கொண்டிருக்கும். அவள் இனித் திரும்பி வரமாட்டாள் என்ற உண்மையை ஏற்கமுடியாமல் எங்கள் காலம் நகரும்.

★

வசந்தி எப்போதுமே நித்திரை ராணி நம்பர்–1 என்ற இடத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டவள். நித்திரை என்றால் அப்படியொரு நித்திரை. “இவள் என்னண்டுதான் இயக்கத்துக்கு வந்தாளோ” என்று நாம் அடிக்கடி சொல்லிச் சிரிப்பதுண்டு.

ஒருமுறை வடமராட்சியிலிருந்த இவளை உடனடியாக வலிகாமத்துக்கு வருமாறு இரவு நேரம் அறிவித்தல் கிடைத்தது. வசந்தி உடனே துணைக்கு ஒரு போராளியை அழைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டாள்; நீண்ட நேரமாகியும் வசந்தி வலிகாமத்துக்கு வந்து சேரவில்லை. ஆள் வடமராட்சியை விட்டுப் புறப்பட்டும் நீண்ட நேரமாகிவிட்டது. என்ன நடந்ததோ என்று எல்லோரும் தலையைப் பிய்த்துக்கொண்டிருக்க, வசந்தி தனது மிதி வண்டியை ஒரு கரையாக நிறுத்திவிட்டு வல்லை வெளியில் படுத்து நல்ல நித்திரை. கூட வந்த போராளி இவளுக்கா விழித்தபடி. நள்ளிரவில் அவ்வீதியால் வந்த வேறு போராளிகள் இவர்களைத் தமது வாகனத்தில் ஏற்றி வந்து வலிகாமத்தில் இறக்கி விடவேண்டியதாயிற்று.



**கப்டன் வசந்தி**

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியினரின் பதினைந்தாவது பயிற்சி முகாமிலே வசந்தி தனது பயிற்சியைப் பெற்றுக்கொண்டாள். விடுதலைப் புலிகளின் துணைப்படை வீரரான தந்தை வசந்தியை போராட்டத்துடன் இணைத்த போது, அவளுக்கு வயது பதின்னான்குதான். பயிற்சி முகாமின் கலை நிகழ்வுகளில் இவள் அடிக்கடி பங்குபற்றுவாள். பயிற்சி முகாமில் இருந்து வெளியேறி ‘சூரியக்கதிர்–1’ இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றும் வரை வசந்தி எமது பிரிவொன்றின் தொலைத் தொடர்பாளராகப் பணியாற்றினாள். ஆனால், அவளது கலையார்வமோ, நித்திரைக் குணமோ எப்போதுமே மாற்றமடையவில்லை.

ஒருநாள் இரவு இவளது முகாமுக்கு அருகில் உள்ள தெருவில் கலை நிகழ்வொன்று நடைபெற்றது. ஆர்வம் மிகுதியால் ஒருவருக்குமே சொல்லாமல் நிகழ்ச்சி பார்க்கப்போய் விட்டாள். முகாமில் நின்ற வசந்தியை திடீரெனக் காணவில்லை என்று எல்லோரும் தேடிக்கொண்டிருக்க அவள் நிகழ்ச்சி முடிந்து ஆறுதலாக வந்து.... கிடைத்த தண்டனையை வழக்கம் போலவே விசுவாசமாகச் செய்தாள். முதல் ஒரு நிகழ்ச்சியைப் பார்த்தால் மறுநாள் அதை அப்படியே எல்லோருக்கும் செய்து காட்டும் திறமை அவளிடம் இருந்தது.

தனது உயிர்த் தோழியான வீரவேங்கை அனுஷா ஆனையிறவுச் சமரில் வீரச் சாவைத் தழுவியது இவள் மனதைப் பலமாக உலுப்பிவிட்டது. “ஒட்டி” என்று வசந்தியையும் “ஓரா” என்று அனுஷாவையும் கூப்பிடுமளவுக்கு பயிற்சி முகாமில் இருவரும் நல்ல ஒட்டு. இருவருமே நல்ல கறுப்பு. குழப்படி செய்தாலும் இருவரும் சேர்ந்தே செய்வார்கள். ஒட்டி, ஓரா என்ற பட்டப் பெயர்கள் கடைசி வரையில் அழியாமல் அவர்களுடன் நிலைத்துவிட்டன.

சின்னப்பிள்ளை என்றாலும் சில நேரங்களில் பெரிய மனித தோரணையுடன் நடந்து கொள்வாள். கொஞ்சச் சாப்பாடு இருந்தாலும் எல்லோருக்கும் பங்கு போட்டுக் கொடுப்பாள். ஆனால் சில சமயங்களில் குறும்புத்தனம்தான் மேலோங்கியிருக்கும். முகாமிற்கு வந்திருக்கும் பொறுப்பாளருக்கு தேனீர் தயாரிப்பதாகச் சொல்லிக் கொண்டு தயாரித்த தேனீரை தானே குடித்துவிடுவாள்.

“எனக்கு லீவு தாறதெண்டால் வீட்டை விடவேண்டாம். என்னை இரண்டு நாள் நித்திரை கொள்ளவிட்டாக் காணும்” என்பாள்.

ஆள் வலு நீற். எப்போதுமே பளிச் சென்று இருப்பாள். அவளது மிதி வண்டியும் அவள் போலவே பளீரென்று இருக்கும். தன்னைச் சண்டைக்கு விடுமாறு தொடர்ந்து நச்சரித்ததில் சூரியக்கதிர்–1 இல் பங்கெடுக்க வாய்ப்புக் கிடைத்தது.

சண்டைக்கான பயிற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டாள். ஆனால் அந்த நெருக்கடிக்குள்ளும் அவள் தனது நம்பர்–1 இடத்தை மட்டும் கைவிடவில்லை. ஒருநாள் பயிற்சி நேரத்தில் வசந்தி நல்ல நித்திரை. நித்திரைக்குத் தண்டனையாக கட்டிலின் மீது ஏறி நிற்குமாறு அவள் பணிக்கப்பட்டாள். தண்டனையை ஏற்று கட்டிலின் மேல் ஏறி நின்ற வசந்தி கொஞ்சநேரத்திலேயே நித்திரை தூங்கி விழுந்துவிட்டாள்.

தனது குறும்புத்தனத்தாலும், நித்திரைக் கணத்தாலும் எல்லோரையும் சிரிக்கவைத்த, எல்லோரிடமும் ஏச்சும் வாங்கிய எங்களின் வசந்தி 1995–10–29 அன்று சூரியக் கதிர்–1 நடவடிக்கையின் போது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டாள்.

★

மதனா அந்தப் பயிற்சி ஆசிரியர்களுள் மிகவும் சிறியவள். எந்நேரமும் கண்களில் குறும்பு வழிந்தோட கதைகள் சொல்லும் அவளது செய்கை அனைவரையும் உண்மை என்று நம்பவைக்கும்.

புதிய போராளிகளுக்கான பயிற்சி நாட்களில் முன்னணியில் எப்போதும் மதனா நிற்பாள். கூடவே பயிற்சியைக் கொடுக்கும் போதும் சிறந்த பயிற்சி ஆசிரியராக விளங்குவாள்.

வவுனியாவின் கொக்கட்டிப் புலவு


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற ஊரில் ஐந்து சகோதரர்களுடன் கூடப்பிறந்த மதனாவிற்கு சின்ன வயதிலேயே புலிமாமாக்களில் நல்ல பிரியம். மரவள்ளித் தடியை வெட்டி துப்பாக்கி செய்து கயிறு கட்டித் தோளிலே கொழுவித் திரிவாள். இந்திய இராணுவம் வைத்த நீட்டு நீட்டுத் துவக்குகளைத் தானும் வைத்திருக்க வேண்டும் என்று விரும்புவாள்.

விடுதலைக்கான போர் அவளையும் அண்ணனையும் தன்னகத்தே உள்வாங்க, குழப்படியும் குறும்பும் விவேகமும் நிறைந்த போராளியாகப் பயிற்சி ஆசிரியராக மதனா மாறிப் போனாள்.

அப்போது அவள் கனரக ஆயுதப் பயிற்சிகளை எடுத்துக் கொண்டிருந்தாள். ஆயுதம் துப்பரவு செய்வதற்குரிய துணிகள் முகாமுக்கு வந்து சேரவில்லை. துணித்தட்டுப்பாட்டை முன்னரே அறிந்திருந்த அவள் எல்



**கப்டன் மதனா**

லோரும் துப்பரவாக்கி அழுக்குத் துணிகளைச் சேகரித்து வைத்து ஒவ்வொன்றாய்ப் பொருத்தித் தைத்து வைத்திருந்தாள். எல்லோரும் தமது ஆயுதங்களைப் துப்பரவு செய்யத் துணி வேண்டும் என்று பொறுப்பாளரிடம் அடம்பிடித்தபோது தான் பொருத்தி வைத்திருந்த துணியை சிறு சிறு துண்டுகளாக வெட்டி எல்லோருக்கும் கொடுத்த போது அவளது பொறுப்புணர்ந்த இயக்கத் தேவை கருதிய செயல் எல்லார் மனதிலும் ஆழப்பதிந்தது.

வலிகாமத்தைச் சூழ்ந்த கருமேகங்களைப் புலிகள் தங்களின் உயிர்களைக் கொடுத்து விரட்டுகின்ற வேளையில் நடந்த உக்கிரமான சண்டையில் மதனாவும் நின்றாள். உரும்பிராய்ச் சண்டையில் அணித்தலைவியாக அவள் செயற்பட்டாள். எறிகணைகளை அள்ளி வீசியபடி எதிரி முன்னேற முயன்றபோதெல்லாம் சடசடத்த புலிகளது துப்பாக்கிகளுள் அவளுடையதும் ஒன்று. நிலைமையை அவதானித்து கட்டளையை பிறப்பித்தவாறு தொலைத்தொடர்புக் கருவியை அவளது கைகள் பற்றியிருக்கும்.

இடைமறித்து இடைமறித்து அரியாலை – மாம்பழம் சந்திவரை சண்டை நகர்ந்துவிட்டது. அந்தச் சண்டையின் போது சிறப்புத் தளபதியுடன் நின்ற மதனா ஒரு அணிக்கு மேலதிகப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தாள் – ஆயினும் களமுனைக்கு அனுப்பப்படவில்லை – அணிகளின் நிலைகள் பற்றிய அவதானிப்பு, தொடர்புகள், வேறுவேலைகள், இரவுக் காவலுக்கான சோதனைகளில் அவள் ஈடுபட்டிருந்தவேளை அது.

அவளுக்குப் பிரியமான நாய்க் குட்டியின் பிரிவு அவளை வாட்டியது. அதை நினைத்தவாறு அவள் உண்ண மறுத்ததும், அவளை நினைத்தவாறு அது உண்ண மறுத்ததும் அளவு கடந்த பாசத்தை எமக்கு உணர்த்தியது. அந்தக் குட்டியை பதுங்குகுழி வெட்டுவதற்காக வந்தவர்களிடம் அவள் பதுங்கிப் பதுங்கிச் சென்று களவாடினாள். மிகுந்த பிரியத்தோடு 'மாயாவி' வீரனின் நாயின் பெயரான 'டெவில்' என்ற பட்டப் பெயரை இட்டாள். வேறு பெயரிட்டு யாராவது அதைக் கூப்பிட்டால் அவளுக்குப் பிடிக்காது. சண்டை அண்மிக்கும் காலத்தில் முகாம்களிலிருந்து பொருட்களை ஏற்றும் போது அந்த நாய்க் குட்டியும் ஏனைய போராளிகளால் களத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டு பாதுகாப்பான இடம் கொண்டு செல்லப்பட்டது. மதனாவுக்குத் தெரியாமல் இது நடந்தாலும், அறிந்தபின் அவள் உணவைச் சில நாள் மறந்து போயிருந்தாள்.

சிறீலங்கா இராணுவம் யாழ். நகரப்பகுதியை அண்மித்து விட்டது. 1995–11–23 காலை வேளையில் மதனா அணிகளின் நிலையைப் பார்ப்பதற்காக அரியாலை – கண்டி வீதிக்கு அண்மையான நிலைகளுக்குச் சென்றிருந்தாள். மதியமளவில் அந்தச் செய்தி வந்தது. பெண் போராளிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையேயான நிலைகளில் தனியே அவள் துப்பாக்கியை இறுகப் பற்றியபடி உயிரை விட்டிருந்தாள் – காலில் ஏற்பட்ட சிறு காயத்தைப் பொருட்படுத்தாமல் மருத்துவப் பகுதிக்குச் செல்லாமல் அன்றைய இராணுவ நகர்வை எதிர்கொள்ளத் தயாராகத்தான் அவள் வந்திருந்தாள் – அன்றும் இராணுவத்தின் தாக்குதலும் எம்மவரின் தாக்குதலும் நடைபெற்றது.

அவளது வீட்டுக்குக் கொண்டு செல்வதற்காக வீரச்சாவடைந்த ஏனைய போராளிகளின் உடல்களுடன் அவளது உடலும் அன்றிரவு பயணித்தது.

★

இருவரும் ஒரே காலத்தில் இயக்கத்தில் இணைந்து ஒன்றாகவே கரும்புலித் தாக்குதலுக்கு விருப்பம் தெரிவித்தார்கள்.

இருவரும் சின்னவர்கள்தான். இயக்கத்தில் இணைந்த சில மாதங்களுக்குள்ளேயே கரும்புலிகளுக்கான சிறப்புப்பயிற்சி பெறப்போய்விட்டதால், இவர்களைப் பற்றி வெளியில் நின்ற போராளிகளுக்கு தெரிய வாய்ப்பில்லாது போய்விட்டது.



**கப்டன் விக்கி**

விக்கியைவிட மதனி ஆக சின்னன். மதனியை சக கரும்புலித் தோழர்கள் சின்னத்தங்கச்சி என்றுதான் கூப்பிடுவார்கள். என்ன உணவு வந்தாலும் அரைவாசியை கரும்புலிப் பயிற்சியில் ஈடுபடும் அண்ணாக்களுக்கு கொடுத்துத்தான் மதனி சாப்பிடுவாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மேஜர் மதனி**

கடற்புலிகள் மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி கல்யாணி இவர்களைப் பார்க்கவென்று போனால் மதனி ஓடி வந்து கல்யாணியின் வாகனத்திலேறி சாப்பிடுவதற்கு என்ன இருக்கின்றது என தேடி எடுத்துக் கொண்டு போய்விடுவாள். இவளுக்காகவே கல்யாணி தின்பண்டங்களை வாங்கி வாகனத்தில் வைப்பதுண்டு.

விக்கி இவளுக்கு நேர்மாறு. இலகுவில் ஒருவருடனும் பழகிவிடமாட்டாள். அமைதியாகத் தன்னுடைய வேலைகளில் ஈடுபடுவாள். ஆனால் அவள் கெட்டிக்காரி.

கரும்புலித் தக்குதலுக்கான பயிற்சியின் போது, ஒருநாள் விக்கி தனக்குரிய வெடி பொருட்களோடு நீருக்கு அடியால் நீந்தி வந்தாள். குறிப்பிட்ட தூரத்திற்கு அப்பால் பயிற்சியைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த கடற்புலிகள் மகளிர் படையணித் தளபதியின் படகு நின்றிருந்தது. விக்கி அந்தப் படகை நீருக்கு அடியால் வந்தடைய வேண்டும். தளபதி கடலையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். எங்கேனும் விக்கியின் அசைவு தெரிகிறதா என்று. ஆனால் படகுக்கு மிக அண்மையில் வந்த விக்கி நீருக்குள்ளிருந்து திடீரென தலையை வெளி நீட்டும் வரை அவள் வந்ததே தெரியவில்லை. தளபதியின் சிறப்பான பாராட்டுக்களைப் பெற்ற அவள், "அக்கா நான் வந்தது தெரிஞ்சதோ? நீங்கள் கண்டனீங்களோ? இல்லைதானே?"

என்று திரும்பத் திரும்பக் கேட்டு தன் திறமையை உறுதிப்படுத்திக் கொண்டாள்.

மதனியை விட அவள் தலைநகரத் துறைமுகத் தாக்குதலுக்கு கொண்டு சென்ற குண்டு பெரிது. அந்தக் குண்டுடன்தான் பயிற்சிகளிலும் ஈடுபட்டாள். நீரடி நீச்சல் பயிற்சி முடிந்து படகில் ஏறும்போது, மதனி கால் எட்டாமல் சிரமப்பட தளபதி அவளைத் தூக்கிவிட முனைந்தார்.

"விடுங்கோ நான் ஏறுவேன். இதை விடப் பெரிய சாதனையெல்லாம் செய்யப் போறன். இதிலை ஏறுவதற்கு என்ன" என்று சிரித்தவாறே அவள் ஏறிவிட்டாள்.

விக்கி, மதனி இருவருமே கனரக ஆயுதப் பயிற்சியை எடுத்திருந்தாலும் அதற்கான வாய்ப்பு விக்கிக்குத்தான் கிடைத்தது.

*1996–4–12* அதிகாலை கொழும்புத் துறைமுகத்துள் இரும்பு மனிதர்கள் ஊடுருவினர். மதனியும் இன்னும் சில கரும்புலிகளும் தமக்குரிய இலக்குகளான அங்கு தரித்து நின்ற கம்பல்களில் வெடி மருந்தைப் பொருத்தி வெடிக்க வைத்தனர். விக்கியும் மற்றைய கரும்புலிகளும் தமது கனரக ஆயுதங்களால் கொழும்புத் துறைமுகக் கட்டிடங்களை சேதப்படுத்தினர். இறுதியில் தம்மையும் அழித்துக் கொண்டனர். எதிரிக்குப் பலத்த பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தியதும், தலைநகரின் மீதான முதல் கடற் தாக்குதலுமான இத் தாக்குதலின் மூலம் உலகத்தின் கவனத்தை ஒரு நிமிடம் தமிழீழத்தின் பால் திருப்பிய அந்த வேங்கைகள் எங்கள் எல்லைக்கும் அப்பால் கடலோடு கலந்துபோயினர்.

★

அவள் இருக்கும் இடம் எப்போதுமே கலகலப்பானது. தனது சோகங்களை எல்லாம் மனதில் ஆழத்துக்குள் அமுக்கி மேலுக்கு சிரிப்புடன் அவள் விடும் பகிடிகள் எல்லோரையும் சிரிக்கவைக்கும். ஆனால், எங்களை எந்நேரமும் சிரிக்கவைத்த மாதுரியின் கண்களில் குடிகொண்டிருந்த அந்த 'சீரியஸ்னஸ்' மட்டும் கடைசி வரையில் அகலவில்லை.

அவளுடன் நெருங்கிப் பழகாத, அவளை அறியாத யாருக்கும் அவளின் ஐந்தடி எட்டங்குலம் உயரமும், அந்த முழிக் கண்களும் பயப் பிராந்தியைத் தான் உண்டுபண்ணும். பழகியவர்களுக்கு அவள் தேன். அவளுக்கு 'ராணி கொமிக்ஸில்' வரும் மாயாவி பாத்திரத்தில் நல்ல விருப்பம். மாயாவியின் கதைகளை விழுந்து விழுந்து வாசிப்பாள், "நான்தான் மாயாவி" என்று சொல்லிக்கொண்டு பாய்ந்து திரிவாள். தெருவில் அனாதரவாகக் கிடந்த நாய் ஒன்றைப் பிடித்து அதன் கழுத்திலே கயிற்றைக் கட்டி "இது தான் டெவில்" என்று இழுத்துக் கொண்டு திரிவாள். எங்களின் கேலிகளைப் பொருட்படுத்தவே மாட்டாள். இந்தச் சம்பவத்தின் பின் இவளையும் அந்த நாயையும் மாயாவியும் டெவிலும் என்றே அழைக்கத் தொடங்கி விட்டோம்.

மாதுரி எப்படிப்பட்டவள் என்று யாராலுமே இனம்காண முடியாத அளவுக்கு அவள் வித்தியாசமானவள். எல்லோரும் சீரியஸாக இருந்தால் தான் அவள் சிரிப்பாள். எல்லோரும் சிரிக்கும் போது அவள் சீரியஸாக இருப்பாள். தனக்குக் கவலை வந்தால் அவள் தனியாகப் போய் இருப்பாள். கவலைகளை, சிறிய வயது சோகங்களை யாரிடமுமே அவள் பகிர்ந்து கொள்ள விரும்புவதில்லை.

சிறு வயதில் பிரிந்து போனதால் முகமே மறந்துபோன தந்தையை, குடும்பத் தலைவனின்றி மூன்று பிள்ளைகளையும் தனித்து வளர்த்து,



**மேஜர் மாதுரி**

பிள்ளைகளைப் போலவே புலிகள் இயக்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களையும் ஆதரித்ததால் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தாயை தன்னைத் தொடர்ந்து இயக்கத்தில் இணைத்துக்கொண்ட ஒரே தங்கையை, தாய் கொல்லப்பட்ட பின்னர், தங்கை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களின் வாழ்வுக்காய், தன் படிப்பை இடைநிறுத்தி, உடலை வருத்தி உழைத்து 1990ல் தங்கைகள் இருவரும் இயக்கத்துக்குப் போக அவர்களைத் தொடர்ந்து தன்னையும் இணைத்துக்கொண்ட தமையனை, எல்லோரையும் விட்டு வீட்டில் தனித்திருக்கும் அம்மம்மாவை அடிக்கடி தன் மனத்திரையில் மீட்டுப் பார்த்துக்கொள்வாள். வெளியே சொல்லமாட்டாள்.

1994ல் இவளின் தங்கை கப்டன் சாமந்தி கடல் விபத்தொன்றில் சாவைத் தழுவியது இவளை உலுப்பிவிட்டது. எப்போதுமே தன்னைக் கல்லாக்கிக் கொள்ளும் மாதுரி, அப்போது மட்டும் உடைந்துபோய் தன் அண்ணனிடம் அழுதாள். மீண்டும் பாறையாய் இறுகிவிட்டாள். அதற்குப் பின்னர் அவள் ஒருபோதுமே இதுபோல் அழுதது கிடையாது. மாதுரிக்குள் இத்தனை சோகமுண்டு என்று நாம் சொன்னாலும் யாருமே நம்பமுடியாத அளவுக்கு அவள் ஒரு கைதேர்ந்த நடிகையாக நடந்துகொண்டாள்.

நடனம், நடிப்பு எல்லாமே அவளின் இயல்புடன் ஊறியவை. விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் தயாரிப்புகளான 'கொடியோரின் கொடுமை' நாட்டிய நாடகத்தில் சிறீலங்கா இராணுவத்தினனாகவும் 'தீக்குளிக்கோம் தியிட்டெரிப்போம்' நாடகத்தில் ஆணாதிக்கம் மேலோங்கிய சமூகப் பிரதிநிதியாகவும் முத்தமிழ் விழா மேடையிலே, 1991லே மாதுரி தோன்றினாள். அந்த நாடகத்தில் அடிக்கடி இவள் நின்றபடியே காலை உதறி உதறி ஆட்டுவாள். முத்தமிழ் விழா முடிந்த பின்னர் நாடகம் பார்த்த இளைஞர்கள் அவள் போலவே தம் கால்களை உதறி உதறி ஆட்டியவாறு திரிந்ததில் அவளது நடிப்பின் வெற்றி தெரிந்தது.

எல்லோரும் ஒன்றாக இருந்து சாப்பிடும் சமயங்களில் உணவில் மொய்க்கும் ஈக்களை கலைப்பது போன்ற பாவனையில் கையை வீசி வீசி 'சூய் சூய்' என்பாள். அவளுக்கு முன்னால் இருந்து சாப்பிடுபவர் கொஞ்சம் அசந்தால் போதும், அவரது தட்டில் இருந்த முட்டை ஏதேனும் பொரியல் போன்றவை மாதிரியின் கைவீச்சுடன் காணாமல் போயிருக்கும். என்ன நடந்தது என்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்க்க முன்னர் கைப்பற்றிய உணவை தன் வாயில் ஒருவாறு அடைத்து விழுங்கிவிட்டு எம்மைப் பார்த்து ஒரு மாதிரியாகச் சிரிப்பாள். சிரிப்பாள் என்பதை விட இளிப்பாள் என்பது தான் சரி. தன் தட்டில் இருப்பதைச் சாப்பிடும் பழக்கம் மாதுரியிடம் ஒரு காலமும் இருந்தது கிடையாது.

இயக்கத்தில் அவள் எந்த வேலையையும் செய்யக்கூடிய போராளியாகத் தன்னை வளர்த்திருந்தாள். அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியில் படித்து முடித்த பின் குறிப்பிட்ட காலம் கனரக ஆயுதப் பிரிவின் பயிற்சி ஆசிரியராக இருந்தாள். 1991ல் மணலாறு "மின்னல்", 1992ல் தொண்டைமானாறிலிருந்து ஒட்டகப்புலம் வரையிலான 150 காவலரண்களை தாக்கியழித்த தாக்குதல், 1993ல் பூநகரி மீதான 'தவளைத் தாக்குதல்' அதே ஆண்டில் மணலாறில் உள்ள 5 இராணுவ முகாங்கள் மீதான தாக்குதல் என்பனவற்றில் தன் சிறப்பான முத்திரைகளைப் பதித்தாள். சண்டை என்றாலும் அவள் நிற்குமிடத்தில் சிரிப்புக்குப் பஞ்சமிராது.

1996–4–19 அன்று பிற்பகல் 'சூரியக்கதிர்–2' இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி சண்டை நடந்துகொண்டிருந்தது. தனது எல்.எம்.ஜியுடன் எதிரியை எதிர்பார்த்து தன் நிலையில் காத்திருந்த மாதுரி "சண்டையில மாயாவி விழுந்திடும்; டெவிலைக் கூப்பிட்டு எல்.எம்.ஜியில விடுங்கோ" என்ற அருகில் இருந்தவளிடம் சிரிக்காமல் கூறினாலும் கேட்டுக்கொண்டிருந்தவளுக்கு சிரிப்பு வந்துவிட்டது. மாதுரியின் எல்.எம்.ஜி அடியுடன் சண்டை தீவிரமாக நடந்துகொண்டிருந்த பொழுது எதிரியின் ரவை அவளின் மார்பை துளைத்துச் சென்றதில், அந்த இடத்திலேயே அந்தக் கல்நெஞ்சக்காரியின் மூச்சு அடங்கியது.

"நான் செத்துப் போனா எப்படியாவது என்ர பொடியை எடுத்துக் கொண்டு போய் அண்ணனுக்குக் காட்டுங்கோ. கடைசி நேரத்தில கூட என்னைப் பார்க்காட்டா அவர் மன வேதனைப் படுவார்"

என்று மாதுரி சொன்னாளாம். மாதுரியைத் தூக்கி வந்தவள் சொல்லிவிட்டு அழுதாள். என்நேரமும் எங்களைச் சிரிக்க வைத்தவள்தான் இப்படி அழவைத்துவிட்டு போனாள் என்பதை எங்களால் இன்னமும்.....

பாக்கியமக்காவையும் அவள் பெற்ற இரண்டு பெண் பிள்ளைகளையும் நினைக்கும் பொழுதுகளில் நெஞ்சம் சிலிர்ப்பதென்னவோ உண்மைதான்.

★★★



விடுதலையின் வழிதேடி
விளக்கேற்றி நடந்தோம்
சுடரெரியும் போதினிலே
சுழன்றடித்த சூறாவளி
சோதனைகள் தந்தது
சுதந்தத்தைக் கொன்றது
உயர் தலைவர் — எங்களின்
மாமாவின் வழியினிலே

பகை முடிக்க எழுந்து — எம்
படையணி நகர்ந்தது
பயந்தது சுழிக்காற்று — பகை
ஒழிந்தது நிலைபார்த்து
தழுவியே தென்றல் ஒன்று
இதயமாய் வீசியது
தாயகம் வந்துவிடும்
தமிழ் வெல்லும் என்றது.

செஞ்சோலைக் பிள்ளைகளால் வரைந்து அனுப்பப்பட்ட ஓவியமும் கவிதையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாம்புச் செட்டைகள்



எனக்கு பாம்புகளைப் பிடிப்பதில்லை. அவை மனிதர்களைக் கொல்லுகின்றன. ஆனாலும் அவை பரிதாபமான உயிர்கள் என நான் உணர்ந்திருக்கிறேன். அவற்றின் தலை, அதில் ஒளி வீசிக்கொண்டிருக்கும் கண்கள், அதன் செதில் செதில்களாக போர்த்தப்பட்டிருக்கும் உடம்பு எல்லாமே எனக்கு அவை மீது ஒருவித வெறுப்பைத் தந்து கொண்டிருந்தது. ஆனாலும் நான் பாம்புகளைக் கொல்வதில்லை. எனக்கு இப்போதும் ஞாபகமாய் பதிந்திருக்கிற இரண்டு பாம்புகளை நீங்களும் எங்கேனும் பார்த்திருப்பீர்கள். அவை சாரைப் பாம்புகள்.

அந்த இரண்டு பாம்புகளையும் அவற்றின் கட்டிளம் வயதிலிருந்தே நானறிவேன். அவற்றிற்கு என்னைத் தெரிந்திருக்கும் அறிவிருக்குமோ எனக்குத் தெரியாது. எது எப்படியோ அவைகள் பலதடவை என்னை ஏமாற்றி இருக்கின்றன. என்னை மட்டுமென்ன அம்மாகூடப் பலதடவை ஏமாந்து போய் இருக்கிறார். அந்த இரண்டு பாம்புகளையும் தொடர்ந்து அவதானித்து வந்திருந்தால் நீங்கள் கூட ஏமாந்து போயிருக்கக்கூடும்.

அந்த பாம்புகள் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து முற்றி முறுகி ஒன்றாகிக் களித்திருக்கின்ற வேளைகளில் நான் அவற்றை ஒட்டி நின்று பார்த்திருக்கிறேன். ஒரு சின்னப் பிள்ளையைப் போல முற்றி முறுகி துள்ளியெழுந்து இரண்டு தலைகளையும் வெவ்வேறாக்கி சிறிப்பாய்ந்து செல்லமாய்க் கொஞ்சி மகிழ்ந்திருந்த அந்த வேளைகளில் என் அம்மா சிவப்புப் பட்டுப் போட்டு கும்பிட்டிருக்கிறார், வேண்டுவதெல்லாம் கிடைக்குமென்று.

அந்த அழகற்ற சாரைப் பாம்புகள் எனது வீட்டிற்கு பின் புறமாகவே குடியிருந்தன; எங்கள் மனங்களைப் போல குப்பைகளால் நிறைந்திருந்த என் வீட்டுப் பின் வளவுத் துரவுப் பள்ளத்தில், அந்த குப்பைப் பள்ளத்தின் மேற்புறத்தில் தென்னம்மட்டைகளும் ஓலைகளுமாய் நிழலூட்டின. அவைக்கு வேண்டிய உணவுக்கும் பஞ்சம் ஒருபோதும் வந்திருக்காது. அந்தப் பள்ளத்தின் குப்பை நிழலிலேயே நிறைய எலி வளைகள் இருந்தமையால் அவை பட்டினி கிடந்திருக்குமென நான் உணரவில்லை. அதை விடவும் சிலவேளைகளில் அவை எனது வீட்டுக் கூரையில் குடியிருந்த எலிகளை வேட்டையாடவும் வந்து போய்க்கொண்டிருந்தபடியால் அவை கொளுகொளுவென்று கொளுத்து வளர்ந்து கொண்டேயிருந்தன. நான் முதன்முதலில் அவற்றைப் பார்த்ததை விடவும் ஒரு வாரத்தில் அவை இரண்டு மடங்காக பெரிதாக வளர்ந்து கொளுத்திருந்தன.

உங்களுக்கு பாம்புகளின் வளர்ச்சியைப்பற்றி ஏதாவது தெரியுமா? அவை குட்டியாக இருந்து பெருத்து வளரும் காலம் வரை அவற்றிற்கு என்ன நடக்கிறது என நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? என்னை அந்தப் பாம்புகள் ஏமாற்றிய அந்தநாளிலிருந்து நான் அவற்றை உன்னிப்பாக அவதானித்து வருகிறேன்.

நான் ஒரு நாள் அவற்றிடம் ஏமாந்து போனேன். வகுப்பு முடிந்து வீடு வந்து உடுப்பு மாற்ற எனது அறைக்குள் சென்ற நான் திடுக்கிட்டுப் போனேன்.

"பாம்பு–பாம்பு" எனக் கத்தியபடி அறைக்குள்ளால் பாய்ந்தடித்து ஓடி வர என் அண்ணனின் பிள்ளைகளோ கைகட்டிச் சிரித்தபடி நாலாபுறமும் ஓடியாடிக் கொண்டிருந்தார்கள். எனக்கோ எரிச்சலாய்ப் போய் இளையவளின் முதுகுசட்டையைப் பிடித்து உலுப்ப "சித்தா அது பஞ்சடைச்ச பாம்புச் செட்டை" என்றபடி பல்லெல்லாம் தெரிய பளீரெனச் சிரித்தாள். அசடு வழிந்தபடி அறைக்குள் புகுந்து கட்டில்காலுடன் தலையைப் பிடித்திமுத்தேன். நம்பமுடியாதபடியான அசல் பம்பாய் அது வளைந்து நெளிந்து நீண்டு வந்தது. திடுக்குற்றுப் போனேன்; என் பின்வளவுப் பாம்புகளின் சாயலாய் அதிருந்தது. அதன் தலை, கண்கள், உடம்பின் செதில் செதிலான தோலமைப்பு எல்லாமே என் நட்புப் பாம்புகளைப் போலவேயிருந்தன.

"பாம்புகள் வளர வளர செட்டை கழற்றும்" இது அம்மா.

"நான் உப்பிடி எத்தினை பாம்புகள் செய்தனான்" அண்ணாவின் மூத்த புத்திரன் என்னை ஏமாற்றிய பெருமையில் வாயடித்தான். ஆனால் நானோ எனக்குள் எழுந்த வினாக்களில் மனம் புதைய எங்கோ தொலையத் தொடங்கினேன். பாம்புகள் ஏன் செட்டை கழற்றுகின்றன? பாம்புகள் எத்தனை தோல்களால் போர்த்தப்பட்டிருக்கும். அடிக்கடி செட்டைசெட்டையாய் களற்றுவதற்கு?

அவள் அழகி, அவளை எல்லோருக்கும் பிடிக்கிறது. அவளுக்கு எல்லோரையும் பிடிக்கிறது. எனக்கும் அவளைப் பிடித்திருக்கிறது. அதை விட மேலாகச் சொன்னால் அவள் என்னைப் பிடித்திருக்கிறாள். எனக்குள் புகுந்திருக்கிறாள். நீங்கள் எண்ணுவதைப் போல எனக்கும் அவளுக்கும் காதல் இல்லை. காமமுமில்லை. நட்பு? அதுவுமில்லை. அப்ப உனக்கும் அவளுக்கும் என்ன மண்ணாங்கட்டியா? என நீங்கள் கேட்பதாய் நான் உணர்கிறேன். எனக்கும் சொல்லமுடியவில்லை. அது எதுவானாலும் தான் உங்களுக்கென்ன? ஏதோ ஒன்று.

கி. சிவஞானம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மறக்க, மறுக்க, மறைக்க முடியாத ஒரு ஈர்ப்பு; அவ்வளவுதான்!

அவள் அழகியென்றா சொன்னேன். என்னைப் பொறுத்தவரை அவள் பேரழகி. நீண்ட விழிகள், சிவந்த நிறம், ஒல்லி இடை, அளவான மார்புகள், கருங்கூந்தல் எதுவும் அவளுக்கு இல்லை. அளவான முடி, சற்று கறுப்புக் கலந்த பொது நிறம். மேல்வாயில் ஒரு பல்லுத்தெத்தி, குண்டான உடம்பு என அவள் இருந்தாள். ஆனாலும் அவள் எல்லோருக்கும் அழகாகத் தெரிகிறாள். உண்மையில் அவள் அழகாகச் சிரிக்கிறாள், அழகாகக் கதைக்கிறாள், அன்பாக அளவோடு பழகுகிறாள், அவள் கூலிக்காக வரவேற்கும் வரவேற்புப் பெண்ணைப் போலல்லாது இயல்பாக, எளிமையாக நேர்மையோடு பழகுகிறாள். நான் எனது காலத்தில் சந்தித்தவர்களில் அவள் மட்டும்தான் அப்படி. அவளுக்கு இலகுவில் கண்ணீர் வந்து விடுவதில்லை. அவளுடைய முகம் அவள் துன்பத்தில் அழுவதையும் இன்பத்தில் மகிழ்வதையும் துல்லியமாக எடுத்துக் காட்டும். அவள் பிழையான ஒன்றிற்காய் தனக்குத் தெரியாத ஒன்றிற்காய் வாதிட்டதில்லை.

"உனக்கு மனிதனின் வளர்ச்சி பற்றி என்ன தெரியும்?" என்றொரு நாள் கேட்டாள். எனக்கு சிரிப்பு வந்தது. மருத்துவத் தாதியாக வேலை செய்ய நான் பெற்ற பயிற்சியில் இவை எனக்குக் கற்பிக்கப்பட்டிருக்கும் என அவள் அறியாளோ என நான் நினைத்தேன். மிக இலகுவாய், "குழந்தையின் உடல் நிறை இரண்டு இரண்டு மடங்காக முதல் 10 வயது வரை அதிகரிக்கும். பின்னர் சீரான வளர்ச்சி 25 வயது வரை நிகழலாம். அதன் பின் உடல் வளர்வதில்லை" என சடக்கென்று சிந்திக்காமல் சொன்னேன்.

www.tamilarangam.net

"அது மட்டுமா?" என்று அவள் கேட்டாள்.

"இல்லை"

"குழந்தையின் மூளை, மன வளர்ச்சி என்பன அதன் முதல் ஐந்து வருடங்களில் மிக மிக அதிகமாகவும் அதன் பின்பு ஓரளவே வளர்ச்சியிருக்கும். அதுவும் பதினெட்டு வயது வரை தான்" என்று துடுக்காகச் சொன்னேன்.

"நீ சரியாகத் தான் பாடமாக்கியிருக்கிறாய்", என்றாள் சற்று நக்கலாக. எனக்கு எரிச்சல் வந்தது. என்னுடைய ஈகோவில் (ஆளுமையில்) அவள் கை வைப்பதாய்ப் படவே நான் "சரி, சரி நீ சொல்லு பார்க்கலாம்" என்றேன். "நீ முதல் சொன்னது சரி. பிற்பாடு பிழை" என்றாள். நான் விழித்தேன்.

"விளங்கவில்லையா?" என மீண்டும் குத்தலாய்க் கேட்டாள். "எங்கள் மனம் வளர்வதேயில்லை என்றா சொல்கிறாய்?" என்றவள் விழிகளை ஊடுருவி நின்றேன். அவளை மடக்கி விட்ட எண்ணத்தில்.

"இல்லை, இல்லவேயில்லை நான் அப்படிச் சொல்லவில்லை" என்றவள் தொடர்ந்தாள். "எங்கள் மனவளர்ச்சி தீர்மானிக்கப்பட்ட பாதைகளினூடு நெருக்கித் தள்ளப்படுவதாய் நீ உணர்வதேயில்லையா?" நீண்ட சுவாசமொன்றை உள்ளெடுத்து ஆழமாய் சுவாசித்தேன்.

"நீ எப்போதாவது இலகுவாய் இருந்திருக்கிறாயா? உன் அடி மனதிலிருந்து நீ சிரித்திருக்கிறாயா? உன் வட்டங்களுக்கப்பால் நீ மனிதர்களை மனிதர்களாய் மதித்திருக்கிறாயா?" அவள் கேட்க கேட்க எனக்கு பிரபஞ்சத்தில் பிரளயம் ஒன்று நிகழ்வதைப் போல் மண்டை கிறுகிறுத்தது. என் முகத்தில் முள்ளாரம் கொண்டு இராவியதாய் மனம் எரிந்தது. மௌனமாய் நிமிர்ந்து அவளைப் பார்த்தேன். இயல்பாய், வெள்ளையாய், தாமரைப் பூப்போல் சிரித்தபடி கேட்டாள். "நீ ஏன் பாரம் சுமக்க வேண்டும். நீயாகச் சுமக்கின்றதும், உன்மேல் சுமத்தப்பட்டதுமான இந்தப் பாரங்களை எல்லாம் எப்போது இறக்கப்போகிறாய்?" என்றாள் அவள்.

"நான், எனது வீடு, எனது குடும்பம், குடும்பப் பெருமை, எனது படிப்பு, எனது கடவுள் இவையே எனது உயிர்க்குறியீடுகள். அவை எனக்கானவை" என்றேன் நான், சற்று வெட்கத்துடன்.

அவள் சற்று ஆத்திரத்துடன் "இவை உனது செட்டைகள், உன் வளர்ச்சியை, பிரபஞ்ச வெளியில் உன் உயிர்ப்பைத் தடுக்க உன்னைப் போர்த்தியுள்ள பாம்புச் செட்டைகள் என்றாள் அவள்.

★★★

"சித்தப்பா, சித்தப்பா என்றபடி வந்து என்னைச் சூழ்ந்த சிறுசுகள் சத்தத்தில் மனம் மீண்டும் இருப்பை நாடி வர நான் அவர்களைப் பார்த்தேன். ஒவ்வொருவர் கைகளிலும் பாம்புச் செட்டைகள். தலைக்கு சணல் கயிற்றில் சுருக்குத்தடம் போட்டு காற்றில்பறக்க விட்டபடி கா.... கூ... என்று கத்தியபடி ஒன்றையொன்று வெருட்டி விளையாடிக்கொண்டு நின்றனர்.

அவளுடன் மனம் விட்டுக் கதைத்த அந்த நாள் உண்மையில் எனக்கு எத்தனை துயரமானது. என்னில் உண்மை அன்பு வைத்து உயிராய் நேசித்த என்னவளை நான் பிரிந்த நாள். எனது கொள்கைகள், எனது போக்குகள், எனது பிடிவாதங்கள், எனது எதிர்பார்ப்புக்கள் எவற்றிக்கும் பொருந்த வில்லையென நான் எனது காதலியைப் பிரிந்த அன்று தான் அவளைச் சந்தித்தேன். அன்று அவள் அடித்துக் கூறினாள், "நீ இன்னமும் உன்னைப் போத்திய பாம்புச் செட்டைகளுடன் தான் வாழ்கிறாய் என்று'' உண்மையில் பாம்புகள் வளரும் பொழுது செட்டைகளைக் கழற்றுகின்றன. ஆனால் மனிதர்கள் வளரும் போது ஒன்றன் மேலொன்றாய் மேலும் மேலும் செட்டைகளே உலகமாய்.........

நன்றி: 'வெளிச்சம்'

# எனது வீடு

அவர்கள் சொன்னார்கள்
இந்த வீடு
எனக்குச் சொந்தமில்லை யென.
வெறுப்பு வழியும் பார்வையால்,
வீசியெறிந்த சொல்
நெருப்பினால்
பலமுறை சொல்லினர்
இந்த வீடு
எனக்குச் சொந்தமில்லை யென.

நானும் உணர்கிறேன்
இப்போது,
இது என்னுடைய தில்லை யென;
நாளை எனக்கு ஒன்றுமில்லை,
இன்றும் நிச்சயமற்றது.
எனது வீட்டுக்குச்
செல்லவேண்டும்.
நான் போவேன்!

அ. யேசுராசா
'மரணத்துள் வாழ்வோம்'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




04-08-1996 அன்று சுவிசில் நடைபெற்ற மாவீரர் நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் போது...



10-08-1996 அன்று சுவிஸ் - சுக் மாநிலத்தில், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடாத்திய மெய்வல்லுனர் போட்டியின்போது மாணவர்களின் அணிவகுப்பு






நோர்வே - ஒஸ்லோவில், 03-08-1996 அன்று நடைபெற்ற 'சுதந்திரதாகம்' எழுச்சி நிகழ்வில் இடம்பெற்ற சில காட்சிகள்

சிறீலங்காவில் இடம்பெறும் தமிழினப் படுகொலைச் சம்பவங்களைக் கண்டித்து, 22-08-96 அன்று கோலாலம்பூரில் நடைபெற்ற ஒன்றுகூடலில், மலேசிய மனித உரிமைக் கழக தமிழர் ஆதரவு மையம், மற்றும் அமைதி ஆதரவு மையம் ஆகியவற்றின் 'ஆட்சேப மனு' வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் 25க்கு மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் பங்கெடுத்துக்கொண்டிருந்தன.






www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்